
# பெண்

தொகுதி : 22



"தூக்கியெறியப்பட முடியாத கேள்வியாய்
உங்கள் முன் பிரசன்னமாயுள்ளேன்"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெண்

தொகுதி : 22

2017

சூரியா பெண்கள் அபிவிருத்தி நிலையம்
மட்டக்களப்பு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெண்

**சூரியா பெண்கள் அபிவிருத்தி நிலையத்தின் சஞ்சிகை**

இல. 55.
லேடி மன்னிங் டிறைவ்.
மட்டக்களப்பு.

**T.P No.: 065-2223297**
**Fax No.: 065-2224657**
**e-mail : suriyaw@slt.lk**

## THE WOMAN

**A Journal Published by**
**Suriya Women's Development Centre,**

ஆசிரியை:
*கலாநிதி. ம.நதிரா*

முன் பின் அட்டை ஓவியங்கள்:
*க. ரிஹுஜா*

கணினி வடிவமைப்பு:
*த. சங்கர்*


அச்சகம்:
*வணசிங்கா அச்சகம்,*
*496A, திருமலை வீதி,*
*மட்டக்களப்பு.*

விலை : *100/-*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாசகர்களுடன்...



பெண் சஞ்சிகையின் இவ்வருடத்திற்கான இதழ் வெளிவருவதில் மகிழ்ச்சியடைகின்றோம். பெண்நிலை நின்ற மாற்றுக்கருத்தியலைக் கருத்திற் கொண்டு வெளிவருகின்ற சஞ்சிகையாதலால் பெண்கள் குறித்து இலக்கியம் முதல் பல்வேறு தளங்களிலும் இடம்பெறும் கருத்தாடல்களுக்கு இவ்விதழில் முக்கியத்துவம் கொடுக்கப்படுகின்றது. அவ்வகையிலான ஆக்க இலக்கியப் படைப்புக்களையும் ஆய்வுகளையும் "பெண்" உள்ளடக்கமாக கொண்டு வெளிவருகின்றாள்.

உலகளாவிய ரீதியில் பெண் சமத்துவம், பெண்களுரிமை பற்றிய கருத்தியல் ரீதியான விழிப்புணர்வுகளும் செயல்வாதங்களும் தொடர்ச்சியாக நடைபெற்றுக்கொண்டிருந்தாலும் பெண்களுக்கெதிரான வன்முறைகள் பல தளங்களில் வெவ்வேறு வடிவங்களில் இடம்பெற்ற வண்ணமேயுள்ளன. ஆதலால் இவ்விதழ் பெண்களுக்கெதிரான வன்முறைகள், இதனால் ஏற்படும் உளவியல் தாக்கங்கள், பெண்கள் எதிர்கொள்ளும் சவால்கள் மற்றும் பெண் தலைமைத்துவக் குடும்பங்கள் எதிர்க்கொள்ளும் சமூகரீதியான பிரச்சினைகள் என்பன தொடர்பான விடயங்களுக்கு முக்கியத்துவம் கொடுத்து ஆராய்கின்றது. பெண்களுக்கெதிரான வன்முறைச் சம்பவங்களைப் புறந்தள்ளாது அவையும் சமூகப் பிரச்சினைகளே என்ற மனப்பாங்கோடு வன்முறையற்ற சமூகத்தை உருவாக்க ஒவ்வொருவரும் முன்வர வேண்டும்.

பெண்களை எழுத்துத் தளத்திற்குக் கொண்டு வருவதும் பெண்ணெழுத்தாளர்களை ஊக்குவிப்பதும் எமது நோக்கமாதலால் இவ்விதழும் புதிய இளம் பெண்ணெழுத்தாளர்களுக்குக் களம் அமைத்துக் கொடுத்துள்ளது.

உங்களிடமிருந்து இவ்விதழ் தொடர்பான ஆக்கபூர்வமான கருத்துக்களையும் காத்திரமான விமர்சனங்களையும் ஆவலுடன் எதிர்ப்பார்க்கின்றோம்.

**- ஆசிரியை**

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# உள்ளே...


✲ படுவான் புலமும் பெண்...
✲ என் தேசத்து தோழியரே
✲ பிரதிஷ்டை
✲ விலங்கு வித்தைக்காரன்
✲ தாலியின் சரித்திரம்
✲ நெடுநாட்களுக்குப்பின்னும்...
✲ பெண் தலைமைத்துவக்குடும்பங்கள்...
✲ தாய்மை? கெட்ட தாய்மை?
✲ விழித்திடு பெண்ணே!
✲ அறியப்படாத மலையக....
✲ பெண் என்னும் சுமைதாங்கி
✲ மாற்றம்
✲ முகநூல் பாவனையால் பெண்கள்...
✲ மலையகத் தேயிலைத்தோட்ட...
✲ நுண்கடன்களால் பெண்கள்....
✲ தனித்து வாழும் பெண்களும்...
✲ அவள்
✲ பெண் விமர்சனம்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# படுவான் புலமும்
# பெண் குழந்தைகளின் கல்வியும்

திருமதி வினோத் பிரசாத்



**நாம்** இப்பொழுது அறிவுப் பொருளாதாரத்தை நோக்கி நகர்ந்து கொண்டிருக்கும் காலகட்டத்தில் வாழ்ந்து கொண்டிருக்கின்றோம். நாம் வாழும் பூமியானது கோளமயமாக்கத்துக்குட்பட்டு கிராமமாகச் சுருங்கிக் கொண்டு வருகின்றது. நவீன விஞ்ஞான தொழிநுட்ப வளர்ச்சிகள் ஏற்பட்டுக்கொண்டு வருகின்றது.

கல்வியில் சரிநிகர், சமத்துவம், யாவருக்கும் கல்வி எனும் சித்தாந்தங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டுக்கொண்டு வருகின்றது. இவ்வாறு எவ்வளவு தான் கல்விக்கான வாய்ப்புக்கள் அதிகரித்துக் கொண்டு செல்கின்ற போதும் கல்வியில் முன்னேற்றம் காணாத சில பிரதேசங்களும் இருக்கத்தான் செய்கின்றன. அந்த வகையில் குன்றிய பொருளாதார வளமானது அனைத்து விதமான பின்னடைவு களுக்கும் காரணமாக அமைவதுடன் குறிப்பாகப் பின்தங்கிய பிரதேசங்களில் வாழும் பெண்குழந்தைகளின் கல்வியில் பாரிய பின்னடைவுகளை ஏற்படுத்துவதை காணக்கூடியதாக உள்ளது. மட்டக்களப்பு வாவிக்கு மேற்கே படுவான்புலம் என அழைக்கப்படும் பரந்த நிலப்பகுதியைக் கொண்ட பிரதேசம் காணப்படுகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பிரதேசமானது பல பின்தங்கிய கிராமங்களை உள்ளடக்கியதாகக் காணப்படுகின்றது. இப்பிரதேசமானது கடந்த காலங்களில் இடம்பெற்ற உள்நாட்டு யுத்தத்தினால் பாதிக்கப்பட்டது. இங்கு வசித்த மக்கள் பலர் இடம்பெயர்ந்து நகர்ப் பகுதிகளை அண்டிய பிரதேசங்களில் வசித்து வருகின்றனர். தற்பொழுது இப்படுவான் புலத்தில் வசித்துவரும் பெரும்பாலான மக்கள் பொருளாதாரத் திலும், கல்வியறிவிலும் பின்தங்கியவர்களாகக் காணப்படுகின்றனர். இங்கு வசிக்கும் பெரும்பாலான மக்கள் தமது ஜீவனோபாயத் தொழில்களாக விவசாயம், மீன்பிடி, கூலித்தொழில் ஆகியவற்றினை மேற்கொண்டு வருகின்றனர். இங்கு வசிக்கும் பெரும்பான்மையானவர்கள் வறுமைக்கோட்டிற்குக் கீழ் வாழ்க்கை நடாத்துபவர்களாகக் காணப் படுகின்றனர். இவ்வறுமையானது அங்கு வசிக்கும் பிள்ளைகளின் கல்வியில் தாக்கத்தைச் செலுத்து வதுடன் பெண்பிள்ளைகள் தங்களது கல்வியைத் தொடர்வதில் பல சிக்கல்களை எதிர்நோக்குவதற்கும் காரணமாக அமைகின்றது.

பெண்பிள்ளைகளுக்கான கல்வி வாய்ப்புக் களை வழங்கும் பொழுது பெண்களின் கல்வி யடைவுகளும், வாழ்தொழில் அபிலாசைகளும் முன்னேற்றமடைய வாய்ப்புக்கள் உண்டு. கல்வி யினால் பெண்களின் பொருளாதாரப் பாதுகாப்பும் சிறந்த வாழ்க்கைத் தரமும் உறுதிசெய்யப்படுகின்றன. வறுமை நிலையிலுள்ள அனேகமான குடும்பங்கள் கல்வியில் குறைந்த பெண்களாலேயே வழிநடத்தப் படுகின்றன. பெண்கள் சமுதாயத்தின் இன்றி யமையாத பிரிவினராகச் செயற்படுகின்றனர். குடும்பங்கள் அடிப்படையிலான வாழ்வு இலக்குகள், தேவைகள் என்பவற்றை நிறைவேற்றுவதில் அவர்கள் பங்கு பிரதானமாக இருந்து வருகின்றது. சமுதாயத்தில் இடம்பெறும் பெண்களுக்கெதிரான அடக்குமுறைகளிலிருந்து பெண் இனத்தைப் பாதுகாப்பதற்கு பெண் கல்வியூட்டப்படுவது அவசியம். அறியைமையை நீக்கி அறிவுசார் சமுதாயத்தை உருவாக்குவதற்கும், நோய்களிலிருந்து பாதுகாத்து ஆரோக்கியமான சுகாதாரப் பழக்க வழக்கங்களை கடைப்பிடிப்பதற்கும், குடும்பத் தினதும் நாட்டினதும் முன்னேற்றத்திற்கும் பெண்கல்வி அவசியமானதாகும்.


படுவான்புலத்தில் வாழும் பெரும்பாலான பெண்பிள்ளைகள் தங்களது குடும்பச் சூழ்நிலைகளாலும், வறுமையினாலும் தங்களது கல்வியைத் தொடர்வதில் பல இடர்களை எதிர்நோக்கியவர்களாகக் காணப்படுகின்றனர். இதற்கு அவர்களின் கலாசாரப்பின்னணியும் ஒரு காரணமாக அமைகின்றது. மரபுரீதியான செயற்பாடுகளான சாமியாடுதல், சோதிடம் சொல்லுதல் போன்ற செயற்பாடுகளில் ஈடுபட்டு வருகின்றனர். அது மட்டுமன்றி பெண்பிள்ளைகளின் இளவயதுத் திருமணமும் இடம்பெறுவதோடு பெற்றோரின் திருமணமுறிவு, பெற்றோரின் மறுமணம், பெற்றோர் தகாத உறவில் ஈடுபடுதல் போன்ற காரணிகளினால் உளவியல் தாக்கங் களுக்கும் மனவழுத்தங்களுக்கும் ஆளாகின்றனர். பெற்றோர்கள் மதுஅருந்தும் பழக்கம் கொண்டவர் களாகக் காணப்படுவதனால் குடும்பங்களிடையே பூசல்களும் சண்டை சச்சரவுகளும் ஏற்படுகின்றன. தந்தையினால் கைவிடப்பட்டு நிர்க்கதியாக்கப்பட்ட பெரும்பாலான குடும்பங்கள் காணப்படுகின்றன. மற்றும் வறுமை காரணமாக பெண்பிள்ளைகள் நகர்ப்புறங்களில் வீட்டுப்பணிகளுக்கென அமர்த்தப் படுகின்றனர். இவ்வாறான இடர்பாடுகளினால் பெண்பிள்ளைகள் தங்களது கல்வியைத் தொடர முடியாதவர்களாகக் காணப்படுகின்றனர்.

இங்கு பொருளாதார வளம் குன்றிய பெற்றோர்கள் அதிகமாகக் காணப்படுகின்றனர். அத்துடன் இவர்களின் குடும்பத்தில் அங்கத்த வர்களின் எண்ணிக்கையும் அதிகமாகக் காணப்படுகின்றது. இவ்வாறான குடும்பங்களைக் கொண்டு நடத்துவதற்கு பொருளாதார சக்தியற்ற பெற்றோர்களாகக் காணப்படுகின்றமையினால், தாய் தந்தையர் இருவரும் கூலித்தொழிலுக்குச் செல்லும் நிலை காணப்படுகின்றது. வீட்டிலுள்ள தமது இளைய சகோதரர்களைப் பராமரிக்கும் பொறுப்பை அக்குடும்பத்தின் மூத்த பெண்பிள்ளை பொறுப்பேற்க வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்படுகின்றது. இக்காரணத்தினால் அப்பெண்பிள்ளை தனது பாடசாலைக்கல்வியைத் தொடரமுடியாத துர்ப்பாக்கிய நிலை ஏற்படுகின்றது.

1998ல் நடைமுறைப்படுத்தப்பட்ட கட்டாயக் கல்விச்சட்டமானது 5 – 14 வயதுக்கிடைப்பட்ட பிள்ளைகளின் கல்வியுரிமையை உறுதிசெய்ததுடன், இத்தகையோர் உழைப்பில் ஈடுபடுவதைத் தடுக்கும் ஏற்பாட்டுக்கு உதவியிருந்தாலும் நகர்ப்புறங்களில் வீட்டுப் பராமரிப்புக்காகவும் பிள்ளைப் பராமரிப் புக்காகவும் பெண்பிள்ளைகள் ஈடுபடுத்தப்படுவதைக் காணக்கூடியதாகவுள்ளது. இவ்வாறு ஈடுபடுத்தப்படும் பெண்பிள்ளைகளில் பெருமளவானவர்கள் இப்படுவான் புலத்திலிருந்தே குறைந்த


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஊழியத்திற்காக வேலைக்கு அமர்த்தப் படுகின்றார்கள். இவர்களுக்கு வழங்கப்படும் ஊதியத்தை அவர்களது பெற்றோர்கள் வந்து வாங்கிக்கொண்டு செல்லும் நிலைமையைக் காணக்கூடியதாக உள்ளது. இவ்வாறு தங்களது குடும்பத்தின் வறுமையைப் போக்கவும் பெற்றோரின் சுமையைக் குறைப்பதற்காகவும் தங்களது கல்வியை இழந்து குழந்தைத் தொழிலாளியாக மாறவேண்டிய சூழ்நிலை இப்பிரதேசத்து பெண்குழந்தைகளுக்கு உருவாகியுள்ளது.



குழந்தைகளைப் பராமரிக்கும் பொறுப்பை தாயின் வயதான தாயே பொறுப்பேற்கும் நிலை காணப்படுகின்றது. இவ்வாறு தாய் தந்தை இல்லாத சூழ்நிலையில் வளரும் பிள்ளைகளின் அன்புத் தேவைகள் நிறைவு செய்யப்படாத நிலைமை காணப்படுகின்றது.

இங்கு காணப்படும் சமூக மரபுமுறையாக இளவயதுத் திருமணம் காணப்படுகின்றது. பெண்பிள்ளைகள் தங்களது பாடசாலைக் கல்வியைப் பூர்த்தி செய்யும் முன்பே திருமணம் செய்யும் முறை காணப்படுகின்றது. இத் திருமணங்கள் பெற்றோர்களால் நடாத்திவைக்கப் படுவதோடு சில சமயங்களில் பெண்பிள்ளைகள் தனக்கான வாழ்க்கைத் துணையைத் தானாகத் தேடிக்கொண்டு திருமணம் செய்யும் முறையும் காணப்படுகின்றது. இதனால் பெண்பிள்ளைகள் பாடசாலைக் கல்வியைப் பூர்த்தி செய்ய முடியாதவர்களாகக் காணப்படுகின்றனர்.

பெண் குடும்ப, சமூக, சமய, கலாசார, மரபுச்சூழலுக்கு கட்டுப்பட்டவளாகக் காணப் படுவதோடு, ஆணைவிடப் பலத்திலும் அதிகாரத்திலும் குறைந்தவளாகவே சமூகத்தால் நோக்கப்படுகின்றாள். ஆனால் ஒரு ஆணின் வகிபாகத்தை ஏற்று குடும்பத்தை நடத்திச்செல்லத் தயங்குவதும் இல்லை. இப்பிரதேசத்தில் காணப்படும் பெரும்பாலான குடும்பங்களில் கணவன் தனது மனைவி, குழந்தைகளைக் கைவிட்டு வேறு வாழ்க்கைத் துணையை நாடிச்செல்லும் நிலைமை காணப்படுகின்றது. இவ்வாறான நிலைமையைச் சீர்செய்வதற்காக அக்குடும்பத் தலைவி மத்தியகிழக்கு நாடுகளுக்குச் சென்று தொழில் புரியும் நிலை காணப்படுகின்றது. இவ்வாறு தாய்வெளிநாட்டில் தொழில்புரியும் நிலைமையில் அக்குழந்தைகளைப் பராமரிக்கும் பொறுப்பை தாயின் வயதான தாயே பொறுப் பேற்கும் நிலை காணப்படுகின்றது. இவ்வாறு தாய் தந்தை இல்லாத சூழ்நிலையில் வளரும் பிள்ளைகளின் அன்புத் தேவைகள் நிறைவு செய்யப்படாத நிலைமை காணப்படுகின்றது. அத்துடன் இவ்வாறு ஒரு பூரண பாதுகாப்பு இல்லாத சூழ்நிலைகளில் வாழ்வதால் பெண்பிள்ளைகள் துஸ்பிரயோகங்களுக்கு ஆளாகும் சந்தர்ப்பங்கள் ஏற்படுகின்றது. இவ்வாறான சந்தர்ப்பங்களில் கல்வியோடு அவர்களது வாழ்க் கையும் கேள்விக்குறியா கின்றது.

இப்பிரதேசத்தில் சில செல்வந்தர்களுக்குச் சொந்தமாக விவசாய நிலங்களும், சேனைப் பயிர்ச்செய்கை நிலங்களும், கல்வெட்டுதல், செங்கல் சுடுதல் போன்ற சிறு கைத்தொழில்களை உள்ளடக்கிய இடங்களும் காணப்படுகின்றன. இவ்வாறான இடங்கள் "வாடி" என அழைக்கப் படுகின்றன. இவற்றைப் பராமரிப்பதற்காகவும் அங்கு தொழில் புரிவதற் காகவும் கூலியைப் பெற்றுக்கொள்வதற்காகவும் குடும்பங்களாகச் சென்று தங்கியிருக்கும் நிலை காணப்படுகின்றது. அவ்வாறு சென்று தங்கும் போது பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகளையும் அங்கு வேலை செய்வதற்காக அழைத்துச் செல்லும் நிலை காணப்படுகின்றது. இதனால் பிள்ளைகள் பாடசாலைக்குச் செல்லாது வாடிக்குச் சென்று வேலை செய்வதால் பாடசாலைக் கற்றற் செயற் பாடுகள் தடைப்படுகின்றது. பிள்ளைகளுக்குக் கற்றலில் எவ்வளவு ஆர்வம் காணப்படினும் அவர்களின் குடும்ப சூழ்நிலையானது அவர்கள் கல்வியைத் தொடர்வதில் இடையூறு விளைவிப் பதாய் அமைகின்றது. இங்கு பெண் பிள்ளைகள் மட்டுமன்றி ஆண்பிள்ளைகளும் தங்களது கல்வியைத் தவறவிடும் சந்தர்ப்பங்கள் ஏற்படுவதைக் காணக்கூடியதாக உள்ளது.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

இங்கு காணப்படும் அசாதாரண குடும்பச் சூழ் நிலையும் பெண்குழந்தைகளின் கல்வியில் தாக்கத்தை ஏற்படுத்து கின்றது. பிள்ளையின் பெற்றோர் களிடையே ஏற்படும் திருமண முறிவு, தாய் அல்லது தந்தை வேறு துணையுடன் வாழ்தல், சில பெற்றோர்கள் தகாத உறவில் ஈடுபடுதல் போன்ற ஆரோக்கியமற்ற குடும்பச்சூழ்நிலையில் வளரும் பெண்குழந்தையானது உளத்தாக்கத்துக் கும், மனவழுத்தங்களுக்கும் உட்படுகின்றனர். இம்மன அழுத்தங்களின் வெளிப்பாடானது ஆக்ரோசமான சக்தியாக மாறி உடல்ரீதியாக வெளிக் காட்டப்படுகின்றது. இவ்வாறாக வெளிக்காட்டப்படும் சந்தர்ப்பங்களை சமய மரபுநிலைக்கூடாக் காணும் சமுதாயமாகவும் உள்ளனர். சாமி ஆட்டுதல், சோதிடம் கூறுதல் என்றும் மேலும் பணம் சம்பாதிக்கும் நிலைக்கு பெண்பிள்ளைகள் ஈடுபடும் நிலமையை பெற்றோரும் சமூகத்தினரும் ஏற்படுத்திக் கொடுக் கின்றனர். இந்நிலை பெண்பிள்ளைகளுக்கு மாத்திர மன்றி சில ஆண்பிள்ளைகளுக்கும் ஏற்படுவதைக் காணக்கூடியதாகவுள்ளது. இந்துக் களாகிய எமக்கு சமய நம்பிக்கை அவசியமானது. என்றாலும் மூட நம்பிக்கையிலிருந்து விடுபடுவதும் அவசியமானது.

ஆரோக்கியமான கற்றலுக்கும் மூளை வளர்ச்சிக்கும் போசாக்கான ஊட்டச்சத்துள்ள உணவு அவசியமாகும். வறுமை காரணமாக இங்குள்ள பெற்றோர்கள் ஊட்டச்சத்துள்ள உணவைச் சமைத்து வழங்க முடியாதவர்களாக இருக்கின்றனர். இப்போசாக்கின்மையின் காரணமாக சில பிள்ளைகள் கற்றலில் மந்தநிலையை வெளிக்காட்டுபவர்களாக காணப்படுகின்றனர்.

இவ்வாறு பல தாக்கங்களுக்கு உட்படும் பெண் பிள்ளைகளால் எவ்வாறு தமது கல்வியைத் திருப்தியான முறையில் தொடரமுடியும்? கல்வியில் எவ்வாறு கவனம் செலுத்த முடியும்? நாம் இது பற்றிச் சற்று சிந்தித்துப்பார்ப்போமா? இன்று உலக மானது எவ்வளவு வேகமாக முன்னேறிச் சென்றாலும் பெண்பிள்ளைகள் கல்வியைப் பெறுவதில் சில இடர்பாடுகளும் இருக்கத்தான் செய்கின்றன.

பெண் குடும்பத்தைக் காப்பவள், குடும்பத்தின் அனைத்துச் செயற்பாடுகளுக்கும் மூலாதாரமாகத் திகழ்பவள். குடும்பப் பராமரிப்பு, பிள்ளை வளர்ப்பு போன்ற பாரிய பொறுப்புக்களை கண்ணும் கருத்துமாக மேற்கொள்பவள். ஒரு பெண் தாயாக, தாதியாக, நண்பியாக குடும்பத்தின் அனைத்து நடவடிக்கைகளிலும் பல பாத்திரங்களை ஏற்று நடப்பவள். பெண்ணுக்கு கல்வியானது அவசியம் வழங்கப்பட வேண்டும். ஒரு பெண்ணுக்கு கல்வி வழங்குவதன் மூலம் ஒரு குடும்பத்தை விழிப்படையச் செய்யலாம்.

ஆணும் பெண்ணும் சமம் என்னும் கொள்கை மேற்கத்தேய நாடுகளில் காணப்பட்டபலும் ஆசிய நாடுகளைப் பொறுத்தவரை பெண் ஆணை விடக் குறைந்தவளாக நோக்கப்படும் நிலையே காணப்படுகின்றது. இதற்கு காரணமாக குடும்பம், சமயம், சமூகம் எனும் கட்டமைப்பிற்குள் பெண்கள் இறுக்கமாகப் பிணைக்கப்பட்டு மரபு ரீதியாக வழிநடத்தப்பட்டு வரும் நிலையே காரணமாகும். குடும்பத்தின் பொறுப்புக்கள் அனைத்தையும் பெண்ணின் மீது சுமத்திவிட்டு ஆண் ஒதுங்கிக் கொள்ளும் நிலைமை காணப்படுகின்றது. சுமைகள் அதிகமாவதால் பெண் பலவாறான பாதிப்புக்கு உள்ளாகின்றாள். இவ்வாறான குடும்பங்களில் வாழும் பெண்பிள்ளைகளும் பலவாறான பாதிப்புக்குட்பட்டு தனது கல்வியைப் பெறுவதில் பல சவால்களை எதிர்நோக்குபவர்களாக காணப்படுகின்றனர்.

பெண்களிற்கு கல்வியானது உரிய வயதில் வழங்கப்பட வேண்டும். பெண்களின் முன்னேற்றம் நாட்டின் முன்னேற்றமாகக் கருதப்பட வேண்டும். பெண்களைப் போகப்பொருள்களாகவும், தெய்வங்க ளாகவும் நினைக்கும் நிலை மாறவேண்டும். இதற்கு அச்சமுதாயமானது வழியை ஏற்படுத்திக் கொடுத்தல் வேண்டும். 1979ல் உருவாக்கப்பட்ட பெற்றோர் பட்டயமானது பிள்ளைகளின் கல்வியில் பெற்றோரின் உரிமை களையும் கடமைகளையும் உள்ளடக்கு கின்றது. இப்பட்டையத்திலுள்ள இருபது உறுப்புரை கள் அவர்களது கடமைகள் உரிமைகள் பற்றியும் பாடசாலைச் செயற்பாடுகள் மற்றும் பாடசாலை ஆளுகை என்பவற்றில் பெற்றோரது ஈடுபாட்டி னையும் விளக்குகிறது. இவ்வாறான பின்தங்கிய பிரதேசங்களில் உள்ள பெற்றோர்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்த வேண்டும். இப்பெண் பிள்ளைகளின் கல்வி முன்னேற்றத்திற்கு ஆவன வற்றைச் செய்து கொடுப்பதற்கு கற்றோரும், கல்வியியலாளர்களும், இச்சமூகத்தவரும் விழிப்புடன் செயற்பட வேண்டும்.

பெண் அடிமைத்தனம் விலக்கப்படல் வேண்டும். பெண்பிள்ளைகள் வேலைக்கமர்த்தப் படுவதும் பெண்களுக்கான கல்வி மறுக்கப்படுவதும் நிறுத்தப்படல் வேண்டும். கல்வி பெறும் வாய்ப்புக் கள் அதிகரிக்கும் போது பெண்பிள்ளைகளின் வாழ்க்கைக் கோலங்களில் முன்னேற்றம் உண்டா கின்றது. பெண்களின் நடத்தை சார்ந்த மனப்பாங்கு


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கள் பாடசாலைகளின் மூலமாக மாற்றிய மைக்கப் படல் வேண்டும். இப்படுவான் புலத்தில் இடம்பெறும் சமூக, கலாசார சீர்கேடுகள் நிறுத்தப்படல் வேண்டும். பெண்பிள்ளைகளின் கல்விக்கு இடையூறான அம்சங்கள் விலக்கப் படவேண்டும். பெண்களுக்கு கல்வியூட்டுவதன் மூலமே வீட்டையும் நாட்டையும் அபிவிருத்தியடையச் செய்யலாம் என்பதை உணர்ந்து பாடுபடவேண்டியது கல்விமான்களினதும், கற்றோரினதும், சமூக ஆர்வலரினதும் தலையாய பொறுப்பு ஆகும்.

✦ ✦ ✦ ✦

# என் தேசத்து தோழியரே

மாதவி, லண்டன்

என் தேசத்து தோழியரே!
தினம் தினம் மனம் நொந்தோம்
கணம் கணம் துயர் சுமந்தோம்
கால்கள் ஏனோ நடக்கும்
கண்கள் ஏதோ பார்க்கும்
மனசு மட்டும் சுற்றியலையும்
தோழியரே
மனசு மட்டும் உம்மையே சுற்றியலையும்

என் தேசத்துக் குத்துவிளக்குகளே!
பேய்களுக்குப் பயந்தீரல்ல
புளியமரமும் பூச்சி புழுக்களும்
ஒன்றுமே செய்ததல்ல
காத்துக் கறுப்பும் சாபமும்
உங்களுக்கு பயமில்லை
தேசம் அப்படித்தான் அழகானது

இன்று சிறை முட்களின் வலி நடுவே
காற்றின் முனகலும் மரத்தின் அழுகையும்
காடையர் வருகையும்... அச்சமும்
அவர்களின் வக்கிரப் பசிகளை உணர்த்துமோ
செய்திகள் தீக்குழம்பாக கனன்று அவிக்கையில்
நினைவிடை வலிதரும் இரவுகள்
மனப்பிறழ்ச்சியில் சிதைவுறும்

படையலுக்காகக் காத்திருக்க
ஊரெல்லாம் வந்த சேதி
மரணம் ஒன்றே நன்றென்று சொல்லிற்று

தோழியரே
பாடையிலும் பாலியல் வல்லுறவில்
நெருக்குவாரப்பட்ட சதி செய்த இழிமுகங்களைத்
தேடியோரிரு வார்த்தை.... சந்ததி தோறும்
'பிறப்புறுப்பில் சூலைநோய் சூழ்க'
என் தேசத்து தோழியரே!
நீவிர் மட்டுமல்ல
நாடுகள் தோறும் விசாரணையென்றே
காமம் தீர்க்கும் கடைகெட்ட
ஈனப் பிறவிகள் எவரோ அனைவருக்கும்
சூழுக வலியே சூழுக வலியே

2

உயிர்ப் பிண்டங்களாக வனாந்திரச் சிறைகளிடை
பெண்ணோடும் அவள் உடலோடும் செய்திகள்
எம்மை தின்கின்ற போது
பொழுதுகள் கசப்பாகின்றன
ரணத்தினை விழுங்கியதாய் அலைக்கழிக்கின்றோம்
கற்பென்றும் பெண்ணிடம் தான் உண்டென்றும்
புலம்புகின்ற புலையர் தம் வரைவிலக்கணம்
'ஏளனக் கிறுக்கரின் பிதற்றல்'

நீங்கள் ஆங்காரக் காளிகள்
தொட்டும் முட்டி விட்டு போகட்டும்
ஆததாயிகள் விசாரணையென்று
வக்கிரப் பார்வையும் வன்மச்செயலும் புரிந்து
நச்சு மனத்தினராய் உடலழித்துப் பொசுக்கட்டும்
துர்க்கையின் கோபம் வாகை தரும்

இத்தனை நடப்பினும்
உலகத்து வன்முறைக்கெல்லாம்
குரல் கொடுக்கும் விடுதலை விரும்பிகள்
வீட்டிற்குள் நடக்கும் உபத்திரம்
தெரியாமல் போனது நயப்பன்றோ

ஊருக்குபதேசம் உனக்கில்லை என்பது போல்
உள்வீட்டு அழுகுரலுக்குப் பெறுமதி
இல்லையென்போர் நாம் பார்க்க
கண்களை மூடி காதுகள் பொத்தி
கைகளைக் கட்டி வாளாதிருக்கட்டும்
வாழ்ந்து தான் என்ன



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பிரதிஷ்டை

- ஸாவித்ரி ராஜீவன்

மலையாள மூலத்திலிருந்து தமிழில் : பேரா. ப. ஆனந்தகுமார்

அடுக்களையில்
தேய்ந்துபோகிற
வீட்டு உபயோகப்பொருள் நான்
சுவாசிப்பதனால் நடக்கவும்
நடப்பதனால் படுக்கவும் செய்கிற
தின்பண்டங்களுடன்
வார்த்தைகள் பரிமாறுகிற
குழப்பங்கள் எதுவுமில்லாத
ஓர் உபயோகப்பொருள்
என் குழந்தைகளுக்கு
சிலவேளை எண்ணற்ற
பலகாரங்கள் படைக்கின்ற
ஓர் இயந்திரம் நான்,
சிலவேளை கடிக்க மறந்த
குரைக்கின்ற நாய்,
சிறியவர்கள்
பெரியவர்களின்
எஜமானராக வேண்டுமென்று
தேனீக்களினுடைய
எறும்புகளினுடைய
பாடத்தினூடாக
நான் அவர்களுக்குப்
பாடங்கற்பித்திருக்கிறேன்
அதனால் எனது கற்பனைகளோடு
அவர்கள் எதிர்வினைபுரிவதில்லை,
விருப்பப்பட்ட
விளையாட்டுப்பொம்மை போல
அவர்கள்
எனக்குக்கட்டளையிடுகின்றனர்
எளிதாகப் பாய்ந்து ஏறுவதற்குரிய
ஓர் ஒற்றைக்கல் மண்டபம்போல
ஆலாபனையிலும்
அழுகையிலும் சேர்ந்த
இந்த சிறிய பூமியினுக்கு
அவர்கள் எதிர்த்துப் பாய்கின்றனர்.

அடுக்களையிலிருந்து,
அரங்கத்திற்கு வந்த
ஒரு வீட்டுபயோகப்பொருள் நான்.
தொகுக்கப்படாத
பத்துக்கும் மேற்பட்ட கற்பனைகள்
தலையின் உச்சியில் தொங்குவதை
நான் நித்தமும் காண்கின்றேன்.
பக்கத்து வீட்டுக்காரனின்



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

பார்வைகளில்
பக்கத்து வீட்டுக்காரியின் சிரிப்புகளில்
பத்திரிகை செய்தியில்,
பாடப்புத்தகத்தில்
நுரைக்கும் விளம்பரங்களில்
எதற்கு
குழந்தைகளின்
இளம் உதடுகளில்கூட உண்டு
எனக்கான கற்பனைகளில் சில.

மிருகக்காட்சிச்சாலையிலுள்ள
காட்டு உயிரினங்களைப்போல
காண்பவர்களும்
காவல்காரர்களுமாக வருகின்றவர்கள்
கம்பிகளுக்குப் பின்னால் நின்று
எனக்குக் கட்டளையிடுகின்றனர்
கம்பியிலாடுகின்ற பறவைகள்
விலங்குகள் போல
எனது செயல்கள்
அவர்களை மகிழ்வூட்டுகின்றன
சிலவேளை
கார்கூந்தலில் துளசித்தழைசூடி
நெற்றியில் சந்தனம் சார்த்திய
ஒரு தேவதையாகிறேன் நான்
சிலவேளை
கண்ணனின்
விருப்பத்திற்குரிய காதலி
இல்லையெனில்
தேவமைந்தனின் அன்னை
காப்பியங்களில்
காற்றிலாடுகின்ற
தூய வெள்ளைத்தாமரை
கீர்த்தனைகளில்
தாருகன் தலையையேந்திய
ரத்தசாமுண்டி
ஆனால், எனக்குத் தெரியும்
கோவிலும் பிரதிஷ்டையுமாகிப்போன
ஒரு வீட்டு உபயோகப்பொருள் நான்.
அடுக்களையில்
தேய்ந்துபோகின்ற
ஒரு வீட்டு உபயோகப்பொருள்.



**ஸாவித்ரி ராஜீவன்**

பிறப்பு : 22.10.1956

மலப்புரம் மாவட்டத்தில் எறநாட்டு வட்டத்தில் பிறந்தவர். திருவனந்தபுரம் மகளிர் கல்லூரியிலும், பரோடாவி லுள்ள எம்.எஸ்.பல்கலைக்கழகத்திலும் படித்து பட்டம் பெற்றவர். சிறந்த மலையாள விமர்சகர் பி.ராஜீவன். இவரது கணவர் 1975 முதல் எழுதிவருகிறார்.

பரோடா ஓவியக்கலை விமர்சன ஆய்வுக்குப்பின் ஓவியப்படைப்பில் கவனம் செலுத்தினார். இவரது முதல் ஓவியக்கண்காட்சி 1999இல் புதுதில்லியில் நடைபெற்றது. இவரது முதல் கவிதைத்தொகுப்பு 'சரிவு' 1993இல் வெளிவந்தது. இத்தொகுப்பிலுள்ள கவிதைதான் பிரதிஷ்டை. இத்தொகுப்பு தவிர தேஹாந்தரன்(1999). ஸாவித்ரி ராஜீவின்றெ கவிதகள்(2009) தொகுப்புகளையும் வெளியிட்டுள்ளார். இவைதவிர 'சஞ்சாரியுடெ தாணுபோய வீடு' (2009) எனும் சிறுகதைத்தொகுப்பினையும் வெளியிட்டுள்ளார்.

இவரது கவிதைகள் பெங்குவின் மற்றும் ஆக்ஸ்போர்டு பதிப்பகத்தார் ஆங்கிலத்தில் வெளியிட்டுள்ள சமகால இந்தியக் கவிதைத்தொகுப்புக்களில் இடம்பெற்றுள்ளன. கமலாசுரய்யாவின் முதல்விருதும் உதயபாரதி தேசியவிருதும் (1995) இவரது கவிதைகளுக்கு வழங்கப்பட்டுள்ளன.

பின்நவீனத்துவ பெண்ணியக்கவிதையில் ஸாவித்ரி ராஜீவனின் படைப்புக்கள் முதன்மையானவை. புனைவியலும் நவீனத்துவமும் மரபுவழி அலங்கரித்த பெண்நிலைப்பாட்டை நிராகரித்து புதிய உணர்வு நிலையோடு இவரது கவிதைகள் அமைந்துள்ளன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விலங்கு வித்தைக்காரன்

- விஜயலக்ஷ்மி

மலையாள மூலத்திலிருந்து தமிழில் : பேரா. ப. ஆனந்தகுமார்



அச்சம்தான் ஐயனே!
சுழலும் சாட்டை விழிகளில், விரல்
நுனிகளில் தண்டிக்கும் வித்தைகள், இரக்கமோ
இதயத்தில்? இருந்தாலும் எடுத்துச் சொல்கிறேன் -
அச்சம்தான் ஐயனே!

காட்டிற்குள் பாய்வதற்கு என்னுடல்
நடுங்குகின்றது, ஆனால் நிறைந்த கண்களின்முன்
சிவந்த தீச்சக்கர வளையத்திற்குள்
இடம்வலம் பார்க்காமல் பாயவேண்டும்!
இதனை எத்தனைகாலமாய், கற்றேன் நான், ஆனால்
இடையிலென் பேராசைகள் உதறிப் பாய்கின்றன.

மூங்கில்காட்டின் பின்னால் கரும்பாறைக்குமேல்
மின்னும் மஞ்சள் கறுப்புக் கோடுகள்
அருவியின் கீழே பட்டுத் தெறிக்கிறது என்னவொரு
அபூர்வ அழகிய கம்பீரம் என் முகம்!
குளிர்ந்த நிலவொளி உறைந்த பச்சிலைப்
படப்பின் கூடாரம், மெல்ல, காதலாய்
அழைக்கிறது, கூரிய உறுமல்கள், அடர்ந்த
நிமிசங்கள், தளர்ந்த சயனங்கள்,இளம்
தளிர்கள் துள்ளியாடும் சலசலப்பு!
திடீரென சாட்டை உயர்கின்றது தாழ்கின்றது
இடிமின்னல் கோர்த்தடிக்கும் வேதனை
கூடாது, தீயுமிழும் விழிகள், தண்டனை
சுழல்கிறது, மேனியெரியும்போது, தோளில்
இடித்துச் சாய்க்க வேண்டுமென்கிற சுயமரியாதை
குரலையுயர்த்தாது உள்ளுக்குள் உறுமுகிறேன்
இப்படி
அச்சம் தான் ஐயேன!

கல்மனிதனின் கொடிய கண்களால்
முறைத்தான் என்னை, நான் விலங்கென்றாலும்
முடியாது இனி இக்கூண்டில் முடங்கிக் கிடக்க
இரையைக் காற்சுவட்டில் அழுத்தி, பல்லால் பற்றி
இழுக்கும்போது அகம்நிறையும் மனநிறைவு!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தெறிக்கும் குருதியில் முகம் நனைக்க
துடிதுடிக்கின்றன என் நகமும் கோரைப்பற்களும்
அணிவகுத்திருப்போர் பலராம் என்முன்னால்
அவரைக் கொல்ல உடல் நடுங்குகிறது.
சொல்க, பாவையா மிருகம்? பழக்கினால்
அடிமையைப் போல் ஒதுங்குவேன் என்றாலும்
இடையிடையே என் காட்டுமனதில் அந்த
மிருக புராணிகன் கொடூரமாய் எழுகிறான்
அதி புராதனமானவன், இலைக் கூட்டத்தின்மேலே
குதிப்போன், சூரியனைப்பிடிக்கப் பாய்வோன்.
குனிகின்றன கண்கள் அவன்பார்வையில்
தளர்கின்றன உடல் அவன் பரிகாசத்தில்
வணங்கிப் போகிறேன் அவனைப்பணிந்து நான்.
கூடாது பார்க்கும் பேரொளியானை
உற்றுப்பார்த்தால் நொறுங்கும் கண்கள்.
அதற்கு முன்னர் இந்த நகநுனிகளால்தான்
இனி இந்தக் கண்களை நான் பிடுங்கியெறிவேன்.

அதற்கும் முடியாதல்லவா அச்சம், அச்சம் மட்டும்
அடிமைநான், தோற்றுக் குனிந்திருக்கிறேன்.
முதுகில் உன் சாட்டையைச் சுழற்றிக்கொள்க.
வளையத்தில் பாய்வதற்கு விழிப்போடிருப்பேன் நான்.



**விஜயலக்ஷ்மி**

(பிறப்பு : 2-8-1960)

தற்கால மலையாளக் கவிதையில் பாலாமணியம்மா, கடத்த நாடு மாதவியம்மா, ஸகதகுமாரி ஆகியோருக்குப் பின் எழுந்த வித்தியாசமான பெண்குரல் விஜயலக்ஷ்மியினுடையது. இவர் எறணாகுளம் மாவட்டத்திலுள்ள முளந்துருத்தி எனும் கிராமத்தில் பிறந்தவர். மலையாள இலக்கியத்தில் முதுகலைப் பட்டம் பெற்ற இவர், சிலகாலம் தொலைபேசித் துறையில் பணியாற்றினார். புகழ்பெற்ற நவீன மலையாளக் கவிஞர் பாலச்சந்திரன் சுள்ளிக்காடு இவரது வாழ்க்கைத் துணைவர். 1970களின் இறுதியில் நவீனத்துவத்தின் கடைசி கட்டத்தில் எழுதத் தொடங்கியவர். இவரது முதல் கவிதை 1977-இல் "கேரள கௌமுதி" இதழில் வெளிவந்தது. துயரம் நிறைந்த இளமைக் காலத்தைப் பற்றிய வேதனைகளும் நிராசைகளும் பெண்ணின் தனிமையுலகத் துன்பங்களும் இவரது கவிதைகளில் நிறைந்திருந்தன.

பின்னை நவீனத்துவம் சார்ந்த இந்த உணர்வுநிலை தான் விஜயலக்ஷ்மிக்கு உன்னதமான வழியைக் காட்டியது. ஷம்ருகஸிக்ஷகன்; (1991) இவரது முதற்கவிதைத் தொகுப்பு. இத்தொகுப்பு லலிதாம்பிகா அந்தஉஜனம் விருதும் (1993), கேரள சாஹித்ய அகாதெமி விருதும் (1994) பெற்றது. தச்சன்றெ மகள் (1992), மழதன் மற்றேதோ முகம் (1999) ஹிமஸ மாதி (2001), ஒற்றமணல் திரி (2003) அந்த்ய ப்ரலோபனம் (2002) மழய்க்கப்புறம் (2010) என்பன இவரது பிற கவிதைத் தொகுப்புக்கள். 'மழதன் மற்றேதோ முகம்' தொகுப்பு பி. குஞ்ஞிராமன் விருதினைப் (2001) பெற்றது. கவிஞர்கள் பெயரமைந்த உள்ளூர்விருது, வயிலோப் பிள்ளி விருது, சங்ஙம்புழ விருது உள்ளிட்ட பல விருதுகளைப் பெற்றுள்ளார் இவரது ஒட்டுமொத்த கவிதைகள் 'விஜயலக்ஷ்மியுடெ கவிதகள்' (2010) எனும் தலைப்பில் நூலாக வெளிவந்துள்ளன. ~அன்ன அக்கமதோவயுடெ கவிதகள்; (2001) இவரது மொழிபெயர்ப்பு நூல். பாலின சமத்துவம், பெண் குறித்து சமூகத்தின் இரட்டைநிலை என்பன தான் விஜயலக்ஷ்மி கவிதைகளில் உரத்து ஒலிப்பதாக விமர்சகர் எம். லீலாவதி குறிப்பிடுகின்றார். பெண்ணினுடைய அனுபவ உலகத்தின் கடுஞ்சிக்கல்களையும், சொந்த மொழியையும், சுரத்தையும் கண்டடைவதற்கு ஒரு பெண்கவிஞர் நடத்த வேண்டிய முயற்சியின் தீவிரத்தன்மை விஜயலக்ஷ்மியின் கவிதைகளில் தெளிவாகத் தெரிகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பேரா.தொ. பரமசிவன்

# தாலியின் சரித்திரம்

தாலி கட்டுதல், திருப்பூட்டுதல், மாங்கல்ய தாரணம் ஆகிய சொற்கள் பெண்ணின் கழுத்தில் ஆண் தாலி அணிவிப்பதைக் குறிக்கின்றது. தாலி கட்டும் நிகழ்ச்சி நடக்கும்போது மணமக்களுக்குப் பின்னால் மணமகனின் சகோதரி அல்லது சகோதரி முறை உள்ளவர்கள் கட்டாயம் நிற்க வேண்டும். மணமகனுக்குத் தாலி முடிச்சுப்போட அவள் உதவி செய்ய வேண்டும். தமிழ்நாட்டில் பெருவாரியாக நிலவிவரும் வழக்கம் இதுவே.

மணவறையில் அல்லாமல் ஊர் மந்தையில் நின்றுகொண்டு தாலி கட்டும் வழக்கமுடைய சாதியாரிடத்திலும் சகோதரி மணமகனுக்குத் தாலிகட்டத் துணை செய்கிறாள். தமிழ்நாட்டில் குறிப்பிட்ட ஒன்றிரண்டு சாதியாரிடத்தில் இரண்டு வீடுகளுக்கு இடையில் உள்ள சந்து அல்லது முடுக்குக்குள் சென்று மணமகன் மணமகளுக்குத் தாலி கட்டுவது சில ஆண்டுகளுக்கு முன்வரை வழக்கமாக இருந்தது. இது வன்முறையாகப் பெண்ணை வழிமறித்துத் தாலிகட்டிய காலத்தின் எச்சப்பாடாகும்.

ஒரு நூற்றாண்டு முன்வரை சில சாதியரிடத்தில் மணமகள் திருமண நிகழ்ச்சிக்கு வரமுடியாத போது மணமகனை அடையாளப்படுத்த அவன் வைத்திருக்கும் பொருள்களில் ஒன்றைக் கொண்டு வந்து மணமகளின் பக்கத்தில் வைத்து மணமகனின் சகோதரி தாலி கட்டுகிற வழக்கம் இருந்திருக்கிறது. மதுரை மாவட்டம், மேலூர் வட்டத்தில் வாழும் அம்பலக்காரர்களிடத்தில் மணமகனுக்குப் பதிலாக அவனுடைய வளைதடியைக் (வளரியை) கொண்டு போய் அவனுடைய சகோதரி மணப்பெண்ணுக்குத் தாலி கட்டுகிற வழக்கம் இருந்துள்ளது.

மணமகன் இல்லாமலேயே மணமகளுக்குத் தாலி கட்டும் வழக்கம் தமிழகத்தில் இருந்துள்ளது என்பதற்கு இவையெல்லாம் சான்றுகளாகும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாலி என்ற சொல்லின் வேர்ச்சொல்லை இனங்காண முடியவில்லை. ஆனால் தாலி, தாலாட்டு ஆகிய சொற்களைக் கொண்டு "தால்" என்பது தொங்கவிடப்படும் அணி (காதணி, முக்கணி, விரலணி போல) என்று கொள்ளலாம். நமக்குக் கிடைக்கும் தொல்லிலக்கியச் சான்று களிலிருந்து (சங்க இலக்கியங்கள் சிலப்பதிகாரம்) அக்காலத்தில் ஆண் பெண்ணுக்குத் தாலி கட்டும் வழக்கம் இருந்ததில்லை என்றே தோன்றுகிறது. தமிழர் திருமணத்தில் தாலி உண்டா? இல்லையா? ஏன்று தமிழறிஞர்களுக்கு மத்தியில் 1954இல் ஒரு பெரிய விவாதமே நடந்தது. இந்த விவாதத்தைத் தொடங்கி வைத்தவர் கவிஞர் கண்ணதாசன். தாலி தமிழர்களின் தொல் அடையாளம் தான் என வாதிட்ட ஒரே ஒருவர் சிலம்புச்செல்வர் ம.பொ. சி. மட்டுமே.

கி.பி.10ஆம் நூற்றாண்டுவரை தமிழ்நாட்டில் தாலி என்ற பேச்சே கிடையாது என்கிறார் கா.அப்பாத்துரையார், பெரும்புலவர் மதுஜர முதலியாரும், தமிழ் ஆய்வறிஞர் மா.இராசமாணிக் கனாரும் பழந்தமிழர்களிடத்தில் மங்கலத்தாலி வழக்கு கிடையாது என உறுதியுடன் எடுத்துக் கூறினார்.

தொல் பழங்குடி மக்கள் பிள்ளைகளைத் தீயவை அணுகாமல் காப்பதற்குப் பிள்ளைகளின் இடுப்பில் அரைஞாண் கயிற்றில் சில பொருள் களைக் கட்டும் வழக்கம் இரந்தது. அவ்வழக்கம் மிக அண்மைக்காலம் வரை கூட நீடித்தது. இவ்வாறு ஐந்து பொருள்களைப் பிள்ளைகளின் அரைஞாண் கயிற்றில் கட்டுவதை சங்க இலக்கியங் கள் ஐம்படைத் தாலி என்று குறிப்பிடுகின்றன. மிக அண்மைக்காலம் வரையிலும்கூட கிராமப் புறங்களில் குழந்தைகளின் அரைஞாண் கயிற்றில் நாய், சாவி, தாயத்து ஆகிய உருவங்களைச் செய்து கட்டுவது வழக்கமாயிருந்தது.

நந்தனின் சேரிக்குழந்தைகள் அரைஞாண் கயிற்றில் இரும்பு மணி கட்டியிருந்ததாகக் குறிப்பு பெரிய புராணத்தில் உள்ளது.

எனவே, தாலி என்னும் சொல் கழுத்துத் தாலியைத் தொடக்க காலத்தில் குறிப்பிடவில்லை என்பது தெளிவாகின்றது.

கி.பி.7ஆம் நூற்றாண்டில் திருமணச் சடங்குகளை ஒவ்வொன்றாகப் பாடுகின்ற ஆண்டாளின் பாடல்களில் தாலி பற்றிய பேச்சே கிடையாது. மாறாக தான்கொன்ற புலியின் பல்லை எடுத்து வீரத்தின் சின்னமாக ஆண் தன் கழுத்தில் கோர்த்துக் கட்டிக் கொண்டால் அதைப் புலிப்பல் தாலி என்று குறிப்பிட்டுள்ளனர்.

'புலிப்பல் கோத்த புலம்பு மணித்தாலி'
(அகநானூறு)

'புலிப்பல் தாலிப் புன்தலைச் சிறார்'
(புறநானூறு)

இரும்புலி எயிற்றுத் தாலி இடையிடை
மனவுகோத்து' (திருத்தொண்டர் புராணம்).

தமிழ்நாட்டில் ஆதிச்சநல்லூர் உள்பட பல்வேறு இடங்களில் தோண்டி எடுக்கப்பட்ட புதைபொருள்களில் இதுவரை தாலி எதுவும் கிடைக்கவில்லை.

தமிழ்நாட்டில் இப்போது பயன்படுத்தப் பட்டுவரும் தாலிகளில் சிறுதாலி, பெருந்தாலி,

**கி.பி. 10ஆம் நூற்றாண்டு முதலே தமிழகத்தில் பெண்ணின் கழுத்துத்தாலி புனிதப் பொருளாகக் கருதப்பட்டு வந்துள்ளதாகக் கொள்ளலாம். அதன் பின்னரே, கோயில்களிலும் பெண் தெய்வங்களுக்குத் தாலி அணிவிக்கப்பட்டது. திருக்கல்யாண விழாக்களும் நடத்தப்பட்டன. நாளடைவில் தாலி மறுப்பு அல்லது நிராகரிப்பு என்பது கனவிலும் நினைத்துப் பார்க்க முடியாத ஒன்றாக மாறிவிட்டது.**



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

பஞ்சார (கூடு)த்தாலி, மண்டைத் தாலி, நாணல் தாலி (ஞாழல் தாலி) பார்ப்பாரத் தாலி, பொட்டுத் தாலி ஆகியவை பெருவாரியான மக்களால் பயன்படுத்தப்படுபவை ஆகும்.

ஒரு சாதிக்குள்ளேயே அதன் உள்பிரிவுகள் சிறுதாலி, பெருந்தாலி வேறுபாட்டால் அடையாளப் படுத்தப்பட்டன. ஒரு காலத்தில் உணவுசேகரிப்பு நிலையில் வாழ்ந்த சில சாதியார் இன்று வரை கழுத்தில் தாலிக்குப் பதிலாகக் 'காரைக்கயிறு' என்னும் கறுப்புக்கயிறு கட்டிக் கொள்கின்றனர். கழுத்தில் காரை எலும்பை ஒட்டிக் கட்டப்படுவதால் அது காரைக்கயிறு எனப்பெயர் பெற்றது. பார்ப்பாரத் தாலியில் ஒருவகை, பெண்ணின் மார்புகள் போன்ற இரண்டு உருவத்திற்கு நடுவில் ஒரு உலோகப் பொட்டினை வைத்துக் கொள்வதாகும். இது மனிதகுல வரலாற்றில் ஏதோ ஒரு தொல்பழங்குடியினரின் கண்டுபிடிப்பாக இருக்க வேண்டும்.

கி.பி. 10ஆம் நூற்றாண்டு முதலே தமிழகத்தில் பெண்ணின் கழுத்துத்தாலி புனிதப் பொருளாகக் கருதப்பட்டு வந்துள்ளதாகக் கொள்ளலாம். அதன் பின்னரே, கோயில்களிலும் பெண் தெய்வங்களுக்குத் தாலி அணிவிக்கப்பட்டது. திருக்கல்யாண விழாக்களும் நடத்தப்பட்டன. நாளடைவில் தாலி மறுப்பு அல்லது நிராகரிப்பு என்பது கனவிலும் நினைத்துப் பார்க்க முடியாத ஒன்றாக மாறிவிட்டது. தம் குலப் பெண்களுக்கு மேலாடை அணியும் உரிமைகோரி குமரிப்பகுதி நாடார்கள் நடத்திய தோள்சீலைப் போராட்டத்தை ஒடுக்க அன்று நாயர்கள், நாடார் பெண்களின் தாலிகளை அறுத்தனர். அந்த இடம் இன்றும் தாலியறுத்தான் சந்தை என்று வழங்கப் படுகிறது.

இந்தியச் சிந்தனையாளர்களில் தந்தை பெரியார்தான் முதன் முதலில் தாலியை நிராகரித்துப் பேசவும் எழுதவும் தொடங்கினார். அவரது தலைமையில் தாலி இல்லாத திருமணங்கள் நடைபெறத் தொடங்கின. ஆணுக்குப் பெண் தாலி கட்டும் அதிர்ச்சி மதிப்பீட்டு நிகழ்ச்சிகளும் சில இடங்களில் நடந்தன. பின்னர், 1968இல் அண்ணா காலத்தில் நிறைவேற்றப்பட்ட சுயமரியாதைத் திருமணச் சட்டம் தாலி இல்லாத் திருமணத்தைச் சட்டபுர்வமாக அங்கீகரித்தது.

கடைசியாக ஒரு செய்தி சங்க இலக்கியங் களில் தாலி மட்டுமல்ல. பெண்ணுக்குரிய மங்கலப் பொருள்களாக இன்று கருதப்படும் மஞ்சள், குங்குமம் ஆகியவையும் கூட பேசப்படவே இல்லை.

\+ + + +

# நெடு நாட்களுக்குப் பின்னும்....



நெடு நாட்களுக்குப் பின்னும்
ஒட்டிக் கொண்டும் - விலகிக் கொண்டும்
சஞ்சரிக்கும் நினைவுகளின் மோதுகையுடன்
ஊனமாகி விட்ட உணர்வுத் துளியாய்....
பேனாவினுள் இருந்து மை சொட்டுகிறது!

பந்தமில்லாமல் பல ஆண்டுகள்
கழிந்த பின்னும்...
பண்படாத உள்ளம்
பண்பாடற்ற நின் நினைவுகளுடனே
நீச்சலடிப்பது ஏனோ?

நீ அகாலமடைந்து விட்டதான
அசாதாரண செய்தியை
ஐதீகத்துடனே கடந்தாலும்...
உனக்குத் தெரியாமல்
என்னை அறியாமல்
உன்னுடனே வாழ்கிறேன் - சொர்ப்பனத்தில்!

**S. விறௌவ்பி**
மட்/ நாவற்குடா.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெண் தலைமைத்துவக் குடும்பங்கள் எதிர்கொள்ளும் சமூக ரீதியான பிரச்சினைகள்

த. வினோதினி



**தலைமைத்துவம் அறிமுகம்**


தலைமைத்துவம் என்பது பிறப்பிலிருந்து ஒருவருக்குள் நிலைத்திருக்கும் ஆளுமைத்தன்மை என்றே நம்பப்படுகிறது. அந்தவகையில் பெண்களின் தலைமைத்துவம் என்பதும் இன்று உலகெங்கும் வியாபித்திருக்கின்றது. தலைமைத்துவம் என்பதற்கு பல்வேறு ஆய்வாளர்களும் பல்வேறு வரைவிலக் கணங்களை முன்வைத்துள்ளனர். 1974இல் *Stogdill* என்ற அறிஞர் 'எதிர்பார்ப்புகள் மற்றும் இடை வினைகளுக்கு புதிய அமைப்புக்களை உருவாக்கி பேணுவதுதான் தலைமைத்துவம் என்கிறார். ஆயினும் 'ஒரு பொதுவான விடயத்தைச் செய்து முடிப்பதில் மற்றவர்களிடமிருந்து கிடைக்கின்ற உதவி மற்றும் ஆதரவைப் பயன்படுத்தி ஒருவர் சமூகத் தாக்கத்திற்கு ஆளாகின்ற நிகழ்முறை' என்று பொதுவாக வரையறை செய்யப்படுகின்றது.

**பெண் தலைமைத்துவம்**

பெண்களின் தலைமைத்துவமானது இன்றைய தேவைப்பாடான விடயமாகக் காணப்படுகிறது. பெண் தலைமைத்துவம் என்பது பல்வேறு சந்தர்ப்பங்களில் சமூக நிலைப்பாட்டைக் கருதி பெண்களிற்கு பங்களிப்புச் செய்வதால் பெண்கள் தொடர்பாக மேலெழுகின்ற சிக்கல் மற்றும் பிரச்சினைகள் இனங்காணப்படுகின்ற சந்தர்ப்பங்களில் தீர்வு காண்பதற்கு முயற்சிக்கும்போது பெண்களுக்காக பெண்கள் குரலெழுப்புகின்றமை தலைமைத்துவம் எனலாம். இந்நிலையில் உலக மொத்த சனத்தொகையில் அரைவாசியினருக்கும் மேற்பட்டவர்களாக பெண்கள் காணப்படுகின்ற போதும் தலைமைத்துவத்தில் ஒரு சிலரே அங்கம் வகிக்கின்றனர்.

தொழில் ரீதியாக பார்க்கின்றபோது பெண்கள் அனைத்துத் துறைகளிலும் கால்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



ஆண்களைவிட பெண்கள் வலிமை குறைந்தவர்கள் என்ற உடலியல் ரீதியான வேறுபாட்டையும், கலாசார ரீதியில் ஆண், பெண் என்ற உயிரியல் ரீதியான வேறுபாடுகளும் பெண்களுக்கான மட்டுப்பாடுகளும் தலைமைத்துவத்தில் பெண்கள் ஈடுபடுவதற்கு தடையாகவுள்ளது.

பெண்கள், இயல்பாகவே குடும்பத்தின் உள்ளார்ந்த தலைவர்களாக தமது பங்கை ஆற்றிவருகின்ற போதிலும், பெரும்பாலும் குடும்பத் தலைமை ஆண்களிடமே உள்ளது.

பதித்துள்ளனர். ஆனால் தலைமைத்துவத்தினைப் பொறுத்தமட்டில் குறைவானவர்களே காணப்படுகின்றனர். இதற்கு கண்ணாடித்தடை *(Glass ceiling)* என்ற விடயம் காணப்படுவதாகவும், இது சட்டரீதியான தலைமைத்துவத்தை அடையமுடியாமைக்கான மறைமுகத் தடையாக காணப்படுவதாகவும் கூறப்படுகிறது. இது பால்நிலை கட்டுப்பாடுகளையும் குறித்து நிற்கின்றது. ஆண்களைவிட பெண்கள் வலிமை குறைந்தவர்கள் என்ற உடலியல் ரீதியான வேறுபாட்டையும், கலாசார ரீதியில் ஆண், பெண் என்ற உயிரியல் ரீதியான வேறுபாடுகளும் பெண் களுக்கான மட்டுப்பாடுகளும் தலைமைத்துவத்தில் பெண்கள் ஈடுபடுவதற்கு தடையாகவுள்ளது.

குடும்பம் *(Family)* மற்றும் குடும்ப அலகு *(Household)* ஆகிய இரு குடும்ப அமைப்புகளிலும் வேறுபாடுகள் உள்ளன. குடும்பம், ஓர் சமூக நிறுவனம் ஆகும்.இதன் தனித்துவமான செயற் பாடாக வாரிசுகளை உருவாக்குதல் அடங்குகின்றது. குடும்ப அலகு என்று கூறும்போது இது ஓர் வதிவிட அலகாக பொருளாதார உற்பத்தி, நுகர்வு, சொத்துரிமை, குழந்தைகளைப் பராமரித்தல், மற்றும் வாழ் ஒழுங்கு முறைமைகள் ஒழுங்கு படுத்தப்பட்ட வகையில் அமைவதாக உள்ளது. இது குடும்பத்துடன் இசைவானதாகவோ அன்றி இசைவில்லாததாகவோ இருக்கலாம்.

குடும்பத்தின் தலைமை பெரும்பாலும் குடும்பத்தில் அல்லது குடும்ப அலகில் அதிக அதிகாரம் கொண்ட நபருக்கே உரித்தாகின்றது. குடும்பத்தின் பொதுவான விவகாரங்களில் தீர்மானம் எடுத்தல் உட்பட குடும்பத்தைக் கட்டுப் படுத்தும் அதிகாரம் கொண்ட குடும்ப அங்கத்தவரே குடும்ப தலைவராக கொள்ளப்படுகின்றது. ஆயினும் பெண்கள், இயல்பாகவே குடும்பத்தின் உள்ளார்ந்த தலைவர்களாக தமது பங்கை ஆற்றிவருகின்ற போதிலும், பெரும்பாலும் குடும்பத் தலைமை ஆண்களிடமே உள்ளது.

இன்றைய உலகில் குடும்பம் என்ற சமூக நிறுவனத்தினை வழிநடத்துபவர்களாக பெண்களும் காணப்படுகின்றனர். பெண்கள் தலைமைக் குடும்பம் என்பது 'ஆண்கள் துணையில்லாத குடும்பத்தினை பெண்கள் பொருளாதார மற்றும் ஏனைய விடயங்களையும் தாமே ஏற்று வழிநடத்தலாகும்' என எம்.என்.மரீட் *(M.N. Marrid)* என்ற அறிஞர் கூறுகிறார். *Conflict and Womens status in the north and east of Sri lanka* எனும் ஆய்வுக் கட்டுரையில் 'பெண் தலைமைக் குடும்பங்கள் சமூக, பொருளாதார, அரசியல், கலாசார ரீதியிலான பாதிப்புக்களுக்கு உட்பட்டுள்ளார்கள் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

அண்மைக் காலத்தில் புதிய வகையான குடும்ப அமைப்புமுறை ஒன்று உருவாகியுள்ளது. பெண்கள் தலைமை தாங்கும் குடும்பங்களின் தோற்றப்பாடு உலகளாவிய ரீதியில் பிரபல்யம் அடைந்துள்ளது. அபிவிருத்தியடைந்துவரும் நாடுகளில் பெண்கள் தலைமை தாங்கும் குடும்பங்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது. உலக நாடுகளில் இவ்வாறு அதிகரித்துவரும் பெண் தலைமைத்துவ குடும்பங்கள் காரணமாக தலைமைப் பொறுப்பேற்கும் பெண்கள், அவர்களது குடும்பங்களில் முக்கியமானவர்களாக கருதப்படு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வதோடு பெண்கள்சார் பிரச்சினைகளில் இவர்களது பங்கு கணிசமான முக்கியத்துவத்தைக் கொடுத்துள்ளது.

குடும்பத்தில் பெண் ஒருவர் மணப்பிரிகை, கணவனை விட்டுப் பிரிந்திருத்தல், வெளிநாடு செல்லுதல், திருமணமாகாமை, கணவன் இறத்தல் அன்றி கணவன் இருந்தபோதிலும் குடும்ப வருமானத்தில் பங்கு கொள்ளாமை போன்ற காரணங்களினால் தனியாக குடும்ப சுமையை ஏற்க நேரிடுகின்றது. இக்காரணங்கள் யாவும் ஓர் குடும்பச் சூழலில் இடம்பெறும் நிகழ்வுகளாக இருந்த போதிலும், பெண் தலைமைத்துவ குடும்பங்கள் சடுதியாக அதிகரிப்பதற்கு ஆண்கள் வெளிநாடுகளுக்கு செல்லுதல், உள்நாட்டுப்போர் காரணமாக ஆண்கள் இறத்தல், மணப்பிரிகை, குடும்ப சிதைவுகள் போன்றவையும் பிரதான காரணங்களாக அமைகின்றன.

**பெண்கள் தலைமை தாங்குவதற்கான பிரதான காரணங்கள்**

- போர்
- கணவன் நோய்வாய்ப்பட்டிருத்தல்
- கணவன் இறந்துபோதல்
- கணவனின் அங்கவீனம்
- கணவனை பிரிந்திருத்தல்
- கணவன் வெளிநாட்டில் இருத்தல்
- பெற்றோரை இழந்த மூத்த ஆண் இல்லாத குடும்பம்
- குடும்ப வருமானத்தில் கணவனின் பங்களிப்பு இன்மை

போன்றவற்றைக் குறிப்பிடலாம். இச்சந்தர்ப்பத்தில் பெண் தலைமைக் குடும்பங்கள் சமூக ரீதியாகப் பல்வேறு பிரச்சினைகளை எதிர்கொள்கின்றார்கள். அவற்றில் பிரதானமாக,

- பொருளாதாரம் தொடர்பான பிரச்சினைகள்
- பாதுகாப்புத் தொடர்பான பிரச்சினைகள்
- உளவியல் சார்ந்த பிரச்சினைகள்
- தலைமைத்துவம்/தீர்மானம் எடுத்தல் பிரச்சினைகள்
- கல்வியடிப்படையிலமைந்த பிரச்சினைகள்
- கலாசார ரீதியான பிரச்சினைகள்
- தொழில் சமத்துவமின்மை
- உடலியல் ரீதியிலான பிரச்சினைகள்
- பெண்கள் தலைமைதாங்கும் குடும்பங்களில் பெண்கள் வேலைக்குச் செல்வதால் ஏற்படுகின்ற பிரச்சினைகள்
- பெண்கள் வேலைக்குச் செல்வதால் பெரும்பாலும் குடும்ப நடவடிக்கைகள் பாதிக்கப்படுவதோடு குறிப்பாக சிறுவர்கள் பாதிக்கப்படுகிறார்கள்.
- சிறுவர்களுக்கு சரியான நேரத்தில் உணவு கிடைப்பதில்லை
- சிறுவர்களின் கல்வி பாதிப்படைவதோடு அவர்களின் எதிர்காலமும் கேள்விக்குள்ளாக்கப்படுகின்றது.
- சிறுவர்களின் பராமரிப்பு குறைவதால் அவர்கள் உடல், உளவியல் தாக்கங்களுக்கு ஆளாகின்றனர்.
- சிறுவர்கள் பாலியல் துஷ்பிரயோகத்திற்கு உள்ளாவதற்கும் காரணமாகிறது.
- சிறுவர்கள் பெரும்பாலும் வழிதவறிப் போவதற்கான வாய்ப்பினையும் ஏற்படுத்திக் கொடுக்கிறது.

**உளவியல் ரீதியான பிரச்சினைகள்**

பெண்களும் பெண்தலைமைக் குடும்பங்களும் உளவியல் ரீதியாக பல பிரச்சினைகளை எதிர் கொள்கின்றனர். இதில் மனச்சோர்வு என்பது முக்கியம் பெறுகின்றது. இழப்பு அல்லது பாதகமான சூழ்நிலை காரணமாக ஏற்படும் துக்கம் வழமைக்கு மாறாக அதிகளவு காலத்திற்கு நிலைத்து காணப்படின் அது மனச்சோர்வு எனப்படுகிறது. இந்த மனச்சோர்வானது தொடர்ச்சியாக ஏற்படும் போது கவலை, இன்பத்தை இழத்தல், ஆர்வம் இன்மை என்பவற்றை ஏற்படுத்தும்.

பெண் தலைமையாளர்கள் என்பதன் காரணமாக மனநிலை ரீதியாகப் பாதிக்கப்படுகின்றார்கள். தனிக் குடும்ப அமைப்பில் வாழ்வதன் காரணமாகத் தமது உணர்வுகளை வெளிப்படுத்த முடியாமற் போகின்றது. அதிலும் ஆண் துணைவர் இல்லாமையின் காரணமாகத் தமது சந்தோசமாயினும் சரி, கவலைகளாயினும் சரி வெளிப்படுத்த முடியாத நிலையில் மனதிற்குள்ளேயே அடக்கிவைத்துள்ளார்கள். கவலைகள், சோகங்களை வெளியில் சொல்லாமல் இருப்பதன் காரணமாக மன அழுத்தங்கள் ஏற்படுகின்றன. இதனால் தலைவலி, தலைசுற்று, குருதிச்சோகை முதலான நோய்கள் ஏற்படுகின்றன.


அதுமட்டுமன்றி தனித்துக் குடும்பப் பொறுப்புக்களை மேற்கொள்வதன் காரணமாகவும் அவற்றை எவ்வாறு சமாளிக்கப் போகின்றோம் என்கின்ற யோசனைகள், மற்றும் மனவருத்தங்கள் முதலானவை உணவு முறைகளில் மாற்றங்களை ஏற்படுத்துகின்றது. உணவில் விருப்பமின்மைகள், நேரத்திற்கு உணவு உண்ணாமை, உணவு உண்ணுதலின் அளவுகளைக் குறைத்தல் முதலானவை ஏற்படுவதுடன் அவை அவர்களினுடைய உடலைப் பாதிப்பதாகவும் அமைந்துள்ளது.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## உடலியல் ரீதியான பிரச்சினைகள்

இளமையான வயதிலேயே குடும்பத் தலைவனை இழந்தமையின் காரணமாக மனித உயிரிக்கு இயல்பாகவே ஏற்படுகின்ற பாலியல் ரீதியான உந்துதல்களிற்கு உட்பட்டோராகக் காணப்பட்டாலும் தமது உடலியல் சார்பான தேவைகளைப் பூர்த்தி செய்ய முடியாத நிலைமையில் காணப்படு கின்றார்கள்.

தமது பாலியல் ரீதியான தேவைகளை நிறைவேற்றுவதற்காக மறுமணம் புரிதலுக்கான சந்தர்ப்பங்களைச் சமய மற்றும் சமூக ரீதியான பாரம்பரியங்கள் தடை செய்கின்றமையால் அத் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்காக சமூக அங்கீகாரமற்ற செயற்பாடுகளிற்குள் தம்மை ஈடுபடுத்திக் கொள்கின்றார்கள். இதன் காரணமாகத் தவறான பாலியல் உந்துதல்கள் ஏற்படுவதற்கும், தவறான உறவு நிலைகள் ஏற்படவும் காரணமாக அமைகின்றது. சமூகத்திற்கு வெளிப் படுத்தாத நிலைமையுடையவர்களாகப் பெண் தலைமைக் குடும்பங்கள் காணப்படுகின்றார்கள்.



பெண்களைக் கலாசார ரீதியாகப் பாதிப்பதில் கணவனை இழந்த பெண்கள் முக்கியம் பெறுகின்றனர். 'கணவன் இறந்து போதல் என்பது இயற்கையிலே ஏற்பட்டுவருகின்ற விபத்து இதற்கு எந்தவிதத்தில் பெண் காரணமாவாள்? ஒரு பெண் எதற்காக விதவையாக இருக்க வேண்டும் என்பதற்கு இதுவரை யாராவது காரணம் சொன்னார்களா?' என்று ஈ.வே.ரா பெரியார் கூறினார். ஒரு பெண்ணினுடைய கணவன் இறந்ததும் அவளுக்கு கைம்பெண் என்ற பட்டம் வழங்கப்படுகின்றது.

## தீர்மானம் எடுத்தல் பிரச்சினைகள்

சிறுவயதில் இருந்தே பால்நிலை ரீதியாக பாரபட்சம் காட்டப்படுகின்றமையினால் பெண்கள் இளமைப் பருவத்திலே பிதாவினாலும் யௌவனப் பருவத்திலே கணவனாலும் மூப்பிலே புத்திரனாலும் காக்கத்தக்கவர்கள் ஆகையால், ஒருபோதும் பெண்கள் சுயாதீனரல்ல, தீர்மானமும் எடுக்கக் கூடியவரல்ல எனக் கூறப்படுகின்றது. ஒரு நிறுவனம் அல்லது தலைமைத்துவம் என்பது ஒரு நபர் அல்லது ஒரு குழு தனது பொதுவான நோக்கத்தினை அடைந்து கொள்ளும் பொருட்டு குறித்த குழுவின் மீது அழுத்தம் கொடுக்கும் வகையில் அதிகாரம் செலுத்துவதாகும். தீர்மானம் எடுத்தல் என்பது ஒரு குறிப்பிட்ட விடயம் தொடர்பாக அல்லது நிகழ்வு தொடர்பாக எடுக்கும் இறுதி முடிவாகும். இதில் அதிகாரம் என்பது முக்கியம் பெறுகின்றது. இந்த அதிகாரம் ஆனது ஆலோசனை அதிகாரம், எதேச்சையதிகாரம், சட்டரீதியான அதிகாரம், ஆளுமை காரணமாக கிடைக்கும் அதிகாரம், விசேட அதிகாரம் என்றவாறு பிரிக்கப்பட்டுள்ளன. இவ்வகையில் பெண்கள் அதிகாரம் அற்றவர் களாகவே காணப்படுகின்றனர். ஏனெனில் அதிகாரம் இருந்தால் தலைமைத்துவமும், அதன் காரணமாக தீர்மானம் எடுக்கும் உரிமையும் வந்து சேரும். அத்துடன் பெண்ணானவள் வீட்டைப் பராமரிக்கவும், பிள்ளைகளை வளர்க்கும் கடமைகளைக் கொண் டிருப்பதால் குறைந்த பதவியிலேயே தொடர்ந்தும் நிலைத்து நிற்க விரும்புகின்றனர். இவ்வாறு குடும்பங்கள் மற்றும் பிள்ளைகள் போன்றவற்றினால் தீர்மானம் எடுக்க முடியாதவர்களாகக் காணப் படுகின்றனர்.

## கலாசார ரீதியான பிரச்சினைகள்

பெண்கள் கலாசார ரீதியாகப் பாதிப்பதில் கணவனை இழந்த பெண்கள் முக்கியம் பெறுகின்றனர். 'கணவன் இறந்து போதல் என்பது இயற்கையிலே ஏற்பட்டுவருகின்ற விபத்து இதற்கு எந்தவிதத்தில் பெண் காரணமாவாள்? ஒரு பெண் எதற்காக விதவையாக இருக்க வேண்டும் என்பதற்கு இதுவரை யாராவது காரணம் சொன்னார்களா?' என்று ஈ.வே.ரா பெரியார் கூறினார். ஒரு பெண்ணினுடைய கணவன் இறந்ததும் அவளுக்கு கைம்பெண் என்ற பட்டம் வழங்கப்படுகின்றது. அத்துடன் சமூகச் சடங்குகளில் இருந்து ஒதுக்கப்படுவதுடன்,


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

ஆண்களின் தேவையற்ற தொந்தரவுகளுக்கும் ஆளாகின்றாள்.

இவ்வாறு பல பிரச்சினைகளைச் சந்திக்கின்ற பெண்கள் அவற்றிலிருந்து விடுபடுவதற்காக பல்வேறு நிகழ்ச்சித்திட்டங்களும் முன்னெடுக்கப் படுகின்றது. அவையாவன:

பெண் தலைமைத்துவ குடும்பங்களில் தலைமைதாங்கும் பெண்களை வலுப்படுத்தல் பெண்களை வலுப்படுத்தல் என்ற எண்ணக்கருவில், சமூகத்தில் பொருளாதார மட்டத்தில் வலுப்படுத்தல் முன்னுரிமை பெறுகின்றது. 1985இல் பெண்கள் தொடர்பான நைரோபி மாநாட்டில் பெண்கள் வலுவூட்டலை மையமாகக் கொண்ட ஐந்து எண்ணக்கருக்களை இங்கே முன்வைக்கலாம்.

- பெண்கள் தம்மை பெறுமதி மிக்கவர்களாக உணர்தல்
- தமது விருப்புக்களை தெரிவு செய்யும் உரிமை
- தமது சொந்தவாழ்வை கட்டுப்படுத்தும் உரிமை
- பொருளாதார வாய்ப்புக்களை பெறுவதற்கான உரிமை
- பொருளாதார ஒழுங்கை உருவாக்குவதன் மூலம் ஓர் சமூக மாற்றத்தை செயற்படுத்தும் வழிகாட்டியாக செல்வாக்கு செலுத்தக்கூடிய ஆற்றல்

சாராலோங்லே என்பவரால் உருவமைக் கப்பட்ட பெண்களின் வலுவூட்டல் சட்டகத்தினை ஐ.நா சிறுவர் கல்விக்கான நிதியம் ஏற்றுக் கொண்டுள்ளது. இவ்வறிக்கையில் பெண்களை அபிவிருத்தியின் மையச்செயற்பாடுகளோடு இணைத்து கூறப்பட்டுள்ளது. இச்செயற்பாட்டினை நலன்பேணல், அடைதல், விழிப்புணர்வினைக் கூட்டுதல், கட்டுப்பாடு, பங்குபற்றல் போன்ற 5 மட்டங்களில் ஏற்படுத்த முடியும். பெண்கள் சமூக ரீதியாக வலுப்படுத்தும் பிரிவு எனும் அமைப்பின்கீழ் பெண்களிடம் உள்ள அறிவு திறன் இயலுமைகள் மற்றும் சந்தர்ப்பங்களை அபிவிருத்தி செய்து அவர்களை சமூகத்தில் வலுவான நபர்களாக உருவாக்குதல் பெண்கள் சமூக ரீதியாக வலுப் படுத்தும் நிகழ்ச்சித் திட்டத்தின் குறிக்கோளாகும். இதன்கீழ் சில குறிப்பிட்ட நிகழ்ச்சித்திட்டங்கள் அமுல்படுத்தப்பட்டுள்ளன.

- கால்நடை நிகழ்ச்சித்திட்டம்
- சுழற்சிக் கடன் நிகழ்ச்சித்திட்டம்
- முயற்சியாண்மைப் பயிற்சி நிகழ்ச்சித்திட்டம்
- வனிதா சக்தி அமைப்பு
- பெண்கள் உற்பத்திக் கண்காட்சி மற்றும் விற்பனை நிகழ்ச்சித்திட்டம்




**பெண்கள் தம்மை பெறுமதி மிக்கவர்களாக உணர்தல், தமது விருப்புக்களை தெரிவு செய்யும் உரிமை, தமது சொந்தவாழ்வை கட்டுப்படுத்தும் உரிமை, பொருளாதார வாய்ப்புக்களை பெறுவதற்கான உரிமை பொருளாதார ஒழுங்கை உருவாக்குவதன் மூலம் ஓர் சமூக மாற்றத்தை செயற் படுத்தும் வழிகாட்டியாக செல்வாக்கு செலுத்தக்கூடிய ஆற்றல்**

- வீட்டுத்தோட்ட நிகழ்ச்சித்திட்டம்
- விதவை மற்றும் வீட்டுத் தலைமைத்துவம் வகிக்கின்ற பெண்களை பொருளாதார ரீதியாக வலுப்படுத்தும் நிகழ்ச்சித்திட்டம்
- அரவணைப்பு நிலையங்களை அமைத்தல் மற்றும் ஆலோசனை நிகழ்ச்சித்திட்டம்
- பெண்களுக்கும் பிள்ளைகளுக்கும் எதிரான துன்புறுத்தல்கள் மற்றும் மனித கடத்தல்களை இல்லாதொழிப்பதற்கான நிகழ்ச்சித்திட்டங்கள்
- புதிய யுவதிகளின் வாழ்வாதாரத் திறன் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்கள்
- முதியோர் பெண்கள் வள நிலையத்தை அமைத்தல் மற்றும் முதியோர் பெண்கள் நிகழ்ச்சித்திட்டம்
- பெண்களை நிறுவனமயப்படுத்துவதற்கான செயற்பாடுகள்

ஆகவே பெண்கள் இவ்வாறாக வலுவூட்டப் படும்போது அவர்கள் மத்தியில் விழிப்புணர்வு ஏற்படுவதோடு ஜனநாயகம், பெண்கள் உரிமை தொடர்பான விடயங்களில் பிரசார நடவடிக்கைகள் ஏற்படுத்துவதோடு கல்வி, தொடர்பாடல் நிலைமை களில் வலுவூட்டப்பட்டு வீட்டு வன்முறை போன்ற பெண்களைப் பாதிக்கும் விடயங்களில் இருந்து மீள்வதற்கு துரிதமாக செயற்படமுடியும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




"ஒரு காலத்தில் வீரப் பெண்ணாய் வலம் வந்தவள்.....தனக்குக் கீழ் பல வீரர்கள் இருந்தாய்க் கூறி சந்தோசப்பட்டவள்... அந்த உலகம் இன்றும் எங்கோ இருப்பதாய் நினைப்பவள்.... இப்போ வீரத் தழும்பு மட்டும் கன்னத்தில், கையில், காலில் என துருத்திக்கொண்டிருந்தது. தனது முகம் இத் தழும்புகளால் அசிங்கமாய் இருக்கிறது என்று பின்னாட்களில் கவலைப்பட்டாள்."

- விஜயலட்சுமி சேகர்

# தாய்மை? கெட்ட தாய்மை?

மனது மீண்டும் ஒரு சாபத்திற்கு தயார் ஆனது..."பக்கத்தில் பெண் இருக்கையில் காலை அகட்டி இருப்பவன் காலெல்லாம்..." ஐயோ பாவம் கால் இல்லாமல் போவது கவலை. இவனுகளுக்கு எப்படி சாபம் இடலாம் மனம் சிந்தித்தது. இருந்த இடத்திலேயே இப்பவே கால் சுளுக்கிடனும். எழும்ப மட்டும் அசைக்கவே முடியாம இவன் காலை வைச்சிருக்கணும். இன்னும் தள்ளித் தள்ளி இருந்தால் வஸ் பிரேக் போடுகையில் குலுங்குகையில் சீட்டில் இருந்து கீழ விழத்தான் வேணும். போதாக் குறைக்கு கண்டெக்டர் வேற அடிக்கடி போய் வரக்குள்ள காலில் இடிச்சு இடிச்சே போய் வர வேண்டியிருக்கு... அகல விரிச்சி இருக்கும் கால கொஞ்சம் ஒடுக்கினா, என்ன...சே... இவனுக்கு கால் போனாலும் பரவாயில்ல மனம் கோபப்பட்டது.

ஜன்னலோர இருக்கையில் இருந்தவன் தான் மட்டுமே அந்த இருக்கைக்கு உரித்துடையவனாய் எந்தவித பிரக்ஞையும் அற்று காலை விரித்து வைத்தபடி இருந்து கொண்டிருந்தான்... இது அவன்கள் உலகம்...

இப்போது பஸ் நின்றது. மெதுவாய் அவள் ஏறினாள். எப்படியும் அவளுக்கு 6 அல்லது 7 மாதம் இருக்கும். பெரிய வயிறு. அவளுக்கு இடம் கொடுக்க வேண்டும். என்றாலும் எனது சீட்டில்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




எப்படி இவள் என்னைப்போல் விழுந்து விடாமல் கைப்பிடியை பிடித்துக்கொண்டு தொங்கிக்கொண்டு வர முடியும். மூலைக்குள் முழு இடத்தையும் பிடித்துக்கொண்டு கண்ணை மூடிக்கொண்டு வரும் இந்த பிராணி எழும்பினால் எவ்வளவு நல்லம். ஜன்னலோரம் இருப்பவர்கள் எழும்பத் தேவை யில்லை என்பது எழுதப்படாத பஸ் நியதியோ சட்டமோ ஏதோ ஒன்று. ஆனால் எழும்பி இடம் கொடுப்பவர்களில் பலர் மனிதாபிமானத்தின் அடிப் படையில் இல்லை என்பதுதான் மனவருத்தம். கையில் பிள்ளைகளைச் சுமந்து வரும் பெண்களுக்கு எழும்பி இடம் கொடுக்கும் பலர் முணு முணுத்துக் கொண்டே எழும்புவது அல்லது மற்றவர்களால் கட்டாயமாக எழுப்பப்படுவது ......பல நாள் கண்டுள்ளேன்.

நல்ல வேளை முன் சீட்டில் அமர்ந்திருந்த ரியூசன் செல்லும் பெடியன் எழ அப் பெண் இருக்கிறாள்.


"தாய்" பரவாயில்லை. அதற்கு மட்டும் ஒரு மரியாதை. உடனே எழும்பி இடம் கொடுக்கிறார்கள். பாவம் மணிமலர் நேற்று எப்படி கூனிக் குறுகி நின்றாள். நான் தொட்டதும் அவள் அழுத அழுகை. "நான் பிழ செஞ்சித்தன் அக்கா...அதுதான் நான் உங்களிட்ட சொல்ல முடியல்ல...வீட்டாக்கள் என்ன வர வேண்டாம் என்டுத்தாங்க... மகனையும் பாக்க முடியல்ல... எப்படி மற்றாக்களிட முகத்தில... உங்க வீட்டயும் வர முடியல்ல...நான் பிழ செஞ்சித்தன்...

குடிக்கிறதுக்கு என்னவோ தந்தான்...நான் மயங்கித்தன்...எனக்கு ஒன்டும் தெரியலக்கா..... நான் வேல செய்யிற வீட்டுக்கு முன்னால இருக்கிற ரீச்சர்ர அவர்தான்..."

மணிமலர் நான் கேட்காமல் தன்னை நிருபித்துக்கொள்ள முயற்சிப்பது, அதனை நான் நிறுத்த வேண்டும். . இவள் பயப்படுகிறாள்.. நானும் இவளைக் குறை கூறப் போகிறேன் என்று எச்சரிக்கையாய் இருக்க கஸ்டப்படுகிறாள். "போதும்டி" என்பதுபோல் தோளைத் தட்டுகிறேன். அழுகிறாள்.

ஒரு காலத்தில் வீரப் பெண்ணாய் வலம் வந்தவள்.....தனக்குக் கீழ் பல வீரர்கள் இருந்தாய்க் கூறி சந்தோசப்பட்டவள்...அந்த உலகம் இன்றும் எங்கோ இருப்பதாய் நினைப்பவள் .....இப்போ வீரத் தழும்பு மட்டும் கன்னத்தில், கையில், காலில் என துருத்திக்கொண்டிருந்தது. தனது முகம் இத் தழும்புகளால் அசிங்கமாய் இருக்கு என்று பின்னாட்களில் கவலைப்பட்டாள். அத் தழும்பை மறைக்க வைத்தியர்களிடம் சென்றாள், என்றாலும் அது ஆபத்தானது என்றும் பயந்தாள். தற்போது பல உதாசீனங்களுக்கு மத்தியிலும் அவ் வீரத் தழும்புகளை "பாவப் பட்ட ஜென்மம்" என்ற சான்றிதழ் எடுக்கவும் அதன் மூலம் அரசின் உதவி பெறவும் முயற்றி செய்து கொண்டிருப்பவள்.... கொஞ்ச காலமாய் நான் குடியிருக்கும் இடத்திற்கு இவள் வரவில்லை. பிறகுதான் கேள்விப்பட்டன் அவள் கர்ப்பமாய் உள்ளதை. 0"அவளுக்கு 7 அல்லது 8 மாதம் இருக்கும் எனவும், எந்தப் பெரிய வயிறு, இவ்வளவு நாளும் மறைச்சித்தானே வந்து போனாள் என்றும், நான் சந்தேகப்பட்டன்.. வஸ் ஸ்டாண்ட்டில அவளக் கண்டு கூப்பிட்டன் ஒழிஞ்சி ஒழிஞ்சி போனாள் என்றும் இவளுக்கு இது தேவையா, நான் பாத்திருக்கன் அவள் ஆரோ ஒரு பெடியனுடன் புதுக்குடியிருப்பில போனத என்றும்.... அவளுக்கு ஒரு பொடியன்ட தொடர்பு உண்டு என்றும்.. எல்லாத்தையம் மறைச்சி

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



தன் முகத்தையும் ரசிக்கும் ஒரு மனம், அரவணைப்பு, காதல் மொழி, தன்னையும் எதிர்பார்க்கும் ஒரு ஆள், தனக்காக நேரம் செலவிடும் ஒரு மனித வடிவம், அன்பான வார்த்தைகள், அது தனக்கும் தனக்காக மட்டுமே இவ் உலகத்தின் ஒரு இடத்தில் இருப்பது....தான் சாப்பிட்டதை பற்றியும் தன் களைப்புப் பற்றியும் உடல் நோ பற்றியும் வினாவும் அக்கறை.... அவள் விரும்புவாள்.

அவள் ஒருத்தனைக் காதலித்திருக்கக்கூடும் அவன் திருமணமானவன் என்றாலும்.

மணிமலர் தாய்மை அடைந்து விட்டாள். என் முன்னால் உள்ளவளும் தாய்மை அடைந்து விட்டாள். தற்போது தெரிவது இவளது வயிறு மட்டுமே... இவளது இவளைச் சுற்றிக் கதைகள் இல்லை. ஆகவே சமூகத்தின் உயர் பதவியான "தாய்மை" எனும் இடத்தில் இவள். இவள் முனகலுக்கும் மதிப்புண்டு.

"நோ"க்காடு வந்தா நம்பட ஆஸ்பத்திரிக்கு வந்திராத என்று மணிமலரின் தாய் சொல்லி விட்டதாக சொல்லி அழுதாள். வயிற்றில் உள்ள உயிரை வெளியிட இடம் தேடி நிறையவே கஸ்டப்பட்டுத்தாள்.

எப்படி நல்ல மனிசி மாதிரி வந்து போனாள்... நாம பாவம் பாத்தமே அவளுக்கு.... இனி எப்படி முகத்தில முளிப்பாவோ என்றும் என்னைச் சுற்றி பேசிக் கொண்டார்கள்.

இவளுக்கும் அவளுக்கும் என்ன வித்தியாசம். இவளும் அவளைப்போல் ஒரு குழந்தையை சுமக்கிறாள். "தாய்மை" அந்த எண்ணக் கருவிற்கு எமது சமூகத்தில் வழங்கப் பட்டிருக்கும் தகுதி.

என் நண்பி திருமணமாகி 6 வருடத்திற்கு மேல். குழந்தை இல்லை. அவள் தற்போது சனம் கூடும் இடங்களுக்கச் செல்வதில்லை "ஏன்டி யாருமே இல்லாத விடியக்கால நேரத்தில கோயிலுக்குப் போய் கர்ப்பூரச் சட்டி எடுக்கனும், நேற்றுப் பின்னேரம் சடங்கு நேரத்தில எடுத்திருக்கலாமே... நான் கற்பூரம் போட்டிருப்பன் என்று ஒருநாள் நண்பியிடம் நான் கேட்டதற்கு "சனத்தப் பாக்கவே பிடிக்கல்லடி.. "என்ன இன்னம் விஸேசம் ஒன்றும் இல்லயா.?' என்று வேணும் எண்டே கேக்குதுகள்" பிள்ள இல்லாதத குத்திக் குத்திக் காட்டுதுகள்... "தாய்மை"..?

மணிமலரும் அவள் வயிறும் அவள் கண்ணீரும்..."வடிவில்லை" என்று தானே ஒதுக்கிய பாச உணர்வுடன் வகுப்பில் உள்ள மாணவிகளை நேசிக்கும் என் நண்பி வயிற்றில் உயிரைச் சுமக்காதது தான் விட்ட பெரிய பிழையாய் ஒழிந்து வாழும் நிலை.

சிறிது மாதங்களின் பின் முன் சீட்டில் இருப்பவள் இடம் இல்லாமல் கால் கடுக்க வஸ்சில் நிற்க வேண்டிவரும்.

தாய், தாய்மை, பெரிய வயிறு...பெரிதாய் கொண்டே வர பெண்கள் ...அவர்கள் வலிகள், உணர்வுகள் மறைந்து விட்டார்கள்.

குறட்டைச் சத்தம் காதில் விழும்படி காலை விரித்துப் போட்டவாறு நல்ல நிம்மதியாய் தூங்குபவனைப் பார்க்கிறேன்...ஒரு வேளை இவன் மணிமலரின் காதலனாக இருக்கலாம் அல்லது இவன் போல் அவனும் எங்கோ நிம்மதியாய் இருக்கலாம். இவனும் அவன்போல் ஒருத்தனாயும் இருக்கலாம்..

சுதந்திரமாய் விரிந்த அவன் கால் மீண்டும் கொஞ்சம் இடத்தைப் பிடிக்க, விழுந்து விடாமல் கைப்பிடியைப் பிடித்தபடி மீண்டும் ஒதுங்குகிறேன்.

+ + + +


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

ஞா.டிலோசினி
கிழக்குப்பல்கலைக்கழகம்

# விழித்திடு பெண்ணே



விழித்திடு பெண்ணே!
பண்டைக் காலம் தொட்டே
மண்ணுக்குக் கேடாய் மதித்த – உன்னை
மாட்சி கொண்டு வையம் புகழ
மாண்பு மிகு புதுமைகள் படைத்திட விழித்திடு!

பாரில் சாதனை படைத்த பலர் – உன்னினம்
உலகம் அறியாது நீ    தினம்
முயலாமையால் தோற்காதே!
தோற்றாலும் முயன்று முயன்று முன்னேற
வீறு கொண்டு விழித்திடு!

மாதா பிதா குரு தெய்வ வரிசையில்
முதலிடம் உனக்கே உண்டு
கல்வி பொருளாதாரம் அரசியல் – என
எத்துறையிலும் முன்னிலை பெற விழித்திடு!

வீதியில் பெண்ணியம் பேசிவிட்டு
ஆணாதிக்கத்துக்கு அடிமையாகி விடாதே!
சாத்திரங்கள் பல கற்று – நீ
சாதனை மிகு புரட்சிப் பெண்ணாகி
உலகையாள விழித்திடு!

கல்வியில்லாப் பெண் களர் நிலம்
நீ கழனியாக வேண்டும் பூவுலகில்
உன் வீடு சமூகம் நாடு முன்னேற
உயர் கல்வி பட்டம் பெற்றிட விழித்திடு!

சோதனை பல தாண்டி
சாதனை பல படைக்க
வீரப்பெண் நீயாக வேண்டும்
விசித்திரம் மிக்க விந்தை புரிய
தன்னம்பிக்கை கொண்டு விழித்திடு!

பாலியல் பலாத்காரம் – எனும்
பண்பற்ற கொடுமையால்
பச்சிளம் சிறுமி தொடக்கம்...
நாளுக்கு நாள் பாதிக்கப்படும் பெண்ணினம்
அணிதிரண்டு ஒன்றாக
பால்நிலைச் சமத்துவம் பேச விழித்திடு!

வேலியே பயிரை மேயும் காலமிது
வெகுண்டு நாயம் கேட்க நாதியில்லை
வேடிக்கை பார்த்து தூற்றும் சமூகத்தில்
உனக்கு நீயே காவலாக விழித்திடு!

துர்புத்தி துரோக மனிதரால் பாழாகி
பத்திரிகை தொடங்கி
நவீன ஊடகங்களால் பரவலாகி
சீரழியும் உன் உன்னத வாழ்வு
சீர் பெற்று மேலோங்க விழித்திடு!

சமூக வலைத்தளம் தனில்
பெருகிய செய்தி தினம்
பெண் தற்கொலை தற்கொலை
ஏன் நீ மாய வேண்டும்
வாழப் பிறந்தவள் நீ
வழியா இல்லை பூமியில் விழித்திடு!
உனக்குண்டு இனிய சுதந்திரம்
உனக்குண்டு உரிமை – அதிலும்
பெண்ணுரிமைச் சிறப்புண்டு
எத்துறையிலும் சாதிக்க சமவாய்ப்புண்டு
பயனடைவது உன் கையில்
விழித்திடு பெண்ணே! விழித்திடு!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பேரா.செ.யோகராஜா

# அறியப்படாத மலையக வாய்மொழிப் பெண்புலவர்கள்

**ஈழத்து மலையக வாய்மொழிப் புலவர்களுள் ஆண்புலவர்கள் அறியப்பட்டளவிற்கு பெண்புலவர்கள் அவ்வளவு தூரம் அறியப்படவில்லை. இவ்விதத்தில் முக்கியமான இருவர் பற்றி அறிவது அவசியமானது. ஏனெனில் இவர்களூடாக மலையக வாய்மொழிப் புலவர்களது தனித்துவ இயல்புகளை இனங்காண்பதற்கு வாய்ப்பேற்படுகின்றது**

ஈழத்து மலையக வாய்மொழிப் புலவர்களுள் ஆண்புலவர்கள் அறியப்பட்டளவிற்கு பெண்புலவர்கள் அவ்வளவுதூரம் அறியப் படவில்லை. இவ்விதத்தில் முக்கியமான இருவர் பற்றி அறிவது அவசியமானது. ஏனெனில் இவர்களூடாக மலையக வாய்மொழிப் புலவர்களது தனித்துவ இயல்புகளை இனங்காண்பதற்கு வாய்ப்பேற்படுகின்றது. மேற்கூறியவர்களுள் ஒருவரான எம். எஸ் கிரு'ணாம்மாள் பதுளையைச் சேர்ந்தவர். அறுபதுகளில் ஜனநாயக தொழிலாளர் காங்கிரஸின் தொழிற்சங்கத் தலைவியாகவும் தோட்ட மாதர் சங்கத் தலைவியாகவும் விளங்கியவர். அவ்வமைப்பின் பிரச்சார மேடைப் பாடகியாகவும் விளங்கியவர். இவரது பாடல்களுள் சில,' சிந்தையைக் கவரும் சீர்திருத்தக் கீதம்' என்ற தலைப்பில் நூலுருப் பெற்றுள்ளது. ஏனைய பிரதேச வாய்மொழிப்புலவர்கள் தொழிற்சங்கங் களுடன் தொடர்புபட்டவர்களல்லர் என்பதையும் இவ்வேளை நினைவுகூர்வது பொருத்தமானது. இவர்களது அனுபவ அகற்சிக்கு இது வாய்ப்பளித் தது. (எனினும் ஏனைய பிரதேசங்களிலுள்ளவர் சிலர் அரசியல் கட்சி மேடைகளில் பாடியுள்ளனர்) மலையகத்தின் முதற்பெண் பாடகியான மீனாட்சியம் மாள் நடேசய்யர் காலந்தொட்டு இப்பாரம்பரியம் மலையத்திலே நிலவி வருவதும் கவனிக்கத் தக்கது.

முற்கூறியவாறு, தொழிற்சங்கத்துடன் எம். எஸ். கிருஷ்ணம்மாள் தொடர்புபட்டிருந்த நிலையில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொழிற்சங்கப் பிரச்சாரம் இவரது பாடல்களில் பீறிட்டுப்பாய்வதை அவதானிக்கின்றோம் :

"இந்த மீழத்தில் எங்கள் ஐ.தொ.க
ஒன்றாய் வா வா வென்றது
உங்கள் வீடு தேடி தேவை ஏதும்
வேண்டுமா என்றது

சங்கங்கள் பல தோன்றியபோதும்
ஐ.தொ.கா. நம் உரிமையைக் காக்கும்
அன்றும் இன்றும் என்றும் வாழும்
இனிக்கும் மணக்கும் சுவைக்கும் விருந்தாம்

கரன் சந்திரன்
போல் அரும்பெரும் தொண்டு
நம் கழகத் தலைவர்கள் புரிகிறார்கள் இன்று
கடமை வீரன் காங்கிரஸ் தோழன்
சமத்துவத் தீரன் ஐ.தொ.கா. தோழன்
எத்தனை சங்கங்கள் ஏற்பட்ட போதும்
எங்களின் ஐ.தொ.கா. சேவை எப்போதும்
அயராது உழைக்கும் அன்பைப் பெருக்கும்
பூவின் மலர் போல் புதுமையாய் ஜொலிக்கும்.

எம். எஸ். கிருஷ்ணாம்பாள் இயற்றிடும் கீதம்
எல்லோருக்கும் எளிதாய் இயற்றினேன் பாடும்
ஒன்றாய் யாவரும் இருந்துளர் வேண்டும்.
நான் உங்கள் அருளால் வாழ்ந்திட வேண்டும்."

(கோடிட்ட பகுதிகளைக் கூர்ந்து கவனிப்பின் இப் புலவரது கற்பனை,அணிப்பிரயோகம், தன்னம்பிக்கை, சொற்பிரயோகம் முதலானவை பற்றி புரிந்துகொள்ள முடியும்).

மேலும் மலையகத் தொழிலாளர்களது துயரங்களின் ஏகோபித்த குரலாகவும் அவரது பாடல்கள் வெளிப்படுகின்றன. உதாரணமாக பின்வரும் பகுதிகளைக் குறிப்பிடலாம்.

"காலை முதல் மாலை வரை கஸ்ரப்பட்டு வேலைசெய்தும்
கருணையற்ற முதலாளிமார் காட்டுகிறார் குரோதமதை
கங்காணி மார்க் கடங்கி கணக்கப்பிள்ளைக்கு நடுங்கி
கண்டிப்பாக வேலை செய்தும் கருணையில்லை முதலாளிக்கு

பண்டுதொட்டு இன்றுமுதல் பாட்டன் பூட்டன் காலம்வரை
நன்றியுடன் நாமுழைத்தும் நல்லபெயர் தானில்லையே
இந்த நாட்டிலே பிறந்து இந்த நாட்டிலே வளர்ந்து
இருக்கின்ற இந்தியர்க்கு என்ன செய்தார் இலங்கையிலே

"காலை முதல் மாலை வரை
கஸ்ரப்பட்டு வேலைசெய்தும்
கருணையற்ற முதலாளிமார்
காட்டுகிறார் குரோதமதை
கங்காணிமார்க்கடங்கி
கணக்கப்பிள்ளைக்கு நடுங்கி
கண்டிப்பாக வேலை செய்தும்
கருணையில்லை முதலாளிக்கு

பண்டுதொட்டு இன்றுமுதல்
பாட்டன் பூட்டன் காலம்வரை
நன்றியுடன் நாமுழைத்தும்
நல்லபெயர் தானில்லையே
இந்த நாட்டிலே பிறந்து இந்த
நாட்டிலே வளர்ந்து
இருக்கின்ற இந்தியர்க்கு என்ன
செய்தார் இலங்கையிலே"



காடுவெட்டி ஒடி கொளுத்தி கண்டதெல்லாம் சீர்திருத்தி
சுந்தரமாய் இலங்கைதனை ஜொலிக்க வைத்தான் இந்தியனே
நன்றி செய்த இந்தியர்க்கு நாலுபணம் கூட்டவில்லை
என்ன கேட்டும் முதலாளிமார் ஏறெடுத்தும் பார்க்கவில்லை

பத்தடி வீட்டுக்குள்ளே பதினைந்து பேர் வசிக்க
பார்த்துக் கொண்டு துரைமார்கள் பாரா முகமாயிருக்க
கேட்டாலும் கிடைப்பதில்லை கிளாக்கரைய்யா விடுவதில்லை
துரைக்குமேலே கிளாக்கரய்யா தூரத்துகிறார் போறவரை

மேலுள்ள பகுதிகளில் துயர உணர்வுகளுடன் எதிர்ப்புக் குரல்கள் சேர்ந்து ஒலிப்பதும் புலப் படுகின்றது. இன்னொரு பாடலில் பெண் தொழிலா ளிகள் புகழப்படுகின்றனர்.

"தேயிலை பறிப்பதில் திறமை பெற்ற
திராவிடப் பெண்களின் சாதனைகள்
மலையசைந்தாலும் மனங்கலங்கா
மாபெரும் வீரசிகாமணிகள்"
"ஆழப்புதைந்த தேயிலைச் செடியின்
அடியில் புதைந்த அப்பன் சிதைபோல்"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்ற மக்கள் கவிமணி 'சி.வி.'யின் புகழ்பெற்ற பாடலடிகள் இங்கே ஒரு தொழிலாளி வர்க்கப் பெண் புலவரிடமிருந்து மென்மேலும் உணர்ச்சி மீதூர வெளிப்படுவதும் குறிப்பிடத்தக்கது

"ஆதியில் வந்தநம் பூட்டனையும்
அதற்கடுத்த வந்த பாட்டனையும்
எத்தனையோ தமது இனத்தாரையும்
ஈழத் தேயிலை தூரில் புதைத்தோம்"

முன்னைய வரலாறு இன்னொரு பாடலில் இடம் பெறுகின்றது :

"கையிலே ஏந்தி ஏந்தி காட்டை வெட்டி
கரடி புலிதனை விரட்டி தோட்டமாக்கி
கைகடுக்க கால்கடுக்க வேலை செய்து
கண்டிநகர் என்றபெயர் நிலைக்க வைத்த.....

ஆதியிலே வெள்ளையர்கள் கூட்டி வந்து
பாதியிலே தவிக்கவிட்டு பறந்துவிட்டார்
நாதியற்று நடுத்தெருவில் நாம் வருந்தி
நீதியற்று நிர்க்கதியாய் வாழகின்றோம்
....................................................."

தனித்திருக்கும் குழந்தைகளின் நிர்க்கதிநிலையும் சிலபாடல்களில் எடுத்துக் காட்டப்படுகின்றன :

..............................
பாழும் பச்சைக் குழந்தைகளை போட்டுவிட்டு
பரபரக்க ஓடுகிறார் கொழுந்தெடுக்க
பிள்ளைகளை போட்டடைக்கும் பட்டியிலே
போட்டுவிட்டு ஓடுகிறார் கொழுந்தெடுக்க
..............................................
வாலுமின்றி சோறுமின்றி பட்டினியாய்
பதைபதைத்து வாடுதிங்கே குழந்தைகளும்
பேருபோட்டு வீடுவர ஆறுமணி
பிள்ளைகளை கவனிப்பது எப்போகினி

நகர்ப்புற பெண்களது நாகரிகக் கோலங் கண்டு மலையகப் பெண்கள் எச்சரிக்கப்படுகின்றமை பற்றிய பாடல்களுமுள்ளன

முன்னாலே தலைமுடியை வெட்டிக்கிறாங்க
முகமெல்லாம் பவுடரை போட்டுக்கிறாங்க
குதிரைக்கு முடிவெட்டி போலருக்குங்க இந்த
குமரிகள் தலையை பார்ப்பதுக்குங்க

"முன்னாலே வயிரெல்லாம் தெரியுதுங்க
பின்னாலே முதுகுப் பக்கம் உடையுதுங்க
முன்னாலே பின்னாலே திறந்துவிட்டு ஒரு
முளத்திலே ரவுக்கையை தச்சுக்கிட்டு

தொடை தெரிய கவுனுகளை போட்டுக்கிட்டு
தோழுக்கு மேலே ரவுக்கை பூட்டிக்கிட்டு
காலுசட்டை நீளமாக மாட்டிக்கிட்டு
கண்ணுக்கு கண்ணாடி வேறே போட்டுக்கிட்டு
..........................................
இது பட்டணத்துப் பெண்டுகளின் பணிபுதானுங்க
இதைப் பார்த்து மலைநாட்டு பெண்கள் தானுங்க

மலையக வாய்மொழிப் புலவர்கள் தமிழகத்து விவகாரங்கள் பற்றி பாடுவது தவிர்க்க இயலாததே் அண்ணாதுரையின் பிரிவு பற்றி இவ்வாறு பாடப்படுகின்றது.

"அண்ணாவைப் பாடப் பாட நாவினிக்கும்
அண்ணா அவர் பேரைச் சொன்னால் நாவினிக்கும்
.................................................
வீரமில்லா திராவிடனை விழிக்க வைத்தீரே
விரிவுடனே வார்தை பேசப் பழக்கி வைத்தீரே
அகம் கொண்ட ஆரியனை அடக்கி வைத்தீரே
அறிவு மொழி கூறி கூறி படிக்க வைத்தீரே"

விரிவஞ்சி தொடர்ந்து செல்லாமல், இறுதியாக இப்புலவரது பின்வரும் பாடலை மட்டும் நினைவு கூர்வோம்.

'உண்மையோடு உழைக்கோணும் ஒற்றுமையாய் வாழணும்
நம்மைப் பார்த்து மற்ற சாதியர் நடுங்கியங்கே சாகணும்
எனக்குத் தெரிந்த விசயங்களை எடுத்துச் சொன்னீங்க
இதை இயம்பிடும் கிருஷ்ணம்மாள் நான் ஏழை நானுங்க

எனினும் கிருஷ்ணம்மாளின் பாடல்களது வெளிப்பாட்டு முறைமை பற்றிக் கூறுவது அவசிய மானது. மீனாட்சியம்மாள் நடேசய்யர் தமது பாடல்களை பிரபல்யமான கூத்துப் பாடல், பாரதி பாடல் மெட்டுக்களில் அமைத்தது போன்று இவரது பாடல்களிலும் மெட்டுக்கள் இடம்பெற்றுள்ளன் எனினும் ராணி மகா ராணி, கல்யாணச் சாப்பாடு, நாதஸ்வர, முத்துநகையே, புதுசாக் கட்டிக்கிட்ட, திருப்புகழைப் பாடப்பாட என்றவாறு சமகாலத்திலே பிரபல்யமான சினிமாப்பாடல் மெட்டுக்களைத் தழுவியிருக்கின்றன. மீனாட்சியம்மாள் நடேசய்யருக்கும் இவ்வருக்குமிடையிலான கால வித்தியாசம் இதற்குக் காரணமாயிருப்பினும் இவரது சினிமா மெட்டுப் பாடல்கள் தொழிலாளர் வர்க்கத்ததை அதிகளவு ஈர்த்திருக்குமென்பதில் ஐயமில்லை.


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

அடுத்துக் கவனிக்கவேண்டிய வாய் மொழிப்புலவர் *S.* பெரியக்காள் என்பவராவர். இராகலை பிரதேசம் சேர்ந்த இவர் எழுபதுகளில் தமிழகம் சென்றுவிட்டார். தொழிலாளர் துயரம் என்ற இவரது தொகுப்பிலே பெயருக்கேற்ப தொழிலாளர் துயரங்கள் பற்றிய நெடும்பாடல்கள் சில காணப்படுகின்றன. ஏனைய பிரதேசங்களில் எழுத்து இலக்கிய பெண் கவிஞர்களோ வாய்மொழி இலக்கியப் புலவர்களோ தொழிலாளர்கள் பற்றிப் பாடியது அரிது என்ற விதத்தில் இத்தகைய பாடல்களுக்கு முக்கியத்துவமுள்ளன. இவரது பாடல்களின் போக்குப் பற்றி அறிவதற்கு பின்வரும் பகுதி உதவுகின்றது :

காலங்களி காலமாச்சு கச்சி பல சேர்ந்து போச்சு
உலகம் பிரண்டு போச்சு என் அருமை நண்பர்களே - நம்
ஒற்றுமையும் மாறிப்போச்சு என் பொறுமை நண்பர்களே
இருபது காம்பிராவில் இருநூறு ஆட்களை போட்டு
அடைக்கிறார்கள் என் அரமை நண்பர்களே புளிமுட்டை
போல அல்லே என் பொறுமை நண்பர்களே

காலையிலே எழுந்திருந்து வேலை செய்யபோவோமென்றால்
பீலியிலே தண்ணீர் இல்லை என் அருமை நண்பர்களே
அதை பேச ஒரு தலைவர் இல்லை
என் பொறுமை நண்பர்களே
லயலயமாய் போய் நடந்து நல்லதண்ணீர் கொண்டுவந்து
சாப்பிட்டு போகுமுன்னே என் அருமை நண்பர்களே
எஞ்ஜின் சங்கு சத்தம் போடுதே
என் பொறுமை நண்பர்களே

பெரியக்காள் இயற்றிய ஏனைய பாடல்களுள் 'தமிழாதி அனுதாபக்கும்மி' முக்கியமானது

'ஆதி முதலொரு காலத்திலே துரைமார் அட்வான்ஸ் தந்து
ஆளுங்கட்டி வேலை செய்ய இந்தே கூட்டிவந்ததொரு
விபரம் சொல்லுகிறேன் கேளுங்கடி'

என ஆரம்பித்து, தொடர்ந்து தொழிலாளர் தென் இந்தியாவிலிருந்து இங்குவந்து சேர்ந்த ஆரம்ப காலவரலாற்றை விபரிக்கிறது. அவர்கள் ஏய்க்கப்பட்டு வந்தமை தொடர்பான, அறிந்ததும் அறியாததுமான சுவையான சில தகவல்களை அது வெளிப்படுத்துகிறது.

'ஏச்சதை சொல்லுகிறேன் கேளுங்கடி
ரோட்டோடப் போய் ரோட்டோட வந்தால் ரோசமாய்
செக்ரோவில் பேர் விழும் காலை நீட்டி உறங்கிவிட்டால்
இங்கே தன்னாலே செக்ரோவில் பேர்விழும்
வாழைப்பழத்திலே வீடு மெலுகலாம் வாசலிலே வெற்றிலைப்பாக்கு

மரம் தேயிலைத் தூர்களைத் தோண்டி எடுத்துமே
தேங்காயும் மாசியும் சாப்பிடலாம்
வேலையுமில்லை வெட்டியுமில்லை விளையாடி சம்பளம்
வாங்கிடலாம்'

மேற்கூறியவாறு தொடர்ந்து, பின்னர் சிறிமா. சாஸ்திரி ஒப்பத்தத்தின் விளைவுகள் பற்றிப் பேசப்படுகின்றது.


நாடு கடத்திடும் சட்டமையா ஸ்ரீமதி பண்டாரநாயக்கா சொன்னா
திட்டமையா ஊருக்கு எப்படிபோவதையா இதை சும்மா
யோசித்து சொல்லவும் வேணுமையா
ஓட்டுரிமை கிடையாது நாம் கேட்டசலுகைகள் கிடையாது
நாட்டைக் கடத்திடத் திட்டம் வைத்துப்பெரும்
பாட்டாகப் பாடுகிறார் நேசர்களே'
கள்ளத்தோனி என்று செல்லிச் சொல்லி ஆண்களைத் தள்ளித்
தள்ளிக்கொண்டு போய்விடுவார் அவர் பிள்ளை பெண் சாதிகள்
இங்கே தவிப்பதை பேச ஒருவரும் இல்லைங்கய்யா
சம்பளம் நாலு பணம்தானே அப்போ சாமான் பவனும்

"காலங்களி காலமாச்சு
கச்சி பல சேர்ந்து போச்சு
உலகம் பிரண்டு போச்சு
என் அருமை நண்பர்களே- நம்
ஒற்றுமையும் மாறிப்போச்சு
என் பொறுமை நண்பர்களே
இருபது காம்பிராவில்
இருநூறு ஆட்களை போட்டு
அடைக்கிறார்கள்
என் அருமை நண்பர்களே
புளிமுட்டை
போல அல்லே
என் பொறுமை நண்பர்களே"





Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



"காலையிலே எழுந்திருந்து
வேலை செய்யபோவோமென்றால்
பீலியிலே தண்ணீர் இல்லை
என் அருமை நண்பர்களே
அதை பேச ஒரு தலைவர் இல்லை
என் பொறுமை நண்பர்களே
லயலயமாய் போய் நடந்து
நல்லதண்ணீர் கொண்டுவந்து
சாப்பிட்டு போகுமுன்னே
என் அருமை நண்பர்களே
எஞ்ஜின் சங்கு சத்தம் போடுதே
என் பொறுமை நண்பர்களே"

நயம் தானே நாலு பணத்திற்கு உழைத்தத் தமிழாதி
நாட்டை விட்டெப்படி போவதையா

கையிலே காசுகள் இல்லாமல்
இதன் காரணம் நன்றாய் தெரியாமல்
சும்மா போவதென்றால் எப்படி போவதையா
இதன் பிரிவைச் செல்லவும் வேணுமையா
சம்பாதித்துப் பணம் கொண்டு போங்கள் என்று சட்டதிட்ட
மாகச் சொல்கிறார்கள் எந்தப் பணம் நம்கொண்டுதான
போவது ஏமாந்து போனேமே தோழர்களே'

M.S. கிருஷ்ணம்மாள் போன்று சினிமாப் பாடல் மெட்டுக்களை இவர் பயன்படுத்தவில்லை. பதிலாக தெம்மாங்கு மெட்டினைப் பயன்படுத்தியிருக்கிறார். கும்மி வடிவங்களையும் கையாண்டுள்ளார்.

இதுவரை கூறியவற்றை ஆழ்ந்து நினைவு கூர்ந்து பார்க்கின்றபோதுதான் இவ்வாய்மொழிப் பாடல் மரபின் முக்கியத்துவமும் வலிமையும் நன்கு புலப்படும். அதாவது தொழிலாளிகளான இப்புலவர்கள் ஏனைய தொழிலாளர் துயரங்களை நேரடியாக வெளிப்படுத்துவதும் அதற்காக அனைவரையும் எளிதாக் கவரக்கூடிய மெட்டுக்களைப் பயன்படுத்துவதும் மேடைகளில் இசையோடு இவற்றைப் பாடுவதுமான நிலையில் சாதாரணத் தொழிலாளர் மத்தியில் அவை மனக்கிளர்ச்சியோ மன ஆறுதலோ ஏற்படச்செய்கின்றன. பொதுசன அபிப்பிராயம் ஏற்படவும் வழிவகுக்கின்றன.


தொடர்ந்தும் இவ்வாறாக வாய்மொழிப் புலவர்கள் இனங்காணப்படுவது அவசியமானது. இவ்வாறான புலவர்கள் பற்றி ஆய்வில் ஈடுபடுவோர் சிலர், சிலவேளைகளில் மலையக வாய்மொழிப் புலவர்கள்பற்றி தேடாமல் ஏனைய பிரதேசப் புலவர்கள் பற்றி கவனத்திற்கெடுப்பதுண்டு. எனினும் தனித்துவம் மிக்க இவர்களையும் அலட்சியப் படுத்தாது கவனத்திற்குட்படுத்தும்போதுதான் அவ்வாறான ஆய்வுகள் கனதியாக அமைய முடியும் என்பதில் ஐயமில்லை.

(பி.கு: மேற்கூறிய புலவர்கள் பற்றிய தகவல்களை பெறக்காரணமாயிருந்த மலையக ஆய்வாளர் பெ. முத்துலிங்கம் அவர்களுக்கு இக்கட்டுரையாளர் கடமைப்பட்டுள்ளார்.)


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# பெண் என்னும் சுமைதாங்கி

**பேரா. தொ. பரமசிவன்**



இரண்டு அகலமான கற்களை நெட்டுக்குத்தாக நட்டு, அவற்றின் மீது கிடைவசமாக மற்றொரு கற்பலகை வைக்கப்பட்ட அமைப்பை சாலை ஓரங்களில் பார்த்திருக்கலாம். இதுதான் சுமைதாங்கிக்கல். தரையிலிருந்து சுமார் நான்கு அல்லது ஐந்தடி உயரத்தில் கிடைவாக்கால் பொருத்தப்பட்டிருக்கும். போக்குவரத்து வசதி இல்லாத காலத்தில் தலைச்சுமையாக பொருட்களைக் கொண்டு செல்பவர்கள் பிறர் உதவியின்றி இந்தச் சுமைகளை இறக்கி வைத்துப் பின்னர் யாருடைய உதவியுமின்றி தலையில் ஏற்றிக் கொள்வார்கள். இவ்வாறு இளைப்பாறும் நேரத்தில் சுமையைத் தாங்குவதற்காக உருவான கற்களே சுமைதாங்கிக் கற்கள். வயிற்றுச்சுமை தாங்காமல் இறந்த பெண்ணின் மன ஆறுதலுக்காக, மற்றவர்களின் சுமையைப் பகிர்ந்து கொள்ளுதல் என்னும் மனிதாபிமான நோக்கமே இதற்குப் பின்னிருக்கும் அம்சம்.

மகப்பேற்றின்போது வயிற்றுச் சுமை தாங்காமல் இறந்த பெண்களின் நினைவாகவே சுமைதாங்கிக் கற்கள் நடப்படுகின்றன. சாதாரணமாக இவற்றில் கல்வெட்டுகள் இருப்பதில்லை. விதிவிலக்காக ஒன்றிரண்டு கற்களில் இறந்த பெண்ணின் பெயர் பொறிக்கப்பட்டுள்ளது.

ஆணாதிக்கச் சமுதாயத்தில் பெண் ஒரு சுமைதாங்கி என்பதை இந்த ஓர் இடத்தில் மட்டும் ஆண் சமுதாயம் ஏற்றுக் கொண்டுள்ளது. பழைய தமிழ் இலக்கியங்களிலும் கல்வெட்டுக்களிலும் சுமைதாங்கிக் கற்கள் பற்றிய குறிப்புகள் எதுவும் இல்லை. எனவே, இந்த வழக்கம் விசயநகர ஆட்சிக்கலத்திலும் நாயக்கர் ஆட்சிக்காலத்திலும் பெருகி இருப்பதாகத் தெரிகிறது.

தொன்மையான சுமைதாங்கிக் கற்கள் இதுவரை கண்டறியப்படவில்லை. சுமைதாங்கிக் கற்கள் பொதுவாக ஊர் எல்லையும் நெடுஞ்சாலையும் சந்திக்கும் இடத்தில் நிழல்தரும் மரத்தடிகளில் அமைக்கப்படுகின்றன.

சுமைதாங்கிக் கற்களின் வடிவத்தைப் பொறுத்தமட்டில் கிடைவசத்தில் அமைக்கப்பட்ட கற்பலகையே இறந்த பெண்ணின் நினைவிற்குரியதாகும். அதனைத் தாங்க நிறுத்தப்பட்ட இரண்டு கற்களும் மகப்பேற்று உதவியாளர்களைக் குறிக்கும். இந்தியா முழுவதும் மகப்பேற்றுச் சிற்பங்களில் இரண்டு பெண் உதவியாளர்கள் காட்டப்பெறுவது ஒரு மரபாகவே இருந்து வருகிறது. நாட்டார் மரபில் இந்தப் பெண் உதவியாளர்களைத் தொட்டுப் பிடித்தவர்கள் என்பர்.

கிராமப்புறங்களில் ஓரளவு பொருள்வசதி உடைய குடும்பத்தவரே இந்தச் சுமைதாங்கிகளை நிறுவியுள்ளனர். பொதுவாக மகப்பேற்றின் போதும் சுமங்கலியாகவும் இறந்த பெண்களை மாலையம்மன், வாழவந்தாள், சேலைக்காரி ஆகிய பெயர்களில் வணங்குவது தமிழக நாட்டார் மரபாகும். பொருள் வசதி குறைந்த வீட்டில் மாலையம்மனுக்கு நினைவுநாளில் படைத்த புதுச்சேலையினை ஓலைப்பெட்டியில் வைத்து உத்திரத்தில் கட்டித் தொங்க விட்டிருப்பார்கள். மறுஆண்டு நினைவுநாளில் தான் அந்தச் சேலையினை மற்றவர் எடுத்து உடுத்துவர்.

மகப்பேற்றில் இறந்த பெண்களைப் போல கன்னியாக இறந்த பெண்களும் வழிபாட்டுக்கு உரியவர்களாகக் கருதப்பட்டார்கள். அவர்கள் நினைவுக்கு சேலை படைப்பதில்லை. 'கன்னிசிற்றாடை' மட்டுமே படைப்பர். இன்றளவும் கிராமப்புறத்துத் துணிக்கடைகளில் கன்னிச் சிற்றாடைகள் விற்பனைக்கு உள்ளன.

விசயநகர மன்னர் ஆட்சிக்காலம் தொடங்கி தமிழ் மக்களின் உணவு, உடை, சடங்குகள், திருவிழாக்கள் ஆகியவற்றில் பல மாற்றங்கள் நிகழ்ந்துள்ளன. மகப்பேற்றில் இறந்த பெண்ணின் நினைவாக சுமைதாங்கிக்கல் அமைக்கும் வழக்கமும் அக்காலத்தில் தான் தோன்றியிருக்க வேண்டும். இதுவன்றி, தமிழகப் பண்பாட்டு வரலாற்றில் சுமைதாங்கிக்கல் பற்றிய குறிப்புகள் எதுவும் இல்லை. (நன்றி- பரண்)



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



# மாற்றம்

**விஜயகௌரி**
கிழக்குப் பல்கலைக்கழகம்

இரவுப்பொழுது நீண்டு கொண்டே செல்வதைப் போன்ற ஒரு உணர்வு. தூக்கம் எட்டாத தொலைவிலிருந்து நிதாவை வேடிக்கை யாகப் பார்த்துச் சிரித்துக்கொண்டது. நிதாவின் வீட்டில் கல்யாணப் பேச்சு ஆரம்பித்ததி லிருந்து அவளுக்கும் தூக்கத்துக்கும் நிறையவே இடை வெளி ஏற்பட்டுவிட்டது. எப்படித்தான் முயன்றாலும் அவளால் சரியாகத் தூங்க முடிவதில்லை. கல்யாணம் என்னும் வாழ்க்கையின் புதிய பாதையில் பயணிக்கப் போவதை எண்ணி சந்தோசப்படுவதா? இல்லை கல்யாணம் என்ற பெயரில் குடும்பத்தின் மீது சேரவிருக்கும் பெரும் கடன் சுமையை எண்ணி கவலைப்படுவதா? என்ற இருபக்க நிலையில் நிதாவின் மனம் நிலைகுலைந் திருந்தது.

நிதாவின் தந்தை மேசன் தொழில் செய்து, அதில் வரும் பணத்தில் தான் அவர்களது குடும்பச் செலவுகள், நிதாவினதும் தங்கையினதும் படிப்புச் செலவுகள் என்பன பூர்த்திசெய்யப்பட்டு வந்தன. நிதாவின் பல்கலைக்கழகப் படிப்பு முடிவடைந்தது இவர்களுக்குப் பெரும் ஆறுதலாக இருந்தது. இந்த நிலையில் தான் அவளுக்கான கல்யாணத்தைப் பற்றிய பேச்சுக்கள் எழுந்தன. அயலில் உள்ளவர்கள், உறவினர் என யாரைப் பார்த்தாலும் நிதாவின் திருமணத்தைப் பற்றி கேள்விகள் கேட்பவர்களாகவும் விமர்சனம் செய்பவர்களாகவுமே இருந்தனர். சிலர் நிதாவின் தந்தையிடம்,

“என்ன அண்ண பிள்ளைக்கு கம்பஸ் முடிஞ்சுது போல எனியாவது ஏதும் வரன் பார்க் கலாம் தானே” “தம்பி பொம்பிளைப் பிள்ளைகளைக் காலா காலத்துக்கு கட்டிக்குடுத்திட வேணும் காலம் போச்சுதெண்டா கட்டி வைக்கிறது கஸ்ரம்” போன்ற அச்சுறுத்தலான பேச்சுக்களுடன்,

“உந்த மணியத்தின்ர தங்கச்சிய பாத்தியே நாப்பத்தைஞ்சு வயசாச்சு, அப்பிடியே இருக்குது. காலா காலத்தில செய்து வைக்காததால பிறகொண்டும் பொருந்தேல்லையாம்”

“சரசுவின்ர மூத்ததுக்கு முப்பத்தெட்டு வயசிருக்கும். அதுக்கு பிறகிருக்கிற சகோதரங்கள் எல்லாம் கட்டி பிள்ளைகளும் இருக்கு, இப்பவும் பாத்து கொண்டு தான் இருக்கினம்”

போன்ற கண்முன்னே நிகழும் ஒரு சில எடுத்துக்காட்டுக்களுமே நிதாவின் கல்யாணப் பேச்சிற்கு காரணமாக அமைந்தன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெளியிலிருந்து பார்ப்பவர்களுக்கு குடும்பத்திலிருக்கும் கஸ்ரம் தெரியப்போவதில்லை, ஆனால் நிதா தனது குடும்பத்தின் வறுமையை நன்கு அறிந்தவள். கல்யாணச் செலவுகள், அதிலும் பெண் பிள்ளைகளுக்கு என்றால் செலவுகளை விட தனியானதொரு தொகை என எல்லா நடைமுறைகளையும் தெரிந்து கொண்டவள். இருந்தும் இத்தகைய நடைமுறைகளில் அவளுக்கு உடன்பாடு இருக்கவில்லை. இதுதான் விதிமுறை எனப்பேசும் தாயின் போக்கிற்கிடையிலே தான் எதனையும் பேசாமலே இருந்துவிட்டாள். நிதாவின் ஆசை எல்லாமே குறைந்தது ஒரு வருடமாவது தான் வேலை செய்து தன் குடும்பத்தைப் பார்க்க வேண்டும் என்பதுதான்.

மறு நாள் காலை கல்யாணத் தரகர் வீட்டிற்கு வந்திருந்தார். ஏற்கனவே கொடுக்கப் பட்டிருந்த நிதாவின் குறிப்புக் கொப்பியுடன் இன்னொரு கொப்பியும் கொண்டுவந்திருந்தார். சில மணி நேரம் தரகர் நிதாவின் தாய் தந்தையுடன் உரையாடிக்கொண்டிருந்தார். இவர்களின் உரையாடல் நிதாவின் மனதில் புதுவிதமான பரபரப்பையும் ஆவலையும் ஏற்படுத்தியது.

"என்ன இந்த மனுசன் இவளவு நேரமா கதைக்குது. அப்பிடி என்ன கதைக்குது" எனத் தனக்குள்ளேயே எண்ணிக்கொண்டவளாக அதனை அறியும் ஆவலில், அவர்களது பேச்சு கேட்குமளவு தூரத்தில் நின்று ஏதோ வேலை செய்பவள் போல பாசாங்கு செய்துகொண்டிருந்தாள். அப்போது,

"பெடியன்ர வீட்டு ஆக்கள் பரவாயில்லை, உங்கட சாதி சனம் தான். பெடியன் படிக்கேல்ல ஆனா வெளிநாட்டில நல்ல வேலை பாக்கிறான். என்ன.. சீதனம் தான் கொஞ்சம் கேக்கினம் கனக்கயில்ல பத்து பவுண் நகையும் பத்து லச்சம் காசும் தான்"

என தரகர் சொல்வது நிதாவின் காதில் விழுந்தது. சீதனம் என்றதும் நிதாவிற்கு தூக்கி வாரிப்போட்டது. சீதனம் கேட்பது ஒன்றும் புதிய விடயம் இல்லைத்தான் இருந்தும் அதன் தொகை அவளின் குடும்ப நிலைக்கு எட்டாக்கனியாகவே இருந்தது. தரகரின் பேச்சில் தனது பெற்றோரின் முகங்கள் மாறி இருண்டு போனதை அவள் கவனிக்கத்தவறவில்லை. அத்தகைய மாற்றத்தை அவளும் எதிர்பார்த்துத்தான் இருந்தாள்.

நிதாவின் தந்தை தரகரிடம்,

"நாங்கள் வீடு வளவு தாறம். அதோட அஞ்சு பவுண் நகையும் அஞ்சு லச்சம் காசும் தாறம். இதுக்குள்ள ஏதாவது வரன் இருந்தா சொல்லுங்கோ. இதுக்கு மேலை எண்டா எங்களால தர ஏலாது"

எனத் தனது இயலாமையை வெளிப் படுத்தினார். நிதாவும் தந்தையின் பேச்சை மனதார ஏற்றுக்கொண்டவளாக "அப்பாடா" என நீண்ட பெருமூச்சு விட்டாள். தரகர் அங்கிருந்து சென்றதும் நிதாவின் தாயும் தந்தையும் தம் இயலாமையை நினைத்து மனம் வருந்தினர். இவர்களது முகவாட்டத்தை கண்டவள் அங்கு வந்தவாறே,

"என்னவாம் அம்மா தரகர்? என்ன சொல்லுறார்? மாப்பிள்ளை வெளிநாடாமே? வயசு எத்தினையாம் நாப்பதாமோ?" என கிண்டலாக கேள்விகளை அடுக்கி அவர்களது கவனத்தை திசைதிருப்பினாள். உண்மையிலேயே வெளிநாட்டு மாப்பிள்ளைகள் என்றாலே குறைந்தது பத்து வயதாவது வித்தி யாசமிருக்கும், வெளிநாட்டு மோகத்தால் இவ்வாறு திருமணம் செய்துகொண்ட பல பேரைப் பார்த்திருக் கிறாள். இதனைக் காரணம் காட்டி தாயிடம்,

"என்ன எனக்கு கிழவனக் கட்டி வைக்கப் போறிங்களே?" என தனது விருப்பமின்மையை வெளிப்படுத்தினாள்.

நிதாவின் பேச்சில் ஒருவாறு ஆறுதலடைந் தவர்கள் மீண்டும் எதையோ யோசிக்கத்தொடங்கினர். பெண் பிள்ளையைப் பெற்றவர்கள் எப்படித்தான் நிம்மதியாக இருக்கமுடியும். காலங் காலமாக பேணப்பட்டு வந்த விதிமுறைகளுக்கு கட்டுப்பட்டல் லவா இருக்கவேண்டும். எப்போதாவது செய்யலாம் என்று இருந்து விட முடியாது என்பது தாயின் குறிக்கோளாக இருந்தது. நிதாவின் தாய் நிதாவின் குறிப்பு பார்த்த போது,

"பிள்ளைக்கு இருபத்தெட்டு முடிய முதல் கட்டிவைக்கோணும் இல்லாட்டி அங்கால பொருந்துறது கஸ்ரம்" என்ற சாத்திரியின் வார்த் தைகளை அவளால் உதறித்தள்ள முடியவில்லை. எப்படியாவது இந்த வருடம் கட்டிவைத்துவிட வேண்டும் என்பதில் தீர்மானமாக இருந்தாள்.

நிதாவின் திருமணத்திற்கு வேண்டிய பண தேவைகளுக்கான ஏற்பாடுகளுக்கு தாயும் தந்தையும் மாறி மாறி அலைந்து கொண்டிருந்தனர். இதைக் கண்ட நிதா மிகுந்த கவலையடைந்தாள். இன்னும் சில காலம் இருந்து செய்தால் தன்னுடைய பங்கிற்கு தன்னாலும் உதவியிருக்க முடியும் என வருந்தினாள். தனது இத்தகைய கருத்தினை பல தடவைகள் பெற்றோரிடம் கூறியும் அவர்கள் அதனை ஏற்றுக்கொள்ளவில்லை.

"அம்மா காசுக்கு என்ன தான் செய்ய போறிங்க? இப்ப இதெல்லாம் தேவை தானா?" என சற்று கோபமாகவே கேட்டுவிட்டாள். இருந்தும் அவளது கோபம் சபையேறவில்லை. மீண்டும் அவள் "என்ன செய்யபோறிங்க எண்டு சொல்லுங்கோ" என்று பரிவாக கேட்டாள்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

"சமுர்த்தி லோனுக்கு பதிஞ்சிருக்கிறன் எழுபத்தையாயிரம் தருவாங்கள், மீளெழுச்சியால இருபத்தைஞ்சாயிரம் நாளைக்கு தாறாங்கள். சி.எஸ்.டி ல வேலை செய்யிற மாமாட மகன், அங்க ஏழு லச்சம் லோன் எடுக்கலாமாம். பிறகு தாங்கள் வீட்டு வேலை செய்யேக்க தரட்டாம்" என ஒரு பெருந்தொகைக் கடனை ஒரு பொருட்டாக எண்ணாதவளைப் போல கூறிச் சென்றாள். இதுவரை காலமும் கடன் என்பது வாங்கியறியாத தந்தையை இவ்வளவு கடனாளி ஆக்கப்போகிறோமே என்ற வருத்தம் நிதாவை வாட்டியது. இருந்தும் அவளால் எதுவும் செய்ய முடியவில்லை.

ஏற்கனவே விளம்பரப்படுத்தப்பட்டிருந்த நிதாவின் குறிப்பின் பரிகாரமாக சில வரன்கள் வீடு தேடி வந்தன. குறை சொல்ல முடியாத அழவிற்கு அவளிடம் அழகும், அறிவும் இருந்தும் சீதனம் என்ற பேச்சுவார்த்தையின் பேரில் அவை அனைத்துமே விலகிச்சென்றன. நிதாவின் திருமணம் தள்ளிப்போவதற்கு தமது இல்லாமையே காரணம் என பெற்றோர் நாளுக்கு நாள் தவித்துக் கொண்டிருந்தனர். நிதா இதனை ஒரு குறையாக எண்ணவில்லை. கொஞ்ச காலமாவது தள்ளிப் போனால் தான் வேலை செய்து பணம் தயார் செய்துவிடலாம் என பெற்றோருக்கு நேர்மறையான கருத்துக்களை எடுத்துக்கூறிக்கொண்டாள்.

இவ்வாறிருந்த நாட்களில் நிதாவின் குடும்பத்தின் நிலைக்கு ஏற்ற வகையிலான வரன் ஒன்றை தரகர் கொண்டு வந்தார். நிதாவின் தாய் தந்தையைப் பார்த்து.

"நீங்கள் கேட்ட அளவிலதான் இந்த சம்பந்தம் கொண்டு வந்திருக்கிறன், நல்ல குடும்பம், சோக்கான பெடியன், எந்த கெட்ட பழக்கமும் இல்லை. வீடு வழவு தரட்டாம், வேற நீங்கள் விரும்பின அளவு நகையோ காசோ பிள்ளைக்கு செய்யட்டாம் சம்மதம் தானே" என்று கேட்டவர் மீண்டும்,

"பிள்ளைய முதலே பெடியனுக்கு தெரியுமாம். பிள்ளையின்ர குணம் உங்கட குடும்பம் அவைக்கு நல்லா பிடிச்சு போச்சுதாம். அதான் பெடியன் சொல்லிற்ரானாம் சீதனத்தை பற்றி கதைக்க கூடாது என்டு" இத்தகைய தரகரின் பேச்சுக்கள் நிதாவின் குடும்பத்தினருக்கு பெரும் மகிழ்ச்சியைக் கொடுத்தது. சீதனத்தை முதன்மைப்படுத்தும் இச் சமூகத்தில் இத்தகைய ஒருவனா? என்ற கேள்விக்குள்ளாலே அவனைப் பார்க்காமலேயே நிதாவிற்குப் பிடித்துப் போய்விட்டது.

திருமணத்திற்கான ஏற்பாடுகள் வெகு விமர்சையாக ஆரம்பிக்கப்பட்டது. என்றுமே இல்லாத புதுப்பொலிவு நிதாவிடம் மட்டுமல்ல அவளது குடும்பத்தவர்களிடமும் காணப்பட்டது. இத்தகைய சந்தோசத்தைத் தருவதற்காகவா இவ்வளவு நாட்களும் வலிகளை மட்டுமே இறைவன் தந்திருக்கிறான் என்று எண்ணுமளவிற்கு நிதாவின் உள்ளத்திற்குள் பெரும் கொண்டாட்டம். நாட்கள் சில இனிமையாகக் கழிந்தன. திருமணத்தேதியும் விரல்விட்டு எண்ணிச்சொல்லும் அளவில் இருந்தது. இரண்டு குடும்பத்தினரும் ஒற்றுமையாகவும் விட்டுக்கொடுத்தும் திருமண வேலைகளைச் செய்துகொண்டிருந்தனர்.

மறுநாள் தரகருடன் மாப்பிள்ளையின் தாயும் தந்தையும் வந்திருந்தனர். இவர்களது திடீர் வருகை நிதாவின் பெற்றோருக்கு சற்று அதிர்ச்சியையே கொடுத்தது. இருந்தும்,

"வாங்கோ வாங்கோ என்ன சொல்லாமல் கொள்ளாமல் திடீரெண்டு இந்தப்பக்கம்" என்று நிதாவின் தாய் வரவேற்புடனே வந்ததற்கான காரணத்தையும் வினவியவாறே அமர்வதற்கான கதிரைகளை சரிசெய்து கொடுத்தாள். அவர்கள் அமர, மாப்பிள்ளையின் தாய் சாவகாசமாகப் பேச்சை ஆரம்பித்தாள். இதற்கிடையில் சுதா தன் அக்காவிடம் ஓடிச்சென்று,

"அக்கா அக்கா மாப்பிளை வீட்டுக்காரர் வந்திருக்கினம்" என்றவாறே அவர்களுக்கான உபசரிப்புக்களைச் செய்வதற்காக உள்ளே சென்றாள். மாப்பிள்ளை வீட்டாருடனான பேச்சுக்கள் தொடர்ந்துகொண்டிருந்தன.

"கல்யாணத்தை முடிச்சு ஒரு வருசத்தால தம்பிய வெளிநாட்டுக்கு அனுப்பலாம் என்டிருக்கிறம். இங்க நிண்டும் பிரயோசனம் இல்ல தானே, அங்க போய் கொஞ்ச நாளைக்கு உழைச்சிட்டு வந்தா பிறகு வீட்டோடயே இருக்கலாம் தானே" என மாப்பிள்ளையின் தாயார் கூறிமுடித்தார். அதற்கு நிதாவின் பெற்றோரும் ஏற்றுக்கொண்டவர்களாக "ஓம் அதுகும் நல்லது தான்" என ஒருமித்து கூறினர்.

மீண்டும் மாப்பிள்ளையின் தாயார் தாம் வந்த நோக்கத்தை சாடைமாடையாக தெரிவிக்கலானார். "அதுதான் நீங்கள் உங்கட பிள்ளைக்கு செய்யிறதுகளோட சேர்த்து ஒரு அஞ்சு லச்சம் கூட செய்தீங்களெண்டா நல்லது எண்டு நினைக்கிறம். நாளைக்கு உங்கட பிள்ளை தானே நல்லா இருக்கபோகுது" என்றார். இவரது பேச்சின் நோக்கம் நிதாவிற்கும் விளங்கிவிட்டது. சீதனம் கூட தரவேண்டும் என்பதை இதை விட இலகுவாக புரியவைக்க முடியாது. நிதாவின் பெற்றோர் ஒரு கணம் ஆடிப்போயினர். கல்யாணத் திகதிக்கு இன்னும் பத்து நாட்களே இருக்கின்ற


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேளையில் இத்தகைய செய்தி பேரதிர்ச்சியைக் கொடுத்தது. எப்படியாவது கொடுத்து தான் ஆக வேண்டும் என்ற கட்டாயத்தில் தள்ளப்பட்டு விட்டமையை அவர்கள் உணர்ந்து கொண்டனர்.

மேலும் மேலும் மாப்பிள்ளை வீட்டார் பேசிய பேச்சுக்கள் அனைத்துமே சீதனத்தை முக்கியத்துவப் படுத்துவதாகவே இருந்தன. நிதாவின் தந்தை,

"இப்போதைக்கு எங்கட தகுதிக்கு இவளவு தான் தர ஏலும். ரெண்டு வருசத்துக்குப் பிறகெண்டா நீங்க கேட்டதை தாறம். இப்போதைக்கு நடக்க வேண்டியதுகளை செய்வம்" என்று கூறி அவர் களின் பதிலை வினவியவராக அவர்களைப்பார்த்தார். மாப்பிள்ளையின் தாய்,

"இஞ்ச பாருங்கோ ஆறின கஞ்சி பழங் கஞ்சியாத்தான் போகும். செய்ய வேண்டியதுகளை உடனுக்குடன செய்யிறது தான் நல்லது"
எனப் பிடிவாதமாக நின்றார். தரகரும் அவர்களுக்குச் சாதகமாக,

"இப்போதைக்கு கடன வாங்கி இவைக்கு குடுத்திட்டு நீங்க அதை கொஞ்சம் கொஞ்சமா கட்டலாம் தானே" என பணம் திரட்டும் வழியையும் கூறினார். இவர்களுக்கு எப்படித்தெரியும் ஏற்கனவே தரவிருந்த பணம், கல்யாணச் செலவுகள் எல்லாமே கடன் தான் என்று.

தரகரின் பேச்சுக்கள் நிதாவின் மனதில் வேலைப் பாய்ச்சுவதைப் போன்று இருந்தன. கல்யாணம் எனும் பேரில் தந்தையின் தலையில் பாரச்சுமை மேலும் மேலும் ஏற்றப்படுவதை அவளால் ஏற்கமுடியவில்லை.

"என் ஒருத்தியின் கல்யாணச் செலவே இவளவு என்டா, சுதாவுக்கு??? அப்பாவால் என்ன செய்ய முடியும்? எப்படி இதிலயிருந்து மீளப் போகிறார்?" போன்ற பலமான கேள்விகள் எழுந்தன. இவை அவளது வாழ்வில் கல்யாண கனவுகளைத் தூரத்தே தூக்கி எறிந்தன. தந்தையும் தாயும் செய்வதறியாது திகைத்து நிற்பதைக் கண்டவள்,

"அம்மா அப்பா எனக்கு இந்த கல்லயாணம் பிடிக்கேல்ல" என்றவாறு மாப்பிள்ளை வீட்டாரைப் பார்த்து, "நீங்க போகலாம்" எனச் சற்று கோபமாகவே கூறிவிட்டாள். இவளது இத்தகைய முடிவு எல்லோருக்குமே ஆச்சரியத்தை கொடுத்தது. நிதாவின் அம்மா,

"என்னடி சொல்லுறாய் இது உன் வாழ்க்கையடி" என்று கூறி அழுதாள். தந்தையால் எதுவும் பேச முடியவில்லை. மாப்பிள்ளை வீட்டார் அவளைச் சமாதானம் செய்வது போல்,

"என்னம்மா இப்பிடி கதைக்கிறாய்? எல்லாமே உன்ர நல்லதுக்கு தானே கேக்கிறம். நாளைக்கு நீ நல்லா இருக்கோணும் எண்டு தானே உங்கட வீட்டயும் ஆசைப்படுவினம்." என்று ஆசைப் பேச்சுக்களை ஒப்புவித்தனர். உடனே நிதா,

" ஓ அப்ப எனக்காக, என்ட நல்லதுக்காக தான் இந்த சீதனமா? அப்ப எனக்கு வேண்டாம் எண்டா நீங்க கேக்க மாட்டீங்க அப்பிடித்தானே?" என்ற நிதாவின் கேள்விக்கு பதில் சொல்ல முடியாது விழித்துப்போய் நின்றனர். நிதா மீண்டும் தொடர்ந்தாள்.

"ஏற்கனவே எங்களால இவ்வளவு தான் தரேலும் எண்டு சொல்லி தானே இவளவு ஏற்பாடுகளையும் செய்தனாங்கள். திடீரெண்டு நீங்க இப்பிடி கேட்டா என்னதான் செய்யிறது? ஒருத்தர் மனசில எந்த வருத்தமும் இல்லாம மனசார செய்யிறதுகள் தான் எங்கள நல்லா வாழவைக்கும். அடுத்தவங்கள கஸ்ரப்படுத்தி வேண்டிற எதுகுமே நிலைக்காது. என்ர குடும்பத்த கஸ்ரப்படுத்தி வாழப்போற வாழ்க்கை எனக்கு வேண்டாம். நீங்க போகலாம்"என கோபத்துடன் கட்டளையிட்டாள்.

தரகருடன் மாப்பிள்ளை வீட்டார் வெளியேறு வதைக் கண்ட நிதாவின் தாய் அதிர்ச்சியுடன் அவளை உற்றுப்பார்த்தாள். அவளின் பார்வை நிதாவின் வாழ்க்கைக்கான பல்லாயிரம் கேள்வி களை எழுப்பியதை உணர்ந்த நிதா அத்தனைக்கும் பதிலாக, "என்னம்மா பாக்கிறீங்க இதோட என்ர வாழ்க்கை இருண்டு போயிடும் எண்டா? இல்லை அம்மா, ஒரு பெண்ணுக்கு கல்யாணம் மட்டும் தான் வாழ்க்கை இல்லை. அதை தாண்டி நிறைய இருக்கு"

"எங்கட சமூகத்தில எத்தனை மாறுதல்கள் வந்தாலும் எங்களால மீற முடியாத அளவுக்கு திணிக்கப்பட்ட சில கட்டுப்பாடுகள் இன்னும் எங்கட கால்களைச் சுற்றிக்கொண்டு தான் இருக்கு. ஏன் உங்களால கூட துணிந்து மீற முடியாது.

காலத்துக்கு காலம் பல மாற்றங்களை ஏற்றுக்கொள்ளுற எங்கட சமூகம் பெண்களுக்கான மரபுகளில் மட்டும் மாற்றத்தை ஏற்றுக் கொள்ள வில்லை. இண்டைக்கு பேச்சளவில மட்டும் இருக்கிற எமக்கான மாற்றங்கள நாங்க தான் நடைமுறைப்படுத்தி காட்டவேணும். எல்லாருக்கும் முன்னுதாரணமா வாழ்ந்து காட்டவேணும்"
என ஆதங்கத்துடன் கூறிமுடித்தாள்.

இவளது ஆவேசமான பேச்சுக்கள் தாயின் கேள்விகளுக்கான தடங்களையே இல்லாது அழித்ததைப்போன்ற மலர்ச்சியுடன் தாய் அங்கிருந்து அகன்றாள்.


✦ ✦ ✦ ✦

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முகநூல் பாவனையால் பெண்கள் எதிர் கொள்ளும் உளவியல் தாக்கங்கள்

**அறிமுகம்**

பூகோளமயமாதலால் நாளுக்கு நாள் தொழில்நுட்பங்களின் வளர்ச்சி அதிகரித்துச் செல்கின்றது. இதன் விளைவாக இன்றைய உலகில் சமூக வலைத்தளங்கள் இளையோரை வெகுவாக கவர்ந்து வருகின்றன. தற்காலத்தில் ஏராளமான சமூக வலைத்தளங்கள் பாவனையில் உள்ள போதும் முகநூல் வலையமைப்பானது உலகின் ஒவ்வொரு நாட்டிலும் பெருந்தொகையான பயனாளர்களை கொண்டுள்ளது. இந்த "முகநூல் பாவனை" பெரும்பாலான இளைஞர் சமூதாயத்தின் அன்றாடத் தேவைகளில் தவிர்க்க முடியாததாக மாறியுள்ளது. பாவனையாளர்கள், முகநூலின் ஊடாக கருத்துக்கள், புகைப்படங்கள், வீடியோ காட்சிகள், குறுஞ்செய்திகளை பகிர்ந்து கொள்கின்றனர். எனினும் முகநூலினை எவ்வாறு பயன்படுத்த வேண்டும்? என்ற அடிப்படை அறிவை முகநூல் கணக்கினை உருவாக்குவதற்கு முன்னர் பெற்றுக் கொள்ள வேண்டியது அவசியம். தேவையற்ற தொடுப்புக்கள், கோப்புக்களை சேர்த்தல், புகைப்படங்களை தரவேற்றம் செய்தல், முழுமையான சுயவிபரத்தினை பதிவிடல், அறிமுகமில்லாதவரை நண்பர்களாக சேர்த்துக் கொள்ளுதல், போலியான பெயர்களில் காணப்படும் வைரஸ் எதிர்ப்புக் கோப்புக்களை தெரியாமல் கையாளுதல், பயனாளர்களின் கணக்கு மற்றும் ரகசிய குறியீடு முதலியனவற்றை பிறருக்கு அறியப்படுத்தல். முதலிய செயற்பாடுகளினால் முகநூல் பயனாளர்களில் பெண்கள் திட்டமிட்டபடி துஷ்பிரயோகத்திற்கு உள்ளாக்கப்பட்டு மன உளைச்சலுக்கு ஆளாக்கப்படுகின்றனர்.



நிரோ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**முகநூல் பாவனையும் பெண்கள் எதிர் கொள்ளும் உளவியல் தாக்கங்களும்**

அறிமுகமில்லாதவர்களை நண்பர்களாக சேர்த்தல் பெண்கள் தமது முகநூல் கணக்கில் ஏனையோரை விட அதிகமான நண்பர்களை சேர்த்துக் கொள்ள வேண்டும் என்ற அற்ப ஆசையால் தமக்கு முன்பின் அறிமுகமில்லாதவரை நண்பர் பட்டியலில் இணைத்துக் கொள்கின்றனர். இவ்வாறு அறிமுகமில்லாத நண்பர்களின் பின்புலம், தகவல் பகிர்வுகள் என்பன தாம் வாழும் சமூக சூழலுக்கு பொருத்தமற்று அமையும் போது உளரீதியான தாக்கங்களை எதிர்நோக்குகின்றனர்.

**பொய்யான தகவல்களினால் ஏமாற்றமும், மன உளச்சல்களும்**

முகநூல் பாவனையாளர் ஒருவர் தனது புகைப்படங்களை பிறர் கவரும்படி பல்வேறு வகையான மென்பொருட்களை பாவித்து *(photo editor)* பொய்யான தோற்றத்தைப் பதிவேற்றம் செய்வதைப் பொழுது போக்காகக் கொண்டுள்ளனர். இதனால் பெரும்பாலும் பெண்கள் ஏமாற்றமடைந்து பல்வேறு வழிகளில் உளவியல் ரீதியாக பாதிப்படைகின்றார்கள். அத்துடன் முகநூல் பாவனையாளருக்கு முகநூல் நிறுவனத்தினால் வழங்கப்படும் உறுப்புரிமையில் பொய்யான பெயர்கள், பதவிகள், வசிக்கும் நாடுகள், தொழில், கல்வித்தகைமைகளைப் பொய்யாக பதிவு செய்யும் போது இவர்களைப் பல பெண்கள் பின் தொடர்ந்து செல்வதானால் இறுதியில் அனைத்தும் பொய் என உணர்ந்து ஏமாற்றமடைந்து மன உளைச்சலுக்கு ஆளாகின்றனர். மேலும் ஒருவரின் அனுமதி இன்றி அவரின் புகைப்படங்களை வேறு நபர்கள் வேடிக்கையாகவும், பழிவாங்கும் கோப உணர்வுடனும், அவமானப் படுத்தும் நோக்கத்துடனும் முக நூலில் பதிவேற்றம் செய்யும் போது குறித்த புகைப்படம் பிரதிபலிக்கும் நபர் இத்தகைய செயலால் மனநிலை பாதிக்கப்பட்ட நிலையில் தனிமைப்படுத்தப்பட்டு தற்கொலைக்கு முயற்சி செய்கிறார்.

**எனவே முகநூலில் அவசியமற்ற நபர்களை நண்பர்களாக சேர்த்துக் கொள்ளுவதனால் பெண்கள் திட்டமிட்டபடி பல்வேறு துஷ்பிரயோகங்களுக்கு உள்ளாக்கப் படுகின்றார்கள். மேலும் உளத்தாக்கங்களுக்கு உட்படுத்தப்பட்டு இறுதியில் தற்கொலையே எல்லாவற்றுக்கும் தீர்வு என்று நினைத்து தங்களுடைய வாழ்க்கையினை முடித்துக் கொள்ளுகின்றனர்.**



**நண்பர்களின் கருத்துப்பகிர்வால் மனஉளைச்சலும், தற்கொலையும்**

கையடக்கத் தொலைபேசியில் உள்ள "சுய கமரா" *(Selfie)* மூலம் ஒருவர் தன்னுடைய புகைப்படத்தை எடுத்து முகப்புத்தகத்தில் பதிவேற்றம் செய்து நண்பர்களின் கருத்துப் பகிர்வு, விருப்புக்களின் தொகை என்பவற்றால் தான் திருப்தி பெறாத போது மன உளைச்சலுக்கு உள்ளாகி தற்கொலை வரை செல்கின்றார்

**தொடர்ந்தேர்ச்சியான அழைப்பும், விசனப்படுதலும்**

முகநூலில் வேறு நபர்களுடன் பெண்கள் குறுஞ்செய்தியூடாக தகவல்களைப் பரிமாறிக் கொண்டிருக்கும் போது குறித்த பெண்ணை ஒருவர் அவசரமாகத் தொடர்பு கொள்ள முயற்சிக்கும் போது அந்தப் பெண் தன்னுடைய கேளிக்கையான உரையாடலுக்கு அதிக முக்கியத்துவம் கொடுப்பாராயின் தேவை கருதித் தொடர்பு கொண்ட நபர் விசனப்படலாம். அதனால் தகவல் பரிமாற்றம் பாதிக்கப்படும். மேலும் குறுஞ்செய்தியூடாக தகவல்களைப் பரிமாறிக் கொண்டிருக்கும் போது தகவலை தெரிவிக்க தொடர்பு கொண்ட நபர் மீது கோப உணர்வினை சில வேளைகளில் வளர்த்துக் கொள்ளலாம். தன் சந்தோசத்தை அவர் கெடுப்பதாக நினைத்துக் கொள்ளலாம். இத்தகைய சிந்தனையின் வெளிப்பாடு உளவியல் தாக்கத்தின் பிரதிபலிப்பாகும்.

**தேவையற்ற அரட்டைகள் மூலமான உளவியல் தாக்கங்கள்**

முகநூலில் குறுஞ் செய்திகளினூடாகப் பகிரப்படும், அனுப்பப்படும் தேவையற்ற அரட்டைகள், கேலி, கிண்டல் முதலியவற்றால் பெண்கள் மன ரீதியான தாக்கத்திற்கு உள்ளாகின்றன.

**கருமங்களில் பின்னடைவும் மனஅழுத்தமும்**

பெண்கள் அத்தியாவசியமான கல்வி, தொழில், வீட்டு வேலைகளில் ஈடுபடும் போது முகநூலில் அதிகமான நேரங்களை பிரயோசனமற்று

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கழிப்பதனால் தமது வேலைகளை உரிய நேரத்தில் செய்து கொள்ள முடியாமல் உறவினர்கள், நிறுவன அதிகாரிகள், ஆசிரியர்களின் கடுஞ் சொற்களுக்கு உள்ளாவதனால் பல்வேறு வகையில் மன அழுத்தங் களால் பாதிக்கப்படுகின்றனர்

**ஆபாச நோக்கங்களுக்காக முகநூல் கணக்கினை பயன்படுத்துதல்.**

பல்துறை சார்ந்தோரின் வெவ்வேறு நோக்கத்திற்காக பயன்படுத்தப்படும் சமூக வலைத் தளமான முகநூலில் ஆபாசத்துடன் தொடர்புடைய சில கணக்குகள் அல்லது ஆபாசமான புகைப்படங்கள் மற்றும் வீடியோ இணைப்புக்கள் சாதாரணமாகவும், குறுஞ்செய்திகளினூடாகவும் பகிரப்படுகின்றன. இதனால் சில பெண்கள் ஆபாசமான புகைப்படங்களுக்கு அடிமையாகின்றனர்.

**புதுமைகளால் கவரப்படுதலும் பயன்படுத்த எண்ணுதலும்**

முகநூல் வலையமைப்பினூடாக வணிக நிறுவனங்கள் தமது உற்பத்திகளை காட்சிப் படுத்துவதோடு, இணைய வழியிலான பொருட் கொள்வனவை தூண்டுகின்றனர். இதற்கு அதிகள விலான செலவுகள் இருப்பதால் சில பெண்கள் இதனை வாங்க முடியாத நிலையில் உளவியல் தாக்கத்திற்கு உட்படுகின்றனர்.

**மோசடிகள் மூலமான உளவியல் தாக்கம்**


முகநூலின் மூலம் பெண்கள் தேவையற்ற வலைத்தளங்களுக்குள் பிரவேசித்து போலி விடயங்களை உண்மை விடயங்களாக நம்பி தமது வங்கி கணக்கு, தொலைபேசி இலக்கங்கள், புகைப்படங்கள் ஆகியவற்றை உள்ளீடு செய்கின்ற போது இறுதியில் அது போலியானவை என ஏமாந்து போகும் தருணத்தில் உளவியல் தாக்கத்திற்கு உட்படுகின்றனர்.

**முடிவுரை**

எனவே முகநூலில் அவசியமற்ற நபர்களை நண்பர்களாகச் சேர்த்துக் கொள்ளுவதனால் பெண்கள் திட்டமிட்டபடி பல்வேறு துஷ்பிரயோகங் களுக்கு உள்ளாக்கப்படுகின்றார்கள். மேலும் உளத்தாக்கங்களுக்கு உட்படுத்தப்பட்டு இறுதியில் தற்கொலையே எல்லாவற்றுக்கும் தீர்வு என நினைத்துத் தங்களுடைய வாழ்க்கையினை முடித்துக் கொள்ளுகின்றனர்.

✦ ✦ ✦ ✦

# இருப்பு



வானத்திற்கும் எனக்குமான தொடர்பு
இருந்து கொண்டேதான் இருக்கின்றது
அது எனக்கும் உனக்குமான நினைவைப் போல
யாருமற்ற வனாந்தரத்தில் கூட
என்னால் வசித்திடக் கூடும்
வானம் சொல்லும் கதைகளைக் கேட்ட வண்ணம்

இசைபாடி வரும் கானக் குயில்களின்
பாடல்களைச் சுமந்தவாறும்
பூக்களில் பரவும் மென்மணத்தை நுகர்ந்தவாறும்
வானம் எனக்கு அருகே மிக அருகே
வந்திடக் கூடும்
ஆர்ப்பரித்த கடலிடையே நின்றிட்ட போதும்
துணையிருந்த வானே எனக்கு இன்றும்
துணையிருப்பதாய்
நான் அதனில் காதல் கொள்வேன்
முரண்களும் முடிச்சுகளும் எனைப் பிணைத்திடினும்
முகிலினிடையே புகுந்தும் அமிழ்ந்தும்
விளையாடிச் சுகம் காண்பேன்
வேண்டப்படினும் கிள்ளியெறியப்படினும்
நான் காணும் தெளிவும் மகிழ்வும்
வானே நீயாகிட வேண்டும்
அதுவன்றோ நான் காணும் வாழ்க்கையின் மிகுதி

மாதவி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# மலையகத் தேயிலைத்தோட்டப் பெண்கள்

சி. சத்தியகலா
ஹற்றன்

நான்கு பக்கங்களும் மலைகளால் சூழப்பட்டதால் மலையகம் எனக் காரணப்பெயர் பெற்ற மத்திய மலைநாட்டிலே எத்திசையிலும் புன்னகைக்கும் தேயிலை இளவரசிக்கென்றே கடல் மார்க்கமாய் கொண்டுவரப்பட்ட மலைகளின் மாணிக்கங்களே மலையக மைந்தர்கள்

“அப்பனின் சதை மேல் ஏறியிருந்து தானும்
ஈங்கெவர் வாழவோ தன்னுயிர் தருகுவன்”

என்ற சி.வி.வேலுப்பிள்ளையின் வார்த்தைகளுக்கு என்றும் உரித்துடையவர்களாக இருக்கின்றார்கள் மலையக மக்கள். மலையகம் என்றாலே லயத்து வாழ்க்கை, வறுமை, தேயிலைச் செடி என்பனவே இன்றும் எம் கண் முன் தோன்றுகின்றன. இவ்விம்பங்களைப் பொய்யாக்கும் வண்ணம் பல மாற்றங்கள் நடந்தேறிய வண்ணம் இருப்பினும் லயத்து வாழ்க்கைக்கும், தேயிலைக்கும் தன்னை அர்ப்பணிக்கின்ற நெஞ்சங்கள் இன்றும் இருக்கத்தான் செய்கின்றன. இம்மக்களின் வாழ்வியலுக்கு ஆதாரமாய் அமைவது தேயிலைக் கொழுந்துதான்.

இலங்கையின் பொருளாதாரத்தின் முதுகெலும்பாக விளங்குபவர்கள் மலையகத்தவர்கள். பெரும்பான்மையான வருமானம் இவர்களாலேயே ஈட்டித்தரப்படுகின்றது. இருப்பினும் அதில் பெரும்பான்மையான பங்கு பெண்ணுக்கேயுரியது என்பதை நாம் முழுமையாக ஏற்றுக் கொள்ளத்தான் வேண்டும். ஆனால் இங்கு பெண்ணுக்கான உரிமைகளோ, சலுகைகளோ வழங்கப்படுவதில்லை என்பதையும் ஏற்றுக்கொள்ளத்தான் வேண்டும்.

தேயிலைத் தோட்டத்தில் பணிபுரிபவர்களுக்கென்று எட்டு மணித்தியால வேலை, ஐந்நூறு ரூபா சம்பளம், எண்பதுவீத வரவு, பதினெட்டு கிலோக் கொழுந்து பறித்தல் எனப் பல பொதுவான எழுதப்பட்ட சட்டங்கள் இருக்கின்றன. ஆனால் இச்சட்டங்கள் பெண்களுக்கு ஒரு விதமாகவும், ஆண்களுக்கு மற்றுமொரு விதமாகவும் செயற்படுகின்றன. உலகமெங்கிலும் ஆணுக்குப் பெண் சரிநிகராக பணிகளில் ஈடுபட்டாலும் எங்கோ ஓர் மூலையில் ஆணடிமைத்தனத்தால் பெண்கள் நசுக்கப்பட்டுக்கொண்டுதான் இருக்கின்றார்கள். இந்நிலைமையே அடிமைகளாகக் கொண்டுவரப்பட்ட மலையகமக்கள் மத்தியிலும் இடம்பெறுகின்றது. அந்தநிலையில் நோக்கும் போது, ஒரு நாளைக்குத் தேயிலைப் பறிப்பவர்கள் எட்டு மணி நேரம் வேலைக்கு அமர்த்தப்படவேண்டியது நியதி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆனால் மலையகத்தில் ஆண்கள் கிட்டத்தட்ட நான்கு மணித்தியாலங்களே பணிப்புரிகின்றனர். காலை எட்டு மணிக்கு ஆண்களும் பெண்களும் வேலைத்தளத்திற்குச் செல்கின்றார்கள். ஆண்கள் பன்னிரெண்டு மணியளவில் வீடு திரும்புகின்றார்கள், பெண்கள் மாலை ஐந்து மணிக்கே வீடு திரும்பு கின்றார்கள். வேலை நேரத்திலே பெண்களுக் கெதிராக அநியாயங்களே நடக்கின்றன. அது மட்டுமல்லாமல் பதினெட்டு கிலோகிராம் கொழுந்து இருபாலாரும் எடுக்கவேண்டும். இக்கணக்கிடப்பட்ட கொழுந்தை பெண்கள் கிட்டத்தட்ட ஒன்பது மணித் தியாலத்திலும், ஆண்கள் எட்டு மணித்தியாலத்திலும் கொய்கின்றனர். இதன் மேற்பார்வையில் பெண்கள் மெதுவாக பணிப் புரிபவர்கள் என்றே அறியாதோர் கருதுவதுண்டு. ஆனால் உள்நுழைந்து பார்த்தால் காரணம் அதுவாக இருப்பதில்லை.



பெண்களுக்கு கொழுந்து பறிப்பதற்கு ஒரு நாளைக்கு ஒரு தேயிலை மலைப்பகுதி வழங்கப்படும். அதிலும் பெண் ஒருவருக்கு இருபது தேயிலை மரங்கள் என்றடிப்படையில் ஒரு நிரை வழங்கப்படும். தனக்கு வழங்கப்பட்டிருக்கும் நிரையிலே உரிய பெண் பதினெட்டு கிலோகிராம் கொழுந்தைப் பறிக்கவேண்டும். அதுமட்டுமல்லாமது தனக்காக வழங்கப்பட்டிருக்கும் நிரையில் தேயிலைச் செடிகளைச் சுற்றி வளைத்திருக்கும் கரடுமுரடான புற்களைப்பிடுங்கி சுத்தம் செய்துக் கொள்ளல், தேயிலைக்கு இடையில் உள்ள கான்களைச் சுத்தம் செய்தல் போன்ற பொறுப்புக் களும் பெண்களுடையதே ஆனால் ஆண்களுக்கு அவ்வாறான பொறுப்புக்கள் எதுவுமில்லை. ஒரு நாளைக்கு ஒரு மலைப்பகுதியைக் கொடுத்தால் அத்தேயிலை மலையில் எப்பகுதியில் கொழுந்து அதிகமாக இருக்கின்றதோ அப்பகுதியில் சென்று தனக்கு வழங்கப்பட்ட பதினெட்டு கிலோகிராம் கொழுந்தைப் பறிக்கலாம் என்ற நியதிக்கு உட்பட்டவர்கள்.

இவ்வாறு இருபாலாரும் பறிக்கப்படும் கொழுந்து கணக்குப்பிள்ளையால் நிலுவைக்கு உட்படுத்தப்படும். நிலுவையிலும் பெண்களுக் கெதிராகக் கொடுமைகளே இழைக்கப்டுகின்றன. ஆண்கள் காலை எட்டு மணியிலிருந்து கிட்டத்தட்ட பதினொரு மணியளவில் கொழுந்தைப் பறித்துவிட்டு தனக்குரிய பதினெட்டு கிலோகிராம் எடுத்துவிட்டேன் எனக்கருதியதும் நிலுவைக்கு கொண்டு சென்று கொடுத்துவிட்டு வீடு திரும்புவர். ஆனால் பெண்க ளுக்கு அவ்வாறில்லை. பத்துமணி, ஒரு மணி, நான்கு மணியென மூன்று நிலுவைகளாக கொழுந்து கணக்கிடப்படும். இம்மூன்று நிலுவைகளிலும் மூன்று கிலோகிராம் என்றரீதியில் நாளொன்றுக்கு ஒன்பது கிலோகிராம் தோட்ட நிருவாகத்திற்கென்று அவர்களின் கொழுந்தில் பெற்றுக் கொள்ளப் படுகின்றது. அந்தவகையில் கணக்கிட்டால் பெண்கள் ஒரு நாளைக்கு இருபத்தேழு கிலோகிராம் கொழுந்து பறிக்கின்றனர்.

பலஅடக்குமுறைளுக்கு மத்தியில் ஒரு நாளிற்கு ஆண்களை விட பெண்கள் அதிகமாகப் பணிப்புரிந்தாலும் ஆணுக்கு நிகரான கூலியே வழங்கப்படுகின்றது. அதுமட்டுமல்லாது, இருபாலா ரும் பறிக்கின்ற கொழுந்தைப் பொதியிடும் பணியிலும் பெண்களே ஈடுபடவேண்டிய கட்டாயத் தினுள் தள்ளப்படுகின்றனர். பொதியிடும் போது நேர்த்தியான கொழுந்துகளை மட்டும் இனங்கண்டு ஒழுங்குபடுத்திப் பொதியிட வேண்டும். இவ்வாறான பல ஒடுக்குமுறைகளுக்கும் அநீதிகளுக்கும் மத்தியில் பணிப்புரிகின்ற பெண்கள் குனிந்துக் கொண்டே செல்வதனாலோ என்னவோ ஆண்களால் இன்றும் குட்டப்பட்டுக்கொண்டே இருக்கின்றார்கள்.

“ நிமிர்ந்து நடந்திடு பெண்ணே உன்
உரிமைகளுக்காய் குரல் கொடுத்திடு”

✦ ✦ ✦ ✦



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நுண்கடன்களால் பெண்கள் எதிர்கொள்ளும் உளவியல் தாக்கங்கள்

## மட்டக்களப்பு பிரதேசத்தை அடிப்படையாகக் கொண்ட ஓர் ஆய்வு



**தி.நிரஞ்சனி**

கிழக்குப்பல்கலைக்கழம்

**நுண்கடன் நிறுவனங்கள் - அறிமுகம்**

உலகின் பொருளாதாரம், நனிநபரின் வாழ்வாதார முன்னேற்றம், கிராமப்புறங்களில் வசிக்கும் பெண்களின் வறுமையை ஒழித்தல், முதலிய செயற்பாடுகளுக்கு நுண்கடன் திட்டங்கள் பாரிய பங்களிப்பினைச் செய்து வருகின்றன. ஆனாலும் இன்றைய நிலையில் நுண்கடன் நிறுவனங்கள் "ஏழ்மையை அழிப்பது அல்ல ஏழையை ஒழிப்பது" என்பதனையே நோக்காகக் கொண்டு செயற்பட்டு வருகின்றமையினைக் காணக் கூடியதாக உள்ளது.

சுயதொழில் மூலமாக நாளாந்த வருமானத்தினைத் தமது அடிப்படைத் தேவைகளுக் காகவும், ஆடம்பரத் தேவைகளுக்காகவும் பெற்றுக் கொள்ள முயலுகின்ற பெண்கள் தங்களது உடனடித் தேவைகளுக்காக நுண் கடன்களை நாடிச் செல்லுகின்றனர். வங்கிகளில் கடன்களை பெற்றுக்கொள்வதற்கான வழிமுறைகள் அதிகம் இருப்பதனால் இலகுவான வழிமுறைகளில் நுண்கடன்களை வழங்கும் நிதி நிறுவனங்களிடம் *(Micro Finance Company)* இருந்து அவர்கள் கடன்களை பெற்றுக் கொள்ளுகின்றனர்.

நுண்கடன் நிறுவனங்கள் கடனை வழங்குவதற்காக கடனாளிகளிடம் இருந்து அடையாள அட்டை, வாக்காளர் பதிவு, பிணையாளி யின் அடையாளம், வருமானத்தை உறுதிப்படுத்தும் ஆவணங்கள் முதலியவற்றை பெறுகின்றன. பின்னர் கடனாளிகளை குழுக்களாக பிரித்து ஒழுங்குபடுத்தி அவர்களுக்குள்ளேயே ஒவ்வொரு வரையும் பிணையாளிகள் என்ற நிலையில் கையொப்பமிடச் செய்கின்றனர்.

பின்னர் ஆவணங்கள் சரி என உறுதிப் படுத்திய நிலையில் நுண்கடன் நிறுவனங்கள் கடனாளிகளிடம் இருந்து தங்கள் நிறுவனங்களின் இறுக்கமான விதிமுறைக்கமைவாக செய்முறைக் கட்டணம், சேவை வரி, தவணை வரி, தவணைக் கடன் மீறிய நிலையில் கடனுக்கு அபராதம், இடைக்கால கடன் சேமிப்பு, ஆயுள் காப்பீடு, பணக் பரிமாற்றம், மற்றும் கடன் முதலியவற்றை அறவிட்ட பின்னர் சிறு தொகைப் பணத்தினை கடனாளிகளுக்கு வழங்குகின்றனர்.

இந்நிலையில் குறிப்பிட்ட பணத்தைப் பெற்ற பெண்கள் தமது அடிப்படைத் தேவை, ஆடம்பரத் தேவை என்ற நிலையில் விரைவாகப் பணத்தினை செலவு செய்து விடுகின்றனர். இந்நிலையில் நாள், கிழமை, மாதம் என்ற கால அடிப்படையில் குறிப்பிட்ட தொகைப்பணத்தினை

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

அதிகூடிய வட்டியோடு செலுத்துவதற்கு நிற்பந்திக்கப்படுகின்றனர்.

**நுண்கடன்களால் பெண்கள் எதிர் கொள்ளும் உளவியல் தாக்கங்கள்**

மட்டக்களப்பு மாவட்டத்தில் இடம்பெற்ற யுத்தம், சுனாமியின் தாக்கம் முதலியவற்றால் பாதிக்கப்பட்ட பெண்களை மையமாகக் கொண்டு நுண்கடன் நிறுவனங்கள் தமது கடன் வழங்கும் திட்டங்களைத் தீவிரப்படுத்தியுள்ளன. இதனால் பெண்கள் தமது தேவைகளை நிறைவு செய்ய நுண்கடன்களை பெற்றுக்கொள்ளுகின்றனர். பின்னர் நிர்ணயிக்கப்பட்ட தவணைக்கான பணத்தினை உரிய வேளையில் வழங்குவதற்கும், வழங்க முடியாத சூழ்நிலைகளிலும் பெண்கள் பல்வேறு வழிகளிலும் நெருக்கடிகளைச் சந்திக்கின்றனர். இதனால் தற்கொலை, பாலியல் ரீதியிலான தாக்கங்கள், உறவுகளோடு முரண்படும் நிலை, உடமைகளை இழத்தல், நுண்கடன் நிறுவன முகவர்களின் தகாத வார்த்தைப் பிரயோகங்கள் முதலியவைகளுக்கு ஆளாக்கப்பட்டு பல்வேறு வழிகளிலும் உளவியல் ரீதியிலான தாக்கங்களுக்கு உள்ளாகின்றனர்.

**தற்கொலையும், கொலைமுயற்சியும்**

நுண்கடன் நிறுவனங்கள் பாதிக்கப்பட்ட பெண்களுக்கு முறையான வாழ்வாதாரத் திட்டங்களை வகுத்துக் கொடுக்காமல் கடன்களை மட்டும் வழங்குவதனால் அன்றாடம் கூலித் தொழில் செய்து சீவியம் நடத்தும் பெண்கள் தங்களை அறியாமலேயே பாதிக்கப்பட்டு தற்கொலைக்கு முயற்சிக்கின்றனர். இதனால் உயிர்களை இழக்கும் நிலையை இன்று மட்டக்களப்பு மாவட்டத்தில் காணக்கூடியதாக உள்ளது.

உதாரணம் - மட்டக்களப்பில் சந்திவெளியில் இரு ஆண்பிள்ளைகளின் தாய் ஜெயசுதன் யோகேஸ்வரி (வயது-26) என்பவர் கணவர் வெளிநாட்டில் இருக்கும் போது அவருக்கு தெரியாமல் 120,000.00 ரூபாய் பணத்தினை தனியார் நிறுவனமொன்றில் கடனாக பெற்று மாதாந்தம் கணவர் செலவுக்கு அனுப்பும் பணத்தில் கடனைச் செலுத்தி வந்தார். கணவன் நாடு திரும்பி யதும் கடனை கட்ட முடியாமல் அதிகாலை வீட்டு வளையில் தூக்கிட்டு தற்கொலை செய்து கொண்டார். இது போன்றே மட்டக்களப்பு ஆரையம்பதி பிரதேசத்திற்கு உட்பட்ட தாழங்குடா பிரதேசத்தில் கணபதிப்பிள்ளை விஜயலட்சுமி (வயது-46), முனைத்தீவில் மூன்று வயது பிள்ளையின் தாய், மட்டக்களப்பு இருதயபுரத்தில் கணவன் மனைவியை வெட்டிக் கொலை, செங்கலடி ஜெயந்திபுரத்தில் குடும்ப பெண்ணுக்கு வாள் வெட்டு முதலிய செயற்பாடுகள் நாளாந்தம் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன.

**நுண்கடன் நிறுவன முகவர்களின் தகாத வார்த்தைப் பிரயோகங்கள்**

நுண்கடன் வழங்கும் நிறுவனங்கள் அதிக வட்டியில் இலகுவான முறையில் நுண்கடன்களை பெண்களுக்கு வழங்கி வருகின்றன. தவணை பணத்தை செலுத்துவதற்கு நேரம் தாமதமாகி வருதல், தவிர்க்கமுடியாத காரணத்தினால் பணம் செலுத்த முடியாத நிலை முதலிய காரணங்களினால் நிதி நிறுவன ஊழியர்கள் அநாகரிகமான முறையில் பெண்கள் மீது வார்த்தைகளை பிரயோகிக்கின்றனர். இதனாலும் கடன் பெற்ற பெண்கள் மன உளச்சலுக்கு உள்ளாகின்றனர்.

நுண்கடன் நிறுவன முகவர்களின் தகாத வார்த்தைப் பிரயோகங்களுக்கு பயந்தும், கடன்களைச் செலுத்துவதற்காகவும் பெண்கள் வீட்டில் உள்ள பொருட்களை விற்றல், குடும்ப உறுப்பினர்களோடு சண்டையிடல், நுண்கடனை செலுத்த நாள், கிழமை வட்டிக்கு கடன் பெறல், போன்றவற்றால் பெண்கள் மன உளச்சலுக்கு உள்ளாகின்றனர்.

**முரண்பாடு**

கடன் பெறுனர்களை இறுக்கமான நடைமுறைகளின் கீழ் குழுக்களாக பிரித்து நிதி நிறுவனங்கள் கடன்களை வழங்குகின்றனர். இந்த முறைமையினால் கடன் பெறுனர்கள் ஒவ்வொரு வரும் பொறுப்புக் கூறலுக்கும், உத்தரவாதத்திற்கும் உள்ளாகின்றனர்.

தவணை நேரங்களில் குழுவில் உள்ள ஒருவரேனும் பணம் செலுத்தத் தாமதிக்கும் போது குழுவின் சக அங்கத்தவர்களால் உளவியல், உடலியல் தாக்கத்திற்கு உள்ளாக்கப்படுகின்றனர். இதனால் பல்வேறு வழிகளிலும் முரண்பாடுகள் ஏற்படுகிறது.

**உடமைகள் பறிபோதல்**

மட்டக்களப்பு மாவட்டத்தின் மீள்குடியேற்றப் பிரதேசங்கள், கிராமங்களில் பெண்கள் தவிர்க்க முடியாத காரணத்தினால் நுண்கடன்களை பெறுகின்றனர். இப் பகுதிகளில் அன்றாட ஜீவனோ பாயத்திற்கான தொழில் பற்றாக்குறையான நிலையிலும் தாம் சேகரித்த பொருட்களை கடன் செலுத்தாத போது நுண்கடன் நிறுவன முகவர்கள் எடுத்து செல்லுகின்றமையானது பல்வேறு மன உளச்சல்களை ஏற்படுத்துகிறது. மேலும் தமக்கு சொந்தமான விலையுயர்ந்த பொருட்களை குறைந்த


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



விலையில் விற்று கடன் செலுத்துகின்றமையும் மன உளச்சல்களுக்கு வழி வகுக்கின்றது.

**பாலியல் ரீதியிலான செயற்பாடுகள்**

மட்டக்களப்பு மாவட்டத்தில் சுய தொழிலுக்காக நுண்கடன் வழங்கும் நிறுவனங்களில் சில நிறுவனங்கள் கடனை வழங்கி விட்டு கடனைச் செலுத்தத் தாமதிக்கும் பெண்களிடம் குறிப்பிட்ட நிறுவன அதிகாரிகள் சிலர் பாலியல் ரீதியில் நடந்து கொள்ள முற்படுகின்றனர். இதனால் கணவன் மனைவிக்கிடையில் குடும்ப வன்முறைகள், பெண்கள் விவாகரத்துக்கு செல்லும் நிலை என பெண்கள் பல வழிகளிலும் தாக்குதல்களுக்கு உள்ளாக்கப்படுகின்றனர். மேலும் நுண்கடன்கள் பெண்களை மையமாக வைத்து வழங்கப்படுவதனால் கடனை அறவிட இரவு நேரங்களில் நுண்கடன் முகவர்கள் வீட்டிற்கு வருவதனால் உற்றார், உறவினர், நண்பர்கள் முதலியோர் பெண்கள் மீது பிழையான அபிப்பிராயங்களை வளர்த்துக் கொள்ளுகின்றனர்.

**முடிவுரை**

மட்டக்களப்பு மாவட்டத்தில் நுண்கடன் நிதி நிறுவனங்களின் அதிகரிப்பினால் பெண்கள் கடனாளர்களாக மாறி நாளாந்தம் பல்வேறு வழிகளிலும் உளவியல் தாக்கங்களுக்கு உள்ளாகி வருகின்றமையினை அண்மைக்காலத்தில் காணக்கூடியதாய் உள்ளது. இந்நிலை நீடிக்குமாயின் சமூதாய அபிவிருத்தி குறிகாட்டியில் இம் மாவட்டம் பின்னடைவினை சந்திக்கும் என்பது உண்மை.

**பரிந்துரைகள்**

1. நிதி நிறுவனங்கள் குறுகிய காலத்தில் கடன் பெறுனர்களின் தேவைக்காக கடன்களை வழங்குகின்றன. நிதி நிறுவனங்களின் ஊடாக கடன் பெற்றவர்களால் முறையாக தவணைப் பணம் செலுத்தப்படுகின்றதா?, தவணைப் பணத்தினை செலுத்துவதற்கு கடனாளர்கள் எவ்வாறான முறைமைகளை அணுகுகின்றார்கள். என்பதனை கண்காணிக்க சட்ட அடிப்படையில் அரச நிறுவனங்களின் செயற்பாடுகளை துரிதப்படுத்தல்.
2. கடன் பெறுனர்கள் என்ன நோக்கத்திற்காக பெறுகின்றார்கள் என்பதனை ஆழமாக அறிந்து நேரடியாக சென்று அவதானித்த பின்னர் கடன்களை வழங்குதல்.
3. ஒரு நிதிநிறுவனத்தில் முதலாவது பெறப்பட்ட நுண்கடன் ஊடாக தொழில் முறையில் எவ்வாறான முன்னேற்றங்களை கண்டுள்ளார்கள் என்பதனை அறிந்த பின்னர் இரண்டாம், மூன்றாம் கட்ட கடன் தொகைக்கு சிபாரிசு செய்தல்.
4. நாளாந்த, வாராந்த அடிப்படையில் தவணைப் பணம் செலுத்தும் முறைமையினை நீக்குதல்.
5. நிதிநிறுவனங்கள் கடன் வழங்கினாலும் அதி கூடிய வட்டியினையே அறவிடுகின்றனர். இந்த வட்டி வீதங்களைக் குறைத்தல்.
6. குடும்பத்தில் உழைக்கும் ஆண்களுக்கு தெரியாமல் பெண்கள் மறைமுகமான வழியில் ஆவணங்களை சமர்ப்பித்து கடன் பெறுவதனை தடை செய்தல்.

✦ ✦ ✦ ✦

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சமூகத்தில் சரிபாதிக்கும் மேலாக அங்கம் வகிக்கும் பெண்கள் குறித்த அடையாளங்கள், மதிப்பீடுகள், கருத்தியல்கள் என்பன போன்றவை ஆண்வழிச் சமூக அமைப்பினால் பெறப்பட்டவை ஆகும். ஆண்வழிச் சமூக அமைப்பின் நியதிகளுக்கு ஏற்பவே பெண்களின் இருப்பியல், வாழ்வியல், இயங்கியல் ஆகியன கட்டமைக்கப்பட்டுள்ளன. ஆணுக்கு அடுத்தபடியாகவே பெண்ணைக் கருதும் ஒருபக்கச் சார்பான போக்கு இன்னமும் சமூகத்தின் அனைத்து மட்டங்களிலும் குறிப்பாக ஆசிய நாடுகளின் சமூகங்களில் இருந்து கொண்டிருக்கின்றது. பெண்ணின் வாழ்வு என்பது ஓர் ஆணைச் சார்ந்திருக்க வேண்டிய முறையிலே 'குடும்பம்' என்ற அமைப்பினூடாகக் கட்டமைக்கப்பட்டிருக்கிறது. இக்குடும்பம் என்னும் நிறுவனத்தில் பெண்ணுக்கு எந்தவகையிலும் அதிகாரம் வழங்கப்படாத நிலைப்பாட்டின் எச்சத்தை இன்றும் பல குடும்ப வாழ்க்கை முறைகளினூடாகக் காணமுடிகிறது. 'குடும்பம்' என்னும் அமைப்பின் ஊடாக ஒரு பெண்ணுக்குரிய அந்தஸ்து முதல் அதிகாரம் வரையான அனைத்து வகையான கடமைகள், பொறுப்புகள், வகிபங்குகள், அசைவியக்கங்கள் ஆகியன வடிவமைக்கப்பட்டு வழங்கப்பட்டுள்ளன. இக்குடும்பம் என்னும் இராட்டினத்தை விட்டுப் பெண் வெளியே சமூகம், தொழில், அரசியல் என்ற தளங்களிற்குள் பிரவேசித்தாலும் இவை யாவற்றினுமுடைய அளவுகோலாகக் குடும்பம் விளங்குகின்றது. ஒரு குடும்பத்தில் பெண் என்பவள் தாய், மகள், சகோதரி, மனைவி, மருமகள் மாமி, மச்சாள், மூதாட்டி மற்றும் நண்பி எனும் பல வகிபங்குகளைப் பெற்று வாழ்ந்து கொண்டிருக்கின்றாள். இவ்வகிபங்குகளின் ஊடாகச் சமூகத்திற்கும் ஆணுக்கும் வேண்டிய கடமைகளையும் பொறுப்புக்களையும் ஆற்றுபவளாக உள்ளாள். இரண்டாம் நிலைப்பட்சம், தங்கி வாழும் நிலை, குடும்பக் கடமைகள், குழந்தைப் பராமரிப்பு, பண்பாட்டுக் கூறுகளின் ஊடுகடத்தி எனும் பணிகளை விடுத்து, பிள்ளைகளுக்கான கல்வியைப் புகட்டுதல், தொழில் வாழ்க்கை, அரசியல் பிரவேசம், சமூகத் தொண்டு எனப் பரந்துபட்ட தளத்திலும் ஒரு பெண் இயங்கிக் கொண்டிருக்கின்றாள்.



**விஜிதா திவாகரன்**

# தனித்து வாழும் பெண்களும்
## பெண் தலைமைத்துவக் குடும்பங்களும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு பெண்ணின் இயங்குவெளியில் எதிர்பாராத விதமாக ஏற்படும் பிரச்சினைகளும், சிக்கல்களும், தடைகளும் அவளைத் தனித்து வாழவும் குடும்பப் பாரத்தைச் சுமக்கவும் இட்டுச் செல்கின்றன. குறிப்பாக எமது நாட்டில் கடந்தகாலங்களில் ஏற்பட்டுள்ள உள்நாட்டு யுத்தங்கள், இயற்கை அழிவுகள் என்பன காரணமாக அதிகம் பாதிக்கப் பட்டவர்களாகப் பெண்கள் அடையாளப்படுத்தப் படுகின்றனர். ஒரு குறிப்பிட்ட சமூகத்தில் ஏற்படும் அல்லது உருவாக்கப்படும் அழுத்தங்கள், தாக்கங்கள் என்பவை பொதுவாக அக்குறிப்பிட்ட சமூகத்தின் பெண்களையே பெரிதும் பாதிக்கின்றன என்பது வரலாற்றினூடாகக் கண்டுகொள்ளப்படும் யதார்த்தநிலை ஆகும். உதாரணமாக, யுத்த இசாம்பவிதங்களிலும் சுனாமி அனர்த்தங்களிலும் அதிகளவான பெண்களும் சிறுவர்களும் கொல்லப் பட்டதாகவும் பாதிக்கப்பட்டதாகவும் வெளியிடப்பட்ட அறிக்கைகள் இதற்குச் சான்றாக உள்ளன.

எமது நாட்டில் வாழும் பெரும்பான்மை மற்றும் சிறுபான்மையினப் பெண்கள் சமூகம் நாட்டினுடைய அசம்பாவிதங்களினாலும் அழிவுகளினாலும் உறவுகளை இழந்து தனிமைப் படுத்தப்பட்டும், குடும்பங்களையும் தமது உறவு களையும் தாமே பராமரிக்கும் நிலைக்கும் தள்ளப்பட்டுள்ளனர். குடும்பக் கயிற்றினை இழுக்கும் போட்டியில் ஆண்களைக் காட்டிலும் அதிகூடிய அக்கறையுடன் அதனை இழுத்துச் செல்லும் பெண்கள், தமக்கு முட்டுக்கட்டையாக முரண் கொடுக்கும் சவால்களைச் சமாளிப்பதற்கு ஏற்றவகையில் உடல், உள மற்றும் ஆத்மரீதியாகச் சோர்ந்து போகாமலும் தளர்ந்து தள்ளாடாமலும் மிகுந்த துணிச்சலோடும் தன்னம்பிக்கையோடும் நிலைமைகளை எதிர்கொண்டு கையாளும் திறனையும் பெற்றிருக்கின்றார்கள் என்பதற்கு இன்று வாழும் பெண் தலைமைத்துவக் குடும்பங்கள் சான்று பகருகின்றன.

குடும்பத்தில் உற்றார் உறவினர்கள் என்ற சுற்றத்தோடு பிறந்து வாழும் ஒரு பெண் பின்னர் பருவ வயதை எட்டியதும் தனக்கென ஒரு தனித்துவமான வாழ்க்கையில் நுழைந்து கொள்கிறாள். அவள் குடும்ப ஒழுங்கு, சமுதாயக் கட்டமைப்பு, சமய விழுமியங்கள், மரபுசார்ந்த பாரம்பரியங்கள் என்ற சுமைகளோடு தனியொரு குடும்பத்தில் வாழத்தலைப்படுகிறாள். திருமண பந்தத்தைத் தொடர்ந்து ஆண் - பெண் இருவரின் ஒத்துழைப்பினாலும் நகர்த்திச் செல்லப்படும் இக்குடும்ப அமைப்பானது ஏதோ ஒரு வகையில் அல்லது ஏதேனும் சில தனிப்பட்ட அல்லது பொதுவான சமூக மற்றும் இயற்கைக் காரணிகளி னால் சிதைவுறும்போது அதிகம் தாக்கப்படுபவர் களாகப் பெண்களும் குழந்தைகளும் உள்ளனர். இத்தகைய துயரோடும் வாழத்துடிக்கும் பெண்ணின் உள்ளார்ந்த பெண்மை நிலையானது ஆணாதிக்கத் தோடு எதிர்நீச்சல் போடுவதனை இன்று எம்மால் பல குடும்பங்களினூடாகக் காணமுடிகின்றது.

வறுமை, பொருளாதாரம், பாதுகாப்பு என்பன போன்றவற்றின் காரணமாகப் பிரச்சினை களையும் ஏமாற்றங்களையும் சந்தித்து தமது வாழ்வில் விரக்தியுற்ற பெண்கள் தம்மையும் இழந்து விடுகின்ற நிலைக்குத் தள்ளப்படுவதனையும் காணலாம். இத்தகைய சந்தர்ப்ப சூழல்களில் சமுதாய வளர்ச்சிநிலையும் பெரும் பாதிப்பிற் குள்ளாகும் என்பது 'காலம் கடந்த ஞானமாகவே' புரிந்து கொள்ளப்படும். பெண்கள் சமூகத்தில் ஏன் தனித்து வாழத்தலைப்பட்டார்கள்? பெண்தலை மைத்துவக் குடும்பங்கள் சமூகத்தில் ஏன் உருவாகின? என்பன போன்ற வினாக்களுக்கு இன்று விடைகள் தேடப்படுகின்றன. அவ்விடைகள் யாவும் அவற்றினை நிவர்த்தி செய்வதற்குக் காரணிகளாக அமையாமல் வெறும் விடைகளாகவே உள்ளமை வருந்தத்தக்க விடயமாகும்.

இங்கு தனித்து வாழும் பெண்கள் மற்றும் பெண்கள் தலைமைத்துவக் குடும்பம் என்ற வகைப்பாட்டில் திருமணமாகிய பெண்களும் திருமணமாகாத பெண்களும் உள்ளடங்குகின்றனர். தனித்து வாழும் பெண்கள் என்ற வகைப்பாட்டினுள் விருப்பத்தின்பேரிலும் விதிவசத்தின் பேரிலும் திருமணமாகாத பெண்களும், திருமணம் செய்து கணவனுடன் வாழமுடியாமல் கணவனைப் பிரிந்து அல்லது விவாகரத்துப் பெற்று வாழும் பெண்களும், கணவனை இழந்த பெண்களும், சமுதாயத்தினால் முத்திரை குத்தப்பட்ட பெண்களும் இவ்வகைப் பாட்டினுள் உள்ளடக்கப்படுவர். விருப்பத்தின்பேரிலும் விதிவசத்தினாலும் திருமணமாகாத பெண்கள் என்போர் தமது விருப்பு - வெறுப்பு, இலட்சியம், அந்தஸ்து, தொழில், படிப்பு ஆகியவற்றிற்கு ஏற்ப உரிய ஆண்மகன் ஒருவர் கிடைக்காமையினால் திருமணம் செய்யாமல் வாழ்நாளைக் கழித்தவர்கள். இவர்கள் பெற்றோரின் இறப்பு, சகோதரர்களின் திருமணம் என்பவற்றின் காரணமாக வாழ்க்கையில் தனித்து விடப்பட்டவர்களாக உள்ளனர். இவர்களைச் சமூகம் 'முதிர்கன்னிகள்' என்று குறிப்பிடுகின்றது. இவர்களில் சிலர் விதிவசத்தினால் திருமணமா காமலும் இருக்கின்றனர். அதாவது காதல்வயப்பட்டுத் தோல்வியடைந்து வாழ்நாளைக் கழித்தவர்களும், சீதனம் போன்ற பொருளாதாரம் இன்மையினால்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருமணம் செய்ய வாய்ப்பில்லாதவர்களும், திருமணப் பேச்சை முன்னெடுத்துச் செல்லவும் நடத்தவும் யாருமில்லாதவர்களும், குறிப்பிட்ட நோய்களினால் பீடிக்கப்பட்டவர்களும், அங்கவீன முற்றவர்களும் இவ்வகைப்பாட்டினுள் அடங்குவர்.

திருமணம் செய்து பின்னர் கணவனின் நடத்தையில் மாற்றங்களை உணருதல், கருத்து முரண்பாடு, கணவனின் வெறுப்புக்கு ஆளாகுதல் போன்ற ஏதேனும் சில காரணங்களினால் கணவனுடன் சேர்ந்து வாழ முடியாமல் கணவனைப் பிரிந்து அல்லது விவாகரத்துப் பெற்று வாழும் பெண்களும் இன்று தனித்து வாழ்வதனை அவதானிக்கலாம். இவர்கள் குழந்தைகளோடும் சிலர் குழந்தைகளின்றியும் தனித்து வாழ்கின்றார்கள். எமது நாட்டினைப் பொறுத்தவரையில் இவ்வகைப் பாட்டினுள் அடங்கும் பெண்கள் பெரும்பாலும் இளம் வயதுப் பெண்களாகவும் மறுமணம் செய்யும் வயதினையுடையவர்களாகவும் உள்ளனர். இவர்களைச் சமூகம் 'வாழாவெட்டி' என்று முத்திரை குத்திவிடுகின்றது. அத்துடன் சில பெண்கள் திருமணம் செய்யாமலே ஆண்களினால் ஏமாற்றப் பட்டு குழந்தையோடு கைவிடப்பட்ட நிலையிலும் தனித்து வாழ்கின்றனர். இவர்களில் இன்று 'குழந்தைத் தாய்மார்கள்' என்று பாலியல் பருவத்தில் தாய்மை அடைந்து குழந்தைகளைப் பிரசவித்த பாடசாலைச் சிறுமிகள், பெண் குழந்தைகள் போன்றோர் உள்ளடங்குகின்றனர்.

கணவனை இழந்த பெண்கள் எனும் போது கடந்த காலத்தில் நிகழ்ந்த உள்நாட்டுப் போர், இராணுவ நெருக்கடிகள் மற்றும் சுனாமி போன்ற அனர்த்தங்களினாலும் நோய், விபத்து, தற்கொலை போன்ற சம்பவங்களினாலும் கணவனை இழந்து தனித்து வாழும் பெண்கள் இதனுள் அடங்குவர். இவர்களில் முதுமைப் பெண்களும் இளம் பெண்களும் அடங்குவராயினும், எமது நாட்டில் தற்போது இளம் பெண்களே இத்தகைய வகைப்பாட்டினுள் அதிகம் உள்ளதாக அறிக்கைகள் சுட்டிக்காட்டுகின்றன. இவர்களைச் சமூகம் 'கைம்பெண்' (விதவை) என்ற சொல்லினால் குறிப்பிடுகின்றது.

எமது சமூகத்தில் இன்னொரு வகையான இளம் பெண்கள் குழுவினர் தனித்து வாழ்வதனை அண்மைக் காலங்களில் அவதானிக்க முடிகின்றது. சிறுவயதிலேயே உறவினாராலும் பிறராலும் பாலியல் வன்புணர்விற்கு ஆளாக்கப்பட்ட பெண்கள், நடத்தை மற்றும் பண்புரீதியாகச் சமூகத்தில் நெறி பிறழ்ந்தும், உளவியல்ரீதியாகப் பாதிக்கப்பட்டும் வாழும் பெண்கள், அனர்த்தச் செயற்பாடுகளினால் அங்கவீனமுற்ற பெண்கள், ஏதோ ஒரு சந்தர்ப்ப சூழ்நிலையினால் சிறைக்குச் சென்று திரும்பி வந்த பெண்கள், உணர்ச்சி வேகத்தின் காரணமாகக் கொலை மற்றும் தற்கொலை முயற்சியில் ஈடுபட்ட பெண்கள், விடுதலைப் போராட்டத்தில் இணைந்து புனர்வாழ்வு பெற்று மீண்டும் சமூகத்தில் நுழைந்த பெண்கள் ஆகியோர் சமூகத்தின் சந்தேகக் கண்ணிற்கும் முத்திரை குத்தலுக்கும் ஆளாகு வதனால் சமூகத்திலிருந்தும் உறவுகளிலிருந்தும் விலகித் தனித்து வாழ்ந்து கொண்டிருப்பவர்களாக உள்ளனர்.

இவர்களைத் தவிர, பிள்ளைகளினாலும் உறவினர்களினாலும் கைவிடப்பட்டு தனித்து வாழும் முதுமைப் பெண்களும், பிள்ளைகளைத் திருமணம் செய்து கொடுத்தும், அவர்களை வெளிநாட்டிற்கு அனுப்பி வைத்து விட்டும் தனியே வாழும் பெண்களும் எமது சமூகத்தில் உள்ளனர். மேலும் திருமணம் செய்து கணவன் வெளிநாட்டில் வசிப்பதனால் கணவனிடம் போய்ச் சேராமல் தனித்து வாழும் பெண்களும் உள்ளனர். இவர்கள் குடும்ப உறவினர்களோடு வாழ்வதாகத் தென் பட்டாலும் இவர்களின் வாழ்வும் தனிமையில்தான் கழிந்து கொண்டிருக்கின்றது.

இவ்வாறு தனித்து வாழும் பெண்களில் கல்வி, பதவி, அந்தஸ்து, பொருளாதாரம், குடும்பப் பின்னணி ஆகியவற்றில் உயர்நிலையில் இருக்கும் உயர்தரப் பெண்களுக்குச் சமூகத்தில் வரவேற்பு உள்ளமையை அவதானிக்கலாம். மத்தியதர வர்க்கத்துப் பெண்கள்தான் சமூகத்தின் பிடியில் சிக்குண்டு அல்லற்படுகின்றார்கள். கீழ்வர்க்கத்துப் பெண்கள் வீதியை வீடாகக் கொண்டு வாழ்பவர்கள் என்பதுடன் இவர்கள் பற்றிச் சமூகம் அதிகம் அக்கறை கொள்வதில்லை எனலாம். எனினும், ஒரு 'பெண்' என்ற நிலையில் எவ்வர்க்கத்துப் பெண்ணும் தனது வாழ்க்கையின் இறுதிக்கால கட்டத்தில் தனித்து வாழும் நிலையில் பொதுவாக வீட்டிலோ, விடுதியிலோ, வீதியிலோ தனது வாழ்நாளைக் கழிக்கிறாள் ஒரேவிதமான பிரச்சினை களையே அனுபவிக்கின்றாள். மேலும் தனித்து வாழும் பெண்கள் இளமை - முதுமை என்ற வாழ்க்கை வட்டத்தினுள் நின்று கொண்டு சுழலுகின் றார்கள். இவர்கள் இளமையின் ஊசலுக்கும் சலனத்திற்கும் ஆளாகுவதுடன், இவர்களின் இளமையே இவர்களுக்கு ஆபத்தாக அமைந்து விடுகின்றது என்பதுடன், முதுமையும் கூட அவர்களிற்கு ஒரு தடையாக அமைகிறது.

இவ்வாறு தனித்து வாழும் பெண்களை விட்டு எமது சமூகத்தில் பெண்கள் தலைமைத்துவக்


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

குடும்பம் என்ற ஒரு பிரிவினரின் அதிகரிப்பும் தற்போது நிலவுகின்றது. தலைமைத்துவம் என்பது ஆணிற்குரிய ஒன்றாகக் கருதப்பட்ட போதிலும் தற்போதைய குடும்பங்களில் பெரும்பாலும் பெண்களின் தலைமைத்துவப்பாணி அதிகளவில் செல்வாக்குச் செலுத்துவதனை நம்மால் காணமுடிகிறது. குடும்பத்தின் ஆண்மகன் அல்லது தலைவன் நோய்வாய்ப்பட்டிருத்தல், தொழிலின்மை, தலைமைத்துவத்திறன் மற்றும் குடும்பப் பொறுப்பின்மை, ஆணின் சிறைவாசம் என்பன போன்ற காரணங்களினால் சில பெண்கள் குடும்பச் சுமையைப் பொறுப்பேற்று நடத்தும் நிலைப்பாடு உள்ளது. இதில் திருமணமான பெண்களும் திருமணமாகாத பெண்களும் உள்ளடங்குவர்.

இன்னொரு பிரிவினராக போரினாலும், இயற்கை அனர்த்தங்களினாலும் கணவனை இழந்த பெண்களும், காணமால் ஆக்கப்பட்ட மற்றும் சந்தேகத்தின்பேரில் கைது செய்யப்பட்ட ஆண் மக்களின் குடும்பங்களைச் சேர்ந்த பெண்களும் தமது குடும்பத்தைச் சுமக்கும் நிலை எமது நாட்டில் தற்போதைய பிரச்சினையாகப் பெரிதும் காணப் படுகின்றது. இன்று எமது சமூகத்தில் அதிகளவான இளம் பெண்கள் இவ்வகைப்பாட்டினுள் உள்ளடங்கி வாழ்ந்து கொண்டிருப்பதனை அண்மைக்கால அறிக்கைகள் மூலம் அறிய முடிகிறது. குறிப்பாக எமது நாட்டின் வடக்கு - கிழக்குப் பகுதிகளில் வாழும் பெண்கள் இத்தகைய வகைப்பாட்டினுள் உள்ளடங்குகின்றனர்.

ஆணாதிக்கச் சமூகத்தின் சிந்தனைப் புலத்திலும் அதிகார அடக்குமுறைகளின் பிடியிலும் வாழ்ந்து கொண்டிருக்கும் இத்தகைய வகைப்பாட்டிற்குள் உள்ளடங்கும் இளம் பெண்கள் அரசியல், பொருளாதார, சமூக, கலாசாரரீதியான நெருக்கடிகளுக்கும் பிரச்சினைகளுக்கும் முகங் கொடுக்க வேண்டியவர்களாக உள்ளனர். இப்பெண்கள் ஓர் ஆணின் வகிபங்கினையும் கடமைகளையும் பொறுப்புக்களையும் சுமந்து வாழ்வதனால் இரட்டைச் சுமைதாங்கியாக உள்ளனர். இதனால் இவர்கள் வகிபங்குரீதியான முரண்பாட்டினை முதலில் எதிர்கொள்ள வேண்டியு ள்ளது. சைக்கிள் ஓடுதல், இரவு நேரங்களில் வெளியே செல்லும்நிலை என்பன போன்ற காரணங்களினால் சமூகத்தின் சந்தேகக் கண்ணுக்கு ஆளாகுவதுடன், 'அவ ஆம்பிள மாதிரி' என்ற நகைமொழிக்கும் உள்ளாக வேண்டியுள்ளது. மேலும் பொருளாதாரரீதியாக இப்பெண்கள் தாமே தொழிலுக்குச் சென்று வருமானத்தை ஈட்டிக் கொள்ளும் நிலைக்குத் தள்ளப்படுவதனால் தொழில் பணி, வீட்டுப்பணி ஆகியவற்றினைத் தனித்துநின்று மேற்கொள்ள வேண்டியுள்ளது. இத்தகைய இரட்டைச் சுமையினைச் சுமக்கும் பெண்கள் பொருளாதாரரீதியாக மட்டுமன்றி, சமூக கலாசார ரீதியான பிரச்சினைகளுக்கும் முகம் கொடுக்கின் றனர். ஆண்களின் பாலியல்ரீதியான தொல்லைகள் (பாலியல்ரீதியான நோக்குகைகள், கருத்தாடல்கள், செயற்பாடுகள்), அச்சுறுத்தல்கள் என்பவற்றிற்கும் குடும்பத்தினதும் சமூகத்தினதும் தவறான பார்வைகளுக்கும் கடிதல்களுக்கும் உள்ளாகின்றனர்.

மேலும் இப்பெண்கள் சமூகத்தின் நோக்குநிலையில் கணவனை இழந்த நிலையில் அல்லது கணவன் காணாமல் ஆக்கப்பட்ட நிலையில் (கைம்பெண்கள்) சமூகம் குறிப்பிடும் 'வாழாவெட்டி'யாகவும் வாழ்ந்து கொண்டிருப் பதனால் ஆடை ஆபரண அலங்காரம் (தாலி, பொட்டு, பூ அணிதல் போன்றன) கலாசாரரீதியான விழாக்கள், சடங்காசாரங்கள் என்பவற்றிலும் புறந்தள்ளப்பட்டு வாழும் நிலையினையும் அவதானிக்க முடிகிறது. காணமால் ஆக்கப்பட்ட மற்றும் சந்தேகத்தின்பேரில் கைது செய்யப்பட்ட ஆண்மக்களின் குடும்பங்களைச் சேர்ந்த பெண்கள் தமது இயங்குநிலை தொடர்பாக சமூகத்தில் கணவனை இழந்த விதவை நிலையில் வாழ்வதா? அல்லது சமூகம் குறிப்பிடும் 'வாழாவெட்டி'யாக வாழ்வதா? என்ற சந்தேகத்திற்குரிய தர்மசங்கடமான நிலையில் குடும்பத்திலும் சமூகத்திலும் வாழ்ந்து கொண்டிருக்கின்றார்கள். இவர்கள் சமூக கலாசாரரீதியான பங்கேற்புச் செயற்பாடுகளில் ஒதுங்கியும் ஒதுக்கப்பட்டும் சமூகத்தின் ஒரு மூலையில் முடங்கி வாழ்ந்து கொண்டிருக்கின்றார்கள். அத்துடன் இப்பெண்கள் ஏதேனும் அத்தியாவசியத் தேவை கருதி வேறு ஆண்களுடன் கதைத்தல், பழகுதல், உதவி கோருதல் என்பன போன்ற காரணங்களினால் ஒழுக்கரீதியாகத் தவறான பார்வைக்குள்ளாகின்றனர். 'உலை வாயை மூடினா லும் ஊர் வாயை மூட ஏலுமா?' என்ற சமூகத்தின் பழமொழி இவர்களுக்காகவே உருவாக்கப்பட்டது போல உள்ளது. ஏனெனில், சமூகம் இவர்களின் செயற்பாடுகளைக் குற்றமாகக் கடிதலில் தயங்கு வதில்லை. இவர்கள் தமக்குத் தாமே சரியான நேர் கோட்டினை வரைந்து அதன்வழி சென்று கொண்டிருப்பார்கள். தமக்குள் திடமாகவும் திறனாகவும் வாழ்ந்து கொண்டிருந்தாலும் சமூகத்தின் வாயில் இவர்கள் 'பெண்' என்பதனால் எந்நேரமும் அசைபோடப்பட்டுக் கொண்டிருப்பார்கள். இப்பெண்கள் அரசியல்ரீதியாகவும் சில தொல்லை களையும் அச்சுறுத்தல்களையும் மிரட்டல்களையும்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

அடக்குமுறைகளையும் சந்திக்கின்றனர். இராணுவத்தினர் மற்றும் காவல்துறையினரினதும், அரசியல் கட்சி சார்பானவர்களினதும் அதிகார அடக்குமுறைகள் இப்பெண்கள் மீது மறைமுகமாகப் பிரயோகிக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றன.

இந்தவகையில் இப்பெண்கள் முட்கம்பி வேலிக்குள் தமது வாழ்நாளை ஒருவிதமான ஏக்க உணர்வு, பயம், மனப்பாரமான நிலை ஆகிய தன்மைகளில் கழிக்க வேண்டியுள்ளது. முட்செடியில் சீலை விழுந்தாலும் சீலையில் முள் விழுந்தாலும் இறுதியில் சீலைக்குத்தான் பாதிப்பு ஏற்படுவதைப் போல எந்தவிதமான சந்தர்ப்ப சூழ்நிலைகளிலும் சமூகத்தின் விளைவுகள் இவர்களுக்குத்தான் பாதிப்பினை ஏற்படுத்துகின்றன. அத்துடன் இப்பெண்கள் தொழில் - இல்லற வாழ்க்கை எனும் இரட்டைப்பணிகள் மட்டுமன்றி, ஆண் - பெண் எனும் இரட்டை வகிபங்குநிலையினையும் வகிக்க வேண்டியவர்களாக உள்ளனர்.

இந்தவகையில் இவ்வாறான சமூகச் சிக்கல்களை வெறுமனே மந்திரமமாக நிதமும் உச்சரிக்காமல் இவர்களை உரிய முறையில் அடையாளம் கண்டு அவர்களின் முயற்சிக்கும் வாழ்வுக்கும் மறுமலர்ச்சியை ஏற்படுத்தும் வகையில் சமூகச் செயற்பாடுகளும் அபிவிருத்திகளும் அமைய வேண்டும் என்பது ஒவ்வொரு நபருடைய ஆத்மார்த்த எண்ணமாக இருக்க வேண்டும். பெண்கள் அமைப்புக்கள், பெண்கள் விடயத்தில் ஈடுபாடு கொண்டோர், இவ்விடயம் தொடர்பான ஆய்வாளர்கள் என்று பலர் இப்பெண்களின் பிரச்சினைகளையும் சிக்கல்களையும் சுட்டிக்காட்டுகின்றபோதும் இத்தகைய விடயங்கள் 'வழக்கமான பெம்பிளை விவகாரம்' என்ற கருத்தில் மறக்கப்பட்டு விடுகின்றன. உண்மையில் இவை பெண்களின் தனிப்பட்ட பிரச்சினைகள் என்று கருதிப் புறந்தள்ளி விடாது இவை எமது சமூகத்தின் ஒட்டுமொத்தமான பிரச்சினை என்று கருதும் மனோநிலை இத்துறை தொடர்பான அரச மற்றும் தனியார் நிறுவனங்களுக்கும், சமூகத்தின் ஒவ்வொரு நபருக்கும் ஏற்பட வேண்டும்.

பெண்களின் பிரச்சினைகளும் அவர்களின் உடல்சார் பால்நிலை வேறுபாடுகளின் அடிப்படையிலேயே நோக்கப்படுகின்றன. ஒவ்வொரு பெண்ணுருவின் உள்நிலையில் மனிதத்திற்கான இருப்பை நிலைநிறுத்தக்கூடிய அறிவும் ஆற்றலும் ஆண்மையும் இருக்கிறது என்ற உண்மைநிலைப்பாட்டை உணர வேண்டும். இவ்வுண்மையைத் தனித்து வாழும் பெண்களினதும் பெண் தலைமை தாங்கும் குடும்பங்களில் உள்ள பெண்களின் செயற்பாடுகளும் அவர்களின் வாழ்வியல் முறைகளும் நமக்குப் பறைசாற்றுகின்றன. மனைவியை இழந்த அல்லது விவாகரத்துப் பெற்ற ஆண்களில் ஒரு சிலரைத் தவிர பெரும்பாலானோர் மறுமணம் செய்து அல்லது வேறு பெண்களுடன் சேர்ந்து அல்லது உல்லாசமான முறையில் தனித்து வாழும் நிலையில் கணவனை இழந்த, கணவனால் கைவிடப்பட்ட பெண்கள் மற்றும் விவாகரத்துப் பெற்ற பெண்கள் சமுதாயத்தில் முழுக்குடும்பச் சுமையையும் தாமே தமது தலையில் ஏற்றிக் கொண்டு 'இரட்டை மாடுகள் பூட்டிய வாழ்க்கை எனும் வண்டியை ஒற்றை மாடாக நின்று இழுத்துச் செல்லும் நிலையை' அனுபவித்துக் கொண்டிருக்கின்றனர்.


சமூகத்தில் இத்தகைய பெண்களைப் பரிவிரக்கத்துடன் (*Sympathy* - ஒருவருக்காக இரங்குதல்) பார்க்கும் நிலைமைதான் இன்னமும் உள்ளது. உண்மையில் இத்தகைய பெண்களை உணர்வு ஒன்றிப்பு நிலையில் (*Empathy* - ஒருவரின் உணர்வுநிலை ரீதியான புரிந்துணர்வு அதே உணர்வில் நின்று அந்நபரைப் புரிந்து கொள்ளுதல்) நின்று நோக்க வேண்டும். இப்பெண்கள் சந்தர்ப்ப சூழ்நிலையினாலும் வேறு சில அரசியல் சமூகக் காரணிகளினாலும் தனித்து வாழவும் குடும்பப் பாரங்களைச் சுமக்கவும் தலைப்பட்டுள்ளார்கள் தள்ளப்பட்டுள்ளார்கள் என்பதைப் புரிந்து கொள்ள வேண்டுமே தவிர, இது இவர்களின் தலைவிதி, கர்ம பலன் என்று சிந்தித்தல் தவறானதாகும்.

தற்போது பெண்களுக்கான வாழ்வாதாரத்தை மேம்படுத்துவதற்காகப் பல திட்டங்கள் ஒவ்வொரு மாகாண சபையின் சமூக சேவைகள் திணைக்களத்தின் ஊடாகவும், பெண்கள் விவகார அமைச்சின் ஊடாகவும் அரசாங்கத்தினால் முன்னெடுக்கப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளன. குறிப்பாகப் பெண்கள் தலைமை தாங்கும் குடும்பங்களிற்கு வேண்டிய வாழ்வாதார உதவிகளை மேற்கொண்டு வருவது பாராட்டத்தக்க விடயமாயினும், இப்பெண்கள் எதிர்நோக்கும் ஏனைய சமூகக் கலாசார விடயங்கள் தொடர்பாக இவ்வமைப்புக்கள் போதியளவு கவனம் செலுத்தவில்லை என்பது இற்றைவரை உள்ள யதார்த்த நிலைப்பாடாகும்.

✦ ✦ ✦ ✦


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அவள்



நீ கொலையுண்ட நாட்களின் பின்னாளில்
நான் உணர்ந்தேன்
மனதால் நீ கொலையுண்டு
காலங்கள் பலவாகின எனும் சேதி

சிரித்தும் கதைத்தும் நீ கடந்து போன
முகத்தின் பின்னே
வலிக்கின்ற உன் முகம்
காணாது நான் போனேனே!
நாயை அடிப்பதுவாய்
ஒரு புழுவை நசிப்பதுவாய்
உனைக் குதறிப் போடுகையில்
பேதைப் பெண்ணே
நாளும் எதை எண்ணி உயிர் பிடித்தாய்

அதிகாரம் அதிகாரம் அதிகாரம்
கோழை மனத்திடை விஞ்சிய
அச்சத்தின் பிம்பம் உன்னை
குருதிக்குள் துவைக்கையில்
பிஞ்சுகள் வாழ்வு எண்ணியே
நெருப்பிடை நின்றாயோ
அடிப்பவன் எவனோ அவன்
கரங்களை அறுத்திட வரம் வேண்டும்
துணை போகும் தலை விழுந்திட வரம் வேண்டும்
எதிர்த்து நிற்கவும் திருப்பித் தாக்கவும்
நிலை கொண்டு வலிமை பெறவும்
வாய்த்திடும் நாள் வர வேண்டும்

வீட்டிற்குள் அழந்திடும் பொம்மைகளே!
உயிர் கொண்டு வெளியே வந்திடுக
வாழ்வின் கணங்கள் உமக்காக
சிலிர்ப்புடன் நிற்கும்: துணிக

அள்ளிச் சோறு தந்து அகமகிழ்ந்து
படுக்கையுடன் அத்தனையும்
பகிர்ந்து உனை ஆதரிக்க
திட்டமுடன் வக்கிரங்கள்
நீ விதைத்தாய்: கேவலந்தான்

அற்ப மானிடனே! கற்பதென்பது
வாழ்க்கை பாடமடா வாழ்க்கைப் பாடமடா
பூமி தாங்காது ஒரு பூவைச் சிதைப்பாயெனில்
அப்பெண்ணும் தாங்காள்: புரி

மாதவி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**விமர்சனம் :**

"தூக்கியெறியப்பட முடியாத கேள்வியாய்
உங்கள் முன் பிரசன்னமாயுள்ளேன்"

# பெண்



**கிருஸ்ணவேணி** கிழக்குப்பல்கலைக்கழம்

"**பெ**ண்ணைப் பிரதிபலிப்பதே 'பெண்' என்று கூறுவதே பொருத்தப்பாடுடையது!"

முறைசார் பெண் கல்வியின் தொடக்கத் தோடு பெண்கள் எழுத்துத் துறையில் அதீதமாக ஈடுபட்டனர். அதேசமயம் பெண்கள் அமைப்புக்கள் அல்லது நிறுவனங்கள் உருவாகியமை பெண்களின் எழுத்துலகத் தூண்டுகோலுக்குக் காரணமாகி, அடித்தளமிட்டு, பெரும்பங்காற்றி வந்துள்ளனளூ வருகின்றன. ஈழத்தில் பெண்கள் கல்வி ஆய்வு வட்டம், பெண்கள் சேவா சங்கம், யாழ்ப்பாண மகளிர் அபிவிருத்தி நிலையம், சூரியா பெண்கள் அபிவிருத்தி நிலையம் போன்றன சுட்டிக் காட்டத் தக்கன. இத்தகு அமைப்புக்களின் பெரும்பணியாக, பங்காக அமைவது சஞ்சிகை வெளியீடாகும்.

ஈழத்தில் பெண்கள் சேவா சங்கம் என்ற அமைப்பினால் 1923இல் வெளியிடப்பட்ட "தமிழ் மகள்" எனும் சஞ்சிகையே முதல் பெண் சஞ்சிகை யாகக் கொள்ளப்படுகின்றது. அத்தோடு "மாதர் மதி மாலிகை", "பெண்ணின் குரல்", "நிவேதினி", "நங்கை" போன்ற சஞ்சிகைகளும் தோன்றியும்ளூ இடைநின்றும் வளர்ந்தும் வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

இத்தகு "பெண்கள் இலக்கிய"ப் பாரம்பரியத்தில் ஈழத்திற்கு பெரும்பங்குண்டு. தமிழ் நாட்டில் பெண்கள் சார்பில் ஆரம்பத்தில் வெளிவந்த சஞ்சிகைகள் பாரம்பரியச் சிந்தனை களை வெளிப்படுத்துவனவாகவே தோற்றம் பெற்றுள்ளன. ஆனால் ஈழத்து பெண்கள்சார்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலக்கியங்களோ பெண்நிலை நின்று பெண்ணிலைவாத நோக்குடன் வெளிவந்தது பெண்கள் இலக்கிய வரலாற்றில் முக்கிய தனித்த இடம்பிடித்துள்ளமை கண்கூடு. மட்டுமன்றி அவ்வவ் காலகட்டங்களிற்கு ஏற்றதான பெண் நிலையினைத் தாங்கியதாகவே ஈழத்திலிருந்து பெண் சஞ்சிகைகள் வெளியிடப்பட்டு வருகின்றன என்பதும் குறிப்பிடத்தக்கது.

"சூரியா பெண்கள் அபிவிருத்தி நிலை"யத்தினால் 1996 முதல் வெளியிடப்பட்டு வருகின்ற "பெண்" தனித்துக் கவனிக்கப்பட வேண்டியளவிற்கு முக்கியத்துவம் பெற்று காத்திரமான படைப்புக்களை உள்ளடக்கி நிலைத்து நின்று இற்றைவரை தொடர்ச்சியாக வெளியிடப்பட்டு வருகின்றமை ஈழத்து பெண் சஞ்சிகை வரலாற்றிற்குக் கணிசமான பங்களிப்புச் செய்வதனை எடுத்துக்காட்டி, தனித்துக் கவனிக்கப்படவேண்டியதன் அவசியத்தையும் வலியுறுத்தி நிற்கின்றது.

"பெண்"ணின் நோக்கம், "பொதுவாக சமூகத்தில் பால்நிலை வேறுபாடுகள் கருத்தியல் ரீதியாகவும் செயற்பாடுகளுடாகவும் இறுக்கப் பட்டுள்ள காரணத்தால், அதாவது அரசு, மதம், கல்வி, சட்டம், இலக்கியம், தொடர்பு ஊடகங்கள் போன்ற நிறுவனங்களுடாக திட்டமிடப்பட்டு கட்டமைக்கப்பட்டுள்ள காரணத்தால் அநேகர் இதில் மாற்றங்களைப் பற்றிச் சிந்திக்கவே அச்சப்படுகின்றனர். இதுவே, பெண்நிலைவாதிகள் மீது பலரும் கொண்டுள்ள அச்சத்திற்கான காரண மாகும். இத்தகைய அச்சங்களைத் தவிர்க்கவும் சமூகங்களில் பெண்களின் ஆளுமைகளை வெளிப் படுத்தவுமான பல்வேறு திட்டங்களுள் ஒன்றாகவே நாங்கள் பெண் சஞ்சிகையை வெளியிடுகின்றோம்". (யோகராசா.செ,2003:28) என்பதாக அமைந்துள்ளது என செ.யோகராசா குறிப்பிட்டிருப்பதும் "பெண்களை எழுத்துத் தளத்திற்குக் கொண்டு வருவதும் பெண் எழுத்தாளர்களை ஊக்குவிப்பதும் பெண் எழுத்தாளர் பாரம்பரியத்தை உருவாக்குவதும் எமது நோக்கமாக அமைகின்றது". (நுதிரா மரியசந்தனம்,1999) என பெண் ஆசிரியர் குறிப்பிட்டிருப்பதும் பெண் இதழின் நோக்கத்தினைத் தெளிவாக்குகின்றது. நோக்கத்தினடிப்படையில் இற்றைவரை "பெண்" தலை நிமிர்ந்து நடை போடுவது முக்கியமானதே!

"தூக்கியெறியப்பட முடியாத கேள்வியாய்
உங்கள் முன் பிரசன்னமாயுள்ளேன்"

எனும் சிவரமணியின் கவிதை வாசகங்களை பெண் இதழ் ஒவ்வொன்றின் முன் அட்டையும் ஏந்தியுள்ளமை, பெண்களின் ஒதுக்கப்பட முடியாத கட்டாய தேவையினைப் புலப்படுத்தி நிற்கின்றது. இவ்வாறு முன் அட்டை தொடக்கம் இறுதிப்பக்கம் வரையான ஒவ்வொரு அம்சங்களும் பெண்ணின் தனித்துவத்தினைக் காட்டுவதாகவே அமையப் பெற்றுள்ளது.

பெண்ணின் ஒவ்வொரு இதழும் ஒவ்வொரு கருப்பொருள்/ சிறப்புப் பொருள் என்ற அடிப் படையில் தனது நோக்கினை நிறைவேற்றக் கூடியதாக வெளிவந்துள்ளனஞூ வெளிவந்து கொண்டிருக்கின்றன. இதனை, "இதுவரை நிலைநிறுத்தப்பட்டுள்ள எண்ணக்கருக்கள் பற்றிய விவாதங்களில் ஈடுபடுவதை 'பெண்' தனது முக்கிய நோக்கங்களுள் ஒன்றாகக் கருதுகிறாள். அவ்வகையிலே கடந்த இதழ்களில் உழைப்பு, இலக்கியம், கல்வி, வன்முறை, கலை ஆகியவை பற்றி பெண்நிலைப் பார்வையினூடாக புதிய வரைவிலக்கணங்களை அறிமுகப்படுத்தினோம். இந்த இதழில் "அரசியல்" என்ற எண்ணக்கருவையும், அது தொடர்பான கோட்பாடுகளையும் மீள்பரிசீலனை செய்யும் கட்டுரை ஒன்றை வெளியிடுகிறோம். பெண்களின் அரசியற் பங்களிப்பு பற்றி பலரும் பேசத்தலைப்பட்டுவிட்ட இக்காலத்தில் அரசியல் என்றால் என்ன என்பது பற்றிய பெண்நிலைப் புரிதலை வாசகர் முன் வைக்க நாம் விரும்புகிறோம்" (சித்ரலேகா மௌனகுரு,2001) என்ற ஆசிரியர் குறிப்பும் "இந்த இதழின் சிறப்புப் பொருளாக 'பெண்களை மீளமையப்படுத்தும் முயற்சியும் பெண்கள் இயக்கமும்' அமைகின்றது. இக்கருத் தினை முன்வைக்கும் நோக்குடனேயே அட்டைப்படம் அமைக்கப்பட்டுள்ளது. கட்டுரைகளும் ஏனைய விடயங்களும் இப்பொருளைச் சார்ந்தே தேர்ந்தெடுக் கப்பட்டுள்ளன". (சுல்பிகா,1999) என்னும் ஆசிரியர் குறிப்பும் நிறுவுகின்றன.

உள்ளடக்க ரீதியிலும் பெண்ணின் தனித் துவம் வெளிப்பட்டு நிற்கின்றது. பெண் சஞ்சிகை ஆய்வுகளையும் ஆக்க இலக்கியப் படைப்புக் களையும் தாங்கியுள்ளது. பெண்களுக்கெதிரான வன்முறைகள், பெண்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் மற்றும் சவால்கள் போன்றன தொடர்பாகப் பல ஆய்வுக் கட்டுரைகள் இடம்பெற்று வருகின்றன. இவை புள்ளி விபரங்கள் மற்றும் தகவல்கள் மூலம் உறுதியான கருத்தினை, முடிவினைத் தெரிவிப்பனவாகவும் பெண்களை விழிப்பூட்டுவதாகவும் அமைந்துள்ளமை சிறப்பிற் குரியதாகும்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



ஆய்வுகளை மாத்திரமன்றி ஆக்க இலக்கியப் படைப்புக்களையும் தன்னுள் அடக்கியுள்ளது. சிறுகதை, கவிதை, நாடகம், வில்லுப்பாட்டு, துணுக்குகள் போன்ற இலக்கிய வகைகள் பெண்களின் வறுமை, ஒடுக்குமுறை, அடிமைத்தனம், ஏமாற்றம், தலைமைத்துவம், கலாசார நிலை, குடும்பச் சுமை, யுத்த காலச் சூழலில் பெண்களின் நிலை போன்றவற்றை கருப்பொருளாக்கி இச்சஞ்சிகையை அலங்கரித்து நிற்கின்றன. இச்சஞ்சிகை உட்கொண்டுள்ள படைப்புக்களின் அடிப்படையில் இலக்கிய கண் கொண்டு நோக்கும் போது "இலக்கியத்தரம்" மிக்கதான இதழ்கள் ஏராளமாக வெளியிடப்பட்டுள்ளன என்று ஆணித்தரமாகக் கூறமுடியும்.

பெண் எழுத்தாளர்கள் பற்றிய அறிமுகம், அவர்களுடனான உரையாடல்கள், அனுபவங்கள், பேட்டிகள், அவர்களது இலக்கியப் படைப்புக்கள் போன்றன இடம்பிடிப்பதும் புதிய, இளைய பெண் எழுத்தாளர்களுக்குக் களமமைத்துக் கொடுக்கும் வகையில் அவர்களின் படைப்புக்கள் உள்வாங்கப்படுவதும் பொதுவாக பெண்களின் கருத்திற்குக் களமாக இன்றுவரையும் இடைவிடாது இடம்கொடுப்பதும் "பெண்"ணே!

"பெண்களை எழுத்துத் தளத்திற்குக் கொண்டு வருவதும் பெண் எழுத்தாளர்களை ஊக்குவிப்பதும் பெண் எழுத்தாளர் பாரம்பரியத்தை உருவாக்குவதும் எமது நோக்கமாக அமைகிறது. இந்தவகையில் 'பெண்'ணினூடாக புதிய எழுத்தாளர்கள் பலர் இனங்காணப்பட்டுள்ளமை எமது வெற்றியே" (நதிரா மரியசந்தனம்,1999) என்ற ஆசிரியர் கூற்று மேற்கூறிய பெண் பற்றிய கூற்றின் வெற்றி நிலையைத் தெளிவாக்குகின்றது.

ஆரம்பகால பெண் எழுத்தாளர்கள் இனங்காணப்படவில்லை: இனங்காணப்படக்கூடிய சந்தர்ப்பங்களும் கிட்டவில்லை: இனங்காண்பதும் கடினம். இதனை இன்று நிவர்த்திக்கின்றது "பெண்." ஒட்டுமொத்த நோக்கில் ஈழத்துப் பெண் சஞ்சிகை வரலாற்றில், ஆரம்பித்த காலந்தொட்டு இற்றைவரை தொடர்ச்சியாக வெளியிடப்பட்டு தனக்கென்றோர் இருப்பிடத்தைத் தக்கவைத்துக் கொண்டுள்ளது "பெண்". புதுமுக எழுத்தாளர்களுக்கும் குறிப்பாக புதுமுக பெண் எழுத்தாளர்களுக்கும் களம் அமைத்துக் கொடுத்து அவர்களை இனங்காட்டியுள்ளது "பெண்". பெண்ணின் நோக்கம் பல்வேறு வடிவங்களில் கூறப்படினும் "எல்லாக் கோணங்களிலும் பெண்ணின் முன்னேற்றம்" எனும் எண்ணக்கருவில் செயற்படுவது "பெண்" எனக் கூறலாம். மேலும் இலக்கியத்தரம் வாய்ந்த மிகச் சிறந்த படைப்புக்கள் இச்சஞ்சிகைகளில் இடம்பிடித்துள்ளதனால் வெளியிடப்பட்டுள்ள சஞ்சிகைகளை ஒட்டுமொத்தத் தொகுப்பாகவோ அல்லது சிறந்த படைப்புக்களின் வகைகளின் அடிப்படையில் தொகுப்புக்களாகவோ வெளியிட்டால் இலக்கிய உலகில் பயனள்ளதாக அமைவதோடு சஞ்சிகை வரலாற்றிலும் பெண் சஞ்சிகை வரலாற்றிலும் ஈழத்திலக்கிய வரலாற்றிலும் முக்கிய இடம்பிடித்து அதன் தனித்துவத்தினை மேலும் உலகளாவிய ரீதியில் வெளிக்கொணரும் எனக் கூறலாம்.

✦ ✦ ✦ ✦


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வருடாந்த சந்தா – பெண்

ஐரோப்பா, வட அமெரிக்கா,
அவுஸ்திரேலியா
**US$ - 8**
இந்தியா
ரூபா 500.00
இலங்கை
ரூபா 200.00

**சந்தா விண்ணப்பம் 20................**

**பெண் சஞ்சிகைக்கு சந்தா அனுப்பியுள்ளேன்.**

| | | |
|---|---|---|
| பெயர் | : | ............................................................ |
| விலாசம் | : | ............................................................ |
| திகதி | : | ............................................................ |

இத்துடன் காசோலை / மணி ஓடர் சூரியா பெண்கள் அபிவிருத்தி நிலையத்தின் பேரில் அனுப்பி வைக்கிறேன்.

**சூரியா பெண்கள் அபிவிருத்தி நிலையம்**
இல. 55, லேடி மனிங் டிறைவ்,
மட்டக்களப்பு,
இலங்கை.

**Suriya Women's Development Centre,**
No:55, Lady Manning Drive,
Batticaloa,
Sri Lanka.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ISSN : 1391-6122

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org